www.padippakam.com

நன்றி - நூலகத்திட்ட

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 9/00

ජූ.17-23,1994

දිනමුරසු වාරමලර්

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 59



## தமிழ் அரசியல் கட்சிகள் மீண்டும் ஏமாற நினைப்பது ஏன்?


அரசியல் அலசல்

## தேர்தல் திருவிழாவில் வெற்றி மாலை யாருக்கு?

எக்ஸ்ரே ரிப்போர்ட்







சினிவிசிட்

கை வேலைப் பகுதி

MGR இன் மறுபக்கம்

தேர்தல் நிலவரங்கள் முரசின் கணிப்புக்கள்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## போதுமென்ற மனமே....

மண்ணில் வாழும் மனிதர் மனதில்தான் எத்தனையெத்தனை ஆசைகள். அளவுக்கதிகமான ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள ஓய்வின்றி வேலைகள்; பக்கத்து வீட்டுக்காரர் ஒரு பொருளை வாங்கினால் தானும் வாங்கிட வேண்டும், மற்றவனைவிட பெரிய வீட்டை கட்டிட வேண்டும், ஏனையவர்களைவிட உயர் நிலையில் வாழவேண்டும். இந்த ஆசைகளின் முடிவு என்ன?

(1 தீமோத்தேயு 6:10) இதனை அழகாக சித்தரிக்கிறது. "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்." உண்மைதான் கிடைக்கின்ற வருமானம் தமது ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாதபோது குடும்பத்திலே பிரச்சனைகள். பணப் பிரச்சனையினை தீர்த்துக்கொள்ள குறுக்கு வழிகளை நாட வேண்டிய சூழ்நிலை... இப்படியாக பலவித வேதனைகளால் எமது கண்களையே குத்திக்கொண்டிருக்கும் நிலை.

இதற்கு என்ன செய்யலாம் என்பதனையும் வேதம் தெளிவாக கூறுகிறது. (1 தீமோத்தேயு 6: 6,7) "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததும் இல்லை. கொண்டு போவதும் இல்லை என்பது நிச்சயம்."

இதைத்தான் போலும் எம் முன்னோர்கள் "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்று கூறியுள்ளனர். நாமும் அளவுக்கதிகமான ஆசைகளை அழித்துவிட்டு போதும் என்ற மனதுடன் வாழ்ந்திட இறைவனின் துணையை நாடவேண்டும். எமது ஆசைகள் எமது கண்களையே குத்துகிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. "நீயோ தேவனுடைய மனுஷனே- இவைகளை விட்டோடி தேவ பக்தியையும் விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சற்குணத்தையும் அடையும்படி நாடு" என்று (1 தீமோத்தேயு 6:11ல்) கூறியுள்ளது போல் வாழக் கற்றுக்கொள்ளுவோம்.

ஜே.புளோரன்ஸ்-கெங்கல்ல.

## ஆன்மீகம்



## சிந்தனைக்கு சில நபிமொழிகள்

நீங்கள் அல்லாஹ்வின்மீது உறுதியான பூரண நம்பிக்கை கொண்டிருந்தால் பறவைகளுக்கு அவன் உணவளிப்பதுபோன்று உங்களுக்கும் உணவளிப்பான். அவை அதிகாலையில் பசியுடன் வெளியில் செல்கின்றன. மாலையில் வயிறு நிரம்பிய நிலையில் தம் இருப்பிடம் திரும்புகின்றன.

(ஆதாரம்-திர்மதி)

(இவ்வுலகில் வாழும்) மனிதனுக்கு பணத்தின்மீது பேராசை மிகுந்திருக்கிறது. (அவன் விரும்பியபடி) இரு ஓடைகள் நிறைய பொருள் கிடைத்தாலும் (அத்துடன் திருப்தியடையாமல்) மூன்றாவதையும் ஆசை வைக்கின்றான். ஆகையால் மனிதனின் வயிற்றை (புதைகுழியின்) மண் அன்றி வேறு எதுவும் நிரப்ப இயலாது.

(ஆதாரம்-புகாரி)

கடைசிக்காலத்தில் கபடர்களும்-பொய்யர்களும் தோன்றி நீங்களும் உங்கள் பிதாக்களும் கேட்டிராத சமாச்சாரங்களைக் கூறுவார்கள். (அவ்வமயம்) உங்களை (நீங்களே) தற்காத்துக்கொள்ளுங்கள். அவர்களைவிட்டு விலகி இருங்கள். அப்போது அவர்களால் உங்களைக் கெடுக்கவோ வீண் குழப்பத்தில் ஆக்கவோ முடியாது.

(ஆதாரம்-முஸ்லிம்)

எம்.எச்.எம்.ஹாரித்.-திஹாரிய.

## முரசம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
தேர்தல் திருவிழா
அமோகமாக களைகட்டியிருக்கிறது.
எங்கு திரும்பினும்
தேர்தல் கோசங்கள்.

வாக்காளர்களுக்கெல்லாம்
பல்வேறு கட்சிகளிடமிருந்தும்
பல ரக, வாக்குறுதிகள்!

ஆரவாரம்தான். ஆர்ப்பரிப்புக்கள்தான்.
பொய்கள் அதிகமாக உலவும் இடம்
பொதுத் தேர்தல் மேடைகள்தானோ?
என்று நினைப்பதில் தவறில்லைத்தான்!

முரசைப் பொறுத்தவரை,
உள்ளவர்களில் நல்லவர்கள் யார்?
பாராளுமன்றம் செல்ல
தகுதியுள்ளவர்கள் யார்
என்று பார்த்தே திருவாளர் பொதுஜனம்
தம் தீர்ப்பினை
வழங்குவது சிறந்தது என்று கருதுகிறது.

இங்கே-ஒருவரை ஒருவர்
திட்டிக்கொள்வோர் அனைவருமே
ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள்.
தங்கள் முதுகில் இருப்பதை
தாம் அறியாமல்
எதிர்தரப்புமீது எச்சில் துப்புவார்கள்
எண்ணிக்கைதான் ஏறி வருகிறது.

இவ்வாறான நிலையில்
தாம் பட்ட துன்ப துயரங்களில்
தம்மோடு நின்றவர்கள் யார் என்று
துன்பம் சுமந்த மக்களுக்கு தெரியும்.
அப்படியானவர்களை ஆதரிக்கலாம்.

பதவி சுகத்தால் தம் குடும்ப தரத்தை
உயர்த்துவதை மட்டுமே
உயர்ந்த இலட்சியமாக நினைத்தவர்களை
ஊரவர்-அறிந்தவர் என்று பாராமல்
ஒதுக்கித் தள்ளலாம்.

முரசைப் பொறுத்தவரை
இந்தத் தேர்தல் திருவிழாவில்
எந்தவொரு கட்சியையும்
ஏற்றிப்போற்றும் வேலையைச் செய்யாது.

முரசில் வெளிவரும் கருத்துக்கள்
ஆதார வெளிச்சத்தில்
ஆரோக்கியமான விமர்சனங்களை
வெளியிடுவதாகவே அமையும்.

முரசின் ஊழியர்கள்,
முரசின் ஆசிரியர்,
முரசோடு தொடர்புடையவர்களுக்கு
தனித்த அரசியல் கருத்துக்கள்
அல்லது-ஏதாவது ஒரு
அரசியல் கட்சிமீது ஈடுபாடு
இருக்கலாம்- இல்லாமலும் போகலாம்.

ஆனால்-முரசின் அரசியல்
விமர்சனங்களில்
அவை பிரதிபலிக்க
முரசு ஒருபோதும் களமாகாது.
சார்புகள் இன்றி
சரியான கருத்தை
சொல்லுகின்ற பத்திரிகையாக
முரசு- தன் தனித்துவம் காக்கும்.
ஆசிரியர் என்ற வகையில்
எனக்கு உடன்பாடில்லாத
கருத்துக்கள்கூட முரசில்
களம் பெற்று வருகின்றன.

அப்படியிருக்க முரசில் வரும்
அரசியல் விமர்சனங்களால்
துள்ளுவோரை நினைத்தால் சிரிப்பு வருகிறது.
ஜனநாயகம்- வெளிப்படைத்தன்மை என்பவை
அப்படியானவர்களுக்கு
வெகுதூரம் என்று தெரிகிறது.

முரசின்-கொள்கை
என்றும்-எப்போதும்-
'ஆயிரம் பூக்கள் மலரட்டும்,
ஆயிரம் கருத்துக்கள்
முட்டி மோதட்டும்,
தகுந்ததொரு கருத்தை
தகுதியுள்ள மக்கள்
தேர்ந்தெடுக்கட்டும்' என்பதுதான்.

எனவே-நிருபர்கள் மட்டுமன்றி
அன்பு வாசக நெஞ்சங்களும்
தேர்தல்கால திருகுதாளங்களை
துணிச்சலோடும்-ஆதாரத்தோடும்
எழுதி அனுப்புங்கள்.
முரசு களம் தரும்.

■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

## கவிதைப்போட்டி இல-56

விதைக்கப்பட்டவற்றில் வியக்கப்பட்டவையும்-
வெற்றி முகம் கண்டதுவும்

### பரிசுக்குரிய கவிதை

**பிரகடனம்**

மானிட நேசம்
மறைந்துபோக,
பிணம் தின்னி
கழுகுகளின்
பிரதேச பிரகடனம்.

ச.தஜானி
ஆரையம்பதி-3.

### வியக்கப்பட்டவை

"மனித உயிர் மலிவானால்
விதியும் வீதிக்கு வந்திடும்"

பா.மஜுரன்-தெமட்டக்கொட.

**நிகழ்வு**

ஈரமில்லா
இதயங்களின்
யுத்த தேசத்தில்
புதிய
கசாப்புக்கடை.

பூ.இதயரெத்தினம்
ஆரையம்பதி-03.

**இரசிகனின் வாக்கு!**

ரசிகனே!
உன் கொலை விழும்
நேரம்.
அகில உலகெங்கும்
இன்று,
அதே ஓலம்!

எம்.வேல்முருகன்
பலாங்கொடை.

**புதிய தீர்வு**

ஜனநாயகத்தின்
மறுபக்கத்தில்
மலர்ந்த புதிய
தீர்வுகளா இது?

எஸ்.கலாதாசன்
நானுஓயா.

**மரணம்+மானுட நேயம்**

மானுட நேயம், அது
மரணத்தின் விளிம்பில்.
ஆயுதங்கள் தாம் இதயமற்றவை
இந்த
மனிதர்களுமா?

ஷர்மி-கண்டி.

மரியாதை
இல்லாதது;
மலிவானது;
மனித உயிர்.

செல்வி.ஸ்ரீபதி ஆனந்தி
கொழும்பு-9.

**நிலமை**

கத்திகள், இங்கே
பதம் பார்க்கப்படும்.

எஸ்.குமார்-கொழும்பு.

**கத்தரிக்காதீர்**

கறுப்பின மக்களே!
காந்தியின் மைந்தன்
மண்டேலா தேடிய
மாபெரும் வெற்றியை
கத்திமுனை கொண்டு
கத்தரித்து விடாதீர்கள்.

க.பூர்ணிமா-தெஹிவளை.

**அன்றாடம்**

அகிலத்திற்கோ
இது
அநியாயம்!
அக்கிரமம்!
அராஜகம்!
எங்களுக்கோ
தேசிய விளையாட்டு.

த.தயாபரன்
ஆரையம்பதி-3.

"புதிய முறையில்
அரங்கேறும்
மரணதண்டனை."

த.ஜெயாஞ்சலி
தம்பிலுவில்-2.

**அரங்கேற்றம்**

அதிகாரமும், ஆயுதமும்,
அங்கீகாரமும்
கிடைத்துவிட்டால்
அராஜகம் அம்பலத்தில்தான்
அரங்கேறுமோ....?

வை.சித்திக் கிருஷ்ணா
பாண்டிருப்பு-1.

**வெளிப்பாடு!**

நடை பாதைச் சாவுகளும்,
நாதியில்லாப் பிணங்களும்,
அகால மரணங்களும்,
ஆட்சியதன் வெளிப்பாடு.

திருமதி.யோகா-யோகேந்திரன்
திருக்கோவில்.



தென்னாபிரிக்கா
இனவெறியை
இந்த பிணத்தோடுதான்
சேர்த்து எரித்தார்களோ?

ஆர்.நிர்மலா
பளாங்கொடை.

**இன்றைய காவியம்**

வேறொன்றுமில்லை....!
'சமாதானம்' எனும்
காவியத்தில்-
விடியலுக்காய்
விரைந்தவர்கள்-செய்யும்
மனித-வதைபடல(க்)
காட்சி-இது.

ஆர்.சாந்தசீலன்
மட்டக்களப்பு.

**தப்பு இல்லை!**

கை கட்டி; வாய்பொத்தும் கூட்டம்
வையத்தில் வாயிழித்து நிற்கும்வரை-உடல்
கொய்யும் கொலை வெறியர் ஆட்டம்
ஓங்குவதில் ஏது தப்பு?

ஜி.ஸ்ரீநேசன்-மட்டக்களப்பு.

தலை வணங்கா
அமர்
இதில் தலை இழப்பார்
பலர்

என்.ஏ.புவனேஸ்வரி-பசறை த.ம.வி.

## கவிதைப் போட்டி இல-59



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 23.07.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 59
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772, கொழும்பு.

## வாசகர்சாலை

அரசியல் வானில் உலாவும் என் இனிய தேன் முரசே, நீ அள்ளித்தரும் அரசியல் கண்ணோட்டங்கள் சிறப்பிலும் சிறப்பு. வெள்ளி வானில் உலாவரும் நீ தினம் தித்திக்கும் சுவை தரும் தினமுரசே, நீ மேலும் சிறப்புற எனது இனிய வாழ்த்துக்கள் பற்பல உரித்தாகட்டும்.

ஆ.சிவகுமாரன்-கம்பளை.

□□

அன்பின் முரசே!

அனுபவ உண்மைகளை அலசி, ஆக்க பூர்வமான கருத்துக்களை அள்ளி வழங்குவதில் இராஜதந்திரிக்கு நிகர் அவரேதான். அதிரவைக்கும் அய்யாத்துரையாருடன் ரசிகனின் கொலைவிழும் நேரம் திக்...திக் அற்புதமான கருத்துக்களை அள்ளி வழங்கிய அற்புதனிற்கு வாழ்த்துக்கள் பல.

து.சர்மிளாதேவி-கலஹா.

□□

தித்திக்கும் தினமுரசே!

அரசியல் அலசல்-எக்ஸ்ரே ரிப்போர்ட் இவ்விரண்டும் சூடும், காரமும் நிறைந்தது. லேடீஸ் ஸ்பெசல் தித்திக்கும் அல்வா, சினி விசிட், இலக்கிய நயம், சிறு கதைகள் எல்லாமே...ஸ்வீட். சூடு, காரம், சுவாரசியம், இனிமை இத்தனை சுவைகளதும் கலவை ரசிகனின் கொலைவிழும் நேரம். மொத்தத்தில் வாரம் ஒரு முறை அறுசுவை விருந்தளித்து எம்மை திக்குமுக்காடச் செய்யும் தினமுரசே! நீ வாழ்க! வாழ்க!

திருமதி.எஸ்.தாஜுன்நிஸா றஹ்மான்
பிலியந்தலை.

□□

பக்தி, அன்பு, வீரம், ஒழுக்கம் இவை யாவற்றையும் கொண்ட புராணக் காவியமான மகாபாரத நாடகத்தின் ஒவ்வொரு வசனங்களையும் அழகாகத் தந்து நாடகத்தை பார்த்துவிட்ட திருப்தியைத் தரும் தினமுரசுக்கு பல நேயர்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சபாபதி அருந்ததி-நோர்வூட்.

□□

ஆசிரியர் அவர்களுக்கு! தாங்கள் ஜூலை 03-09.94 தினமுரசு இதழில் கடைசி பக்கத்தில் சோமாலியாவின் குழந்தைகள் படத்தை போட்டுவிட்டு "இங்கும் அதுதான். சோமாலியாவிலும் அப்படித்தான்" என்று முடித்துள்ளீர்கள். சோமாலியாவின் படத்தை போட்டது போல் ஏன் நமது நாட்டின் போர் சூழ்நிலையில் குழந்தைகளின் படத்தை போடக் கூடாது?

த.செல்லையா-பொற்ளை.

□□

அன்பின் முரசே,

வாரம்தோறும் பலவிதமான செய்திகளை அள்ளித்தரும் உன்னை ஒருவாரம் தவறவிட்டுவிட்டேன், என்றாலும் பதில் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற அரை நம்பிக்கையோடு ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதிப்போட்டேன். ஐந்து நாள் பொறுத்திருந்தேன். கிடைக்கவில்லை. நம்பிக்கையை கைவிட்டு விட்டேன்.

என்ன ஆச்சரியம். ஆறாவது நாள் தபால்மூலம் என் கைக்குப் பத்திரிகை கிடைத்தது. எப்படி நன்றி சொல்லுவது என்று தெரியவில்லை. அதனால் வாசக(ர்)சாலைக்கே இதை அனுப்பி எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்மலர் பிலிப்ஸ்-கல்கிசை.

□□



அன்பார்ந்த தினமுரசுக்கு நன்றி
தினமுரசு நூறாண்டுகாலம் வாழ்க.

லேடீஸ் ஸ்பெசலில் பூ செய்கின்ற குறிப்பு, தையல் வேலைகள், பின்னல் வேலைகள் சிகை அலங்காரங்கள், உடையலங்காரம் இவை நிரந்தரமாக வாரந்தோறும் தினமுரசில் எதிர் பார்க்கின்றோம்.

திவ்வியா-கொழும்பு-10.

தினமுரசே! நீ வாழ்க
சிறு கதையும் சித்திரமும்
தினம் பெருகி வரும் புதுக் கவிதை
உருக்க மாகத் தந்துதவும் என்
நெருக்கமான தினமுரசே நீ வாழ்க!

எச்.எம்.எஸ்.றபீக்கா
காத்தான்குடி-02.

□□

தேனிலும் இனிய தினமுரசே,

தித்திக்கும் செந்தமிழில் தரும் உன் செய்திகளும், கதைகளும், கொலை விழும் நேரமும், இலக்கிய நயமும் என்மனதைக் கவர்ந்தவை. இதைப்போல் உன் சேவையும் என் இதயத்தில் ஆயுழ்பூராவும் ஓங்கி ஒலிக்க என் நல்வாழ்த்துக்கள்.

எஸ்.மாதவன்-உடபுசலாவ.

□□

மக்கள் அனைவரும்
இப்போது உன்னை
நேசிக்கிறார்கள்!
அதனால்தான்
நானும் உன்னை யாசிக்கிறேன்!
உந்தன் பணிகள் பற்றி
நீயுணர்ந்திருப்பதால்
இத்தனை வேகம்
போதாதம்மா!
அறிவுகள் தாங்கி,
உணர்வுகள் ஊட்டி,
பாதையைக் காட்டி,
பயணப்பட நீ
முனைந்திட வேண்டும்.

இர்ஹாத் ஸுஹைல்-பேருவளை.

□□

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பௌத்த மதகுருமார்கள் போர்க் கோலம்

## “சிறுபான்மை கட்சிகளோடு உடன்பாடு வேண்டாம்”

## ஜனாதிபதியிடம்-சிறிமாவிடம் கோரிக்கை

தேர்தலில் வெற்றி பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதற்காக ஆளும் கட்சியோ எதிர்க்கட்சிகளோ சிறுபான்மை இயக்கங்களுடன் எத்தகைய உடன்பாட்டுக்கும் வரலாகாதென முன்னணியிலுள்ள பல புத்த குருமாரும் பல்வேறு துறை தலைவர்களும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி விஜயதுங்கா மற்றும் எதிர்க்கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்கா ஆகிய இருவருக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ள கடிதத்தில், இவ்விரு பிரதான கட்சிகளும் சிறுபான்மை அரசியல் குழுக்களின் பிரதிநிதிகளின் ஆதரவைத் திரட்டுவதற்காகச் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளினால் அவர்கள் தங்களுக்குச் சாதகமாகச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் நிலை எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சூழல் உருவாகும் என்பதில் சந்தேகமில்லை என்று அந்த மதகுருமார் கூட்டாக கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களிலும் சிறுபான்மையினரின் ஆதரவினைப் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளின் பயனாக சிங்கள சமுதாயம் பாதிக்கப்பட நேர்ந்துள்ளது என்றும் அக்கடிதம் கூறுகிறது.

அமரபுர மகா சங்க சபாவையின் தலைவர் மதிகி பன்னசீல மகாநாயக்க தேரோ, வெலிகம ஞானரத்ன நாயக தேரோ, மதுறுவெவ சோபித தேரோ, திவியங்கக யசாசி தேரோ, வெலமிட்டியாவே குசலதம்ம நாயக்க தேரோ, பெல்லன்வில விமலரத்ன நாயக்க தேரோ, மாத்தளை தம்மகுசால தேரோ, அக்குரட்டிய நந்த தேரோ மற்றும் ஒபலாபித சோபித தேரோ ஆகிய புத்த குருமார் இக்கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளனர்.

பல்வேறு தர நிறுவனங்களின் தலைவர்களும் இக்கடிதத்தில் ஒப்ப மிட்டுள்ளனர். அவர்கள் வருமாறு:

காமினி ஜெயசூரிய (தலைவர், மகாபோதி சங்கம்), டட்லி குணசேகர (அகில இலங்கை பௌத்த காங்கிரஸ்), ஒல்கொட் குணசேகர (தலைவர், தர்ம விஜய நிறுவனம்), ரி.காரியவாசம் (உலக பௌத்த பெண்கள் காங்கிரஸ்), ஜே.எச்.கருணரட்ண (சிறிலங்கா அமத்யாப சபை). இவர்களைப்போன்று மற்றும் பலர்.

இவர்கள் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சில விடயங்கள் வருமாறு:

வட-கிழக்கு தொடர்பான பிரச்சனைகளுக்கான தீர்வுகள் எதுவும் இந்நாட்டின் நீண்டகால இறைமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும் குந்தகமாக இருக்கலாகாது.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் புராதீனத் தாயகம் என்பதனை எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ளலாகாது.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்படலாகாது. இனரீதியாக இவற்றைக் கூறுபோடவும் அனுமதிக்கலாகாது.

அரசுக்குடமையான சகல நிலம் மீதான ஆதிக்கமும் நடவடிக்கைகளும் மத்திய அரசின் கீழ் மட்டுமே இருத்தல் வேண்டும் என்ற கொள்கை அமுலில் இருத்தல் வேண்டும். ■

# வன்னியில் புளொட்-யாழில் ஈ.பி.டி.பி

## நிற்க ஓரிடமில்லாத செயலாளர்!

(வவுனியா நிருபர்)

வன்னியில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுக்கிடையேதான் போட்டி நிலவுகிறது. போட்டிக்கு கட்டியம் கூறுவதுபோல் பட்டாசு சத்தங்கள் கேட்டவண்ணமுள்ளன.

நீண்டகாலமாக வன்னியில் நிலை கொண்டுள்ள 'புளொட்' பிரசார வேலைகளில் தீவிரம் காட்டுகிறது. போட்டியில் முன்னணியில்- சாதகமான நிலையில் இருக்கிறது.

சிரமதானப் பணிகளிலும் 'புளொட்' உறுப்பினர்கள் ஈடுபட்டு மக்களது அனுதாபத்தை பெறமுயல்வதையும் அவதானிக்க முடிகிறது.

சிரமதானப்பணிகளுக்கு என்றே வாகனங்களும் ஆட்களும் புளொட்டால் கொழும்பில் இருந்து கொண்டுவரப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி திருமதி புலேந்திரன் தலைமையில் போட்டியிடுகிறது. ஒரு ஆசனத்தையாவது பெற்றுக்கொள்வதே இலக்கு என்று தெரிகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அணிக்கு வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.இராஜகுகனேஸ்வரன் தலைமை தாங்குகிறார்.

இராஜகுகனேஸ்வரனுக்கு தனிப்பட்ட ரீதியிலும் செல்வாக்கு இருப்பதால் மீண்டும் தனது ஆசனத்தை கைப்பற்றும் சாத்தியம் இருக்கிறது.

திரு.இராஜகுகனேஸ்வரனின் தனிப்பட்ட செல்வாக்கை ஈ.பி.ஆர்.எல்.எஃப். அங்கீகரித்துள்ளமை அக் கட்சியின் செயலதிபர் திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன் திரு.குகனேஸ்வரனின் தலைமையில் வேட்பாளர் பட்டியலில் இரண்டாவது ஸ்தானத்தில் போட்டியிடுவது மூலம் வெளிப்பட்டுள்ளது.

முன்னாள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன் முதலில் மட்டக்களப்பிலும் போட்டியிட விரும்பினார். அங்கு அவர் போட்டியிடுவதை அவரது கட்சியினரே விரும்பவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மத்தியகுழு உறுப்பினர் நிவாஸ் என்பவர் சுரேஸ் மட்டக்களப்பில் போட்டியிட்டால் தோல்வி உறுதி என்று பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்ததையடுத்து திரு.சுரேஸ் பிரேமசந்திரன் வன்னியில் போட்டியிட முன்வந்தார்.

அப்படி போட்டியிடுவதாக இருந்தால் இராஜகுகனேஸ்வரன் தலைமையில் போட்டியிடவேண்டும். தேர்தலில் ஒரு ஆசனம் மட்டுமே கிடைத்தால் அதனை இராஜகுகனேஸ்வரனுக்கே கொடுக்க வேண்டும் என்றும், இரண்டு கிடைத்தால் மட்டுமே யோசிக்கலாம் என்றும் வன்னி மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுதியாக கூறிவிட்டதாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஈ.பி.டி.பி போட்டியிடுவதால் அங்கு ஈ.பி.டி.பிக்கு நிலமை சாதகமாக இருப்பதாக கணிப்பிட்ட திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன் வேறு வழியின்றி வன்னியில் தன் கட்சி உறுப்பினர் தலைமையில் போட்டியிட சம்மதித்தார்.

அதேவேளை யாழ்ப்பாண மாவட்ட பட்டியலில் தனது சகோதரரை முதன்மை வேட்பாளராக நியமித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் முன்னணித் தோழர்களும், நீண்டகால உறுப்பினர்களுமாக பலர் இருக்கும்போது தனது சகோதரரை முதன்மை வேட்பாளராக நியமித்திருப்பது யாழ் மாவட்ட உறுப்பினர்கள் மத்தியில் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

வன்னியில் தனக்கொரு ஆசனம் கிடைக்காமல் போய் ஒருவேளை யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனமாவது கிடைத்தால் தனது சகோதரனை இராஜினாமா செய்ய வைத்துவிட்டு, தான் அதனை எடுத்துக் கொள்ளலாம் என்பதே சுரேஸ் பிரேமச்சந்திரனின் திட்டமாக இருக்கிறது.

இயக்க உறுப்பினர்கள் கஷ்டத்திலும் துயரிலும் இருந்தபோது இயக்க பணத்தில், இயக்க செல்வாக்கோடு புதுடில்லி பல்கலைக் கழகமொன்றில் இடம்பெற்றுக் கொடுத்து தனது சகோதரரை படிக்க வைத்தவர் சுரேஸ். இப்போது அவரைப் பட்டதாரி என்று அறிமுகப்படுத்துவது, இயக்கமே மூச்சு என்று இருந்த உறுப்பினர்களை அவமானப்படுத்தும் செயல்" என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கூறுகின்றனர். "எம்மையும் படிக்க அனுமதித்திருக்கலாமே. நாமும் பட்டதாரியாகியிருப்போமே." என்று ஆதங்கப்படவும் செய்கின்றனர்.

இந்நிலையில் வன்னியிலோ யாழ்ப்பாணத்திலோ ஈ.பி.ஆர்.எல்.எஃப். தேர்தல் பணிகள் மந்த நிலையில் உள்ளன. வன்னியில் இராஜகுகனேஸ்வரனின் செல்வாக்கு ஓர் ஆசனம் கிடைக்கும் வாய்ப்பிருக்கிறது.

வன்னியில் முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தை கைப்பற்றும் என்பது தற்போதைய நிலவரம்.

வன்னியில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவோடு போட்டியிடும் சுயேச்சைக் குழுவுக்கு திரு.கேதீஸ்வரன் தலைமை தாங்குகிறார். இவர் வவுனியா முன்னாள் நகரசபைத் தலைவர். தமிழர் விடுதலைக் கூட்டணியில் முக்கிய பிரமுகராக இருந்தவர். இவரது குழுவினருக்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் தலைவர் திரு.மு.சிவசிதம்பரம் தலைமை யில் போட்டியிடுகிறது.

ஆனால் வன்னியில் தேர்தல் நடைபெறும் பகுதிகளில் கூட்டணியினருக்கு ஆதரவான வாக்குகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

77 பொதுத் தேர்தலில்கூட கூட்டணி சொற்ப வாக்கு வித்தியாசத்தில்தான் அங்கு வெற்றிபெற்றது. கூட்டணிக்கு வாக்களித்தவர்களில் பெரும்பாலானோர் வன்னியில் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருக்கிறார்கள்.

இதுபற்றி குறிப்பிட்ட கூட்டணி முக்கியஸ்தர் ஒருவர், "இங்கு நாம் போட்டியிடுவதைவிட வன்னியிலும் தேர்தல் நடத்த முடியாது என்று வழக்குத் தொடுத்திருக்கலாம்" என்கிறார். எனவே கூட்டணி வன்னி மாவட்டத்தில் பிரதான போட்டியாளர் அந்தஸ்த்தை இப்போதே இழந்துவிட்டது.

வன்னியில் வெற்றி பற்றிய தன்னம்பிக்கையோடு பேசும் புளொட் அணிக்கு அதன் தலைவர் திரு.சித்தார்த்தன் தலைமை தாங்குகிறார்.

## அஷ்ரப் அலை-மு.அமைச்சர்களை அசைக்குமா?

கிழக்கில் இம்முறை முஸ்லிம் காங்கிரசின் அலைதான் முஸ்லிம் வாக்காளர்கள் மத்தியில் வீசுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக முன்னாள் முஸ்லிம் அமைச்சர்கள் போட்டியிடுகிறார்கள். ஆனாலும் முஸ்லிம் காங்கிரஸ் அலையில் அவர்கள் தாக்குப்பிடிக்க முடியுமா என்பது சந்தேகமாகவே உள்ளது.

வெற்றிபெற முடியாவிட்டால் தேசியப் பட்டியலிலும் சிலர் குறிவைத்துள்ளதாக கூறப்படுகிறது.

முன்னாள் முஸ்லிம் அமைச்சர்கள் சிலர் பெற்றிருந்த நல் அபிப்பிராயங்களையும் தற்போதைய ஐ.தே.கட்சி தலைமையின் போக்கு சிதறடித்துவிட்டதாக அந்த அமைச்சர்களுக்கு நெருங்கிய வட்டாரங்கள் கூறுகின்றன.

எனினும் கிழக்கில் தன்னை முஸ்லிம்களது ஏக பிரதிநிதியாக நிலைப்படுத்தும் தேர்தல் முடிவுக்காக முஸ்லிம் காங்கிரஸ் போராடியேயாக வேண்டும்.

ஐ.தேசியக் கட்சிக்கும் முஸ்லிம் மக்களிடம் குறிப்பிட்டளவான செல்வாக்குள்ள பகுதிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் போட்டி கடுமையாக இருக்கப் போகிறது.

## இ.தொ.கா.கூட்டணி அரசியல் மோதல்!

## கொழும்பில் குமாருக்கு சாதகமா?

கொழும்பில் திரு.குமார் பொன்னம்பலம் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் பட்டியலில் உள்ளவர்கள் பற்றி குறிப்பிட்டளவான நல்ல அபிப்பிராயம் நிலவுகிறது.

ரெலோ அமைப்பு கனகராஜன் என்னும் ஒருவரை தலைமை வேட்பாளராக நிறுத்தியுள்ளது. இவர் யார் என்று ஒருவருக்கும் தெரியவில்லை.

நிருபர் விசாரித்தபோது அவர் பற்றி கிடைத்த தகவல்கள் ரெலோவின் பட்டியலில் உள்ளவர்களை திரு.குமார் தலைமையிலான குழுவுக்கு போட்டியாக கருதமுடியாது என்று தெரியப்படுத்துகிறது.

கனகராஜன் முன்னர் ஈ.என்.டி.எல்.எஃப் என்னும் அமைப்பில் அதன் தலைவர் ராஜனுக்கு உதவியாளராக இருந்தவர்.

அதற்கு முன்னர் கம்யுனிஸ்ட் கட்சியொன்றில் ஆதரவாளராக இருந்தவர்.

இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த காலத்தில் ராஜனது மொழி பெயர்ப்பாளராக இருந்தவர்.

ஈ.என்.டி.எல்.எஃவ். மிக மோசமான ஒரு அமைப்பாக இனம் காணப்பட்டதோடு திறீ ஸ்ரார் என்ற பெயரில் பல்வேறு கேடான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தது.

ஈ.என்.டி.எல்.எஃப்பில் இருந்தவர்கள் எவரையும் மக்கள் போராளிகள் என்றே கணக்கில் எடுப்பதில்லை.

ஈ.என்.டி.எல்.எஃப் பிரமுகர்கள் என்று பந்தாவாக திரிந்தவர்கள் பலர் நாட்டைவிட்டு ஓடினார்கள். வேறு சிலர் தமிழ் கட்சிகள் சிலவற்றுக்குள் புகுந்து தம்மை தற்பாது காத்துக்கொண்டார்கள்.

விசா வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஈ.என்.டி.எல்.எஃப். அணியினர் கொழும்பில் நடந்த தனியார் வீட்டு கொள்ளையிடல் ஒன்றில் பொலிசில் சிக்கினார்கள். அதனால் கனகராஜனை கொழும்பு பிரதிநிதியாக ராஜன் நியமித்தார்.

ஈ.என்.டி.எல்.எஃப். என்றால் மக்கள் இனி ஏற்கமாட்டார்கள் என்று தெரிந்த கனகராஜன் இயக்கத்தால் விலகி கொழும்பில் ஆட்களை காவும் ஏஜன்சி நடத்தினார்.

இப்போது தமிழ் இயக்கம் ஒன்றின் உதவியோடு தானும் ஒரு தலைமை வேட்பாளராக கொழும்பில் போட்டியிடுகிறார்.

இவரது தலைமையில் போட்டியிடுவோர் தமது கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக கடினமாக முயற்சி செய்யவேண்டியிருக்கும்.

இந்த கௌரவ நஷ்ட வேட்பாளர்கள் பற்றி திரு.குமார் தலைமையிலான வேட்பாளர்கள் கவலைப்படுவதாகவோ கணக்கில் எடுப்பதாகவோ தெரியவில்லை.

ஆனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் வாக்கு வங்கிகளை குமார் தலைமையிலான குழுவால் கைப்பற்ற முடியுமா என்பதே கேள்விக்குறியாகும்.

திரு.சிவசிதம்பரம் விடுத்த அறிக்கையில் திரு.தொண்டாவை குறைகூறியதும், அதற்கு தொண்டா சார்பாக பதில் அளிக்கப்பட்டதும் இ.தொ.கா. ஆதரவாளர்களை குமாரது குழுவுக்கு எதிராக்கிவிட்டது.

குறைந்தது 50 ஆயிரம் வாக்குகள் பெற்றால்தான் கொழும்பு மாவட்டத்தில் ஒரு பா.உறுப்பினர் தெரிவு செய்யப்பட முடியும்.

குமாரால் அந்த 50 ஆயிரம் வாக்குளை வசப்படுத்த முடிந்தால் ஆகஸ்ட் 16க்கு பின் பாராளுமன்றம் அவரை வரவேற்கும்.

## கொழும்பில் பொ.ஐ.மு. சுறுசுறுப்பு!

### ஹேமாவின் தடுமாற்றத்தால் தவறிய வாய்ப்பு!!

கொழும்பு நகரில் பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தல் பிரசார வேலைகளில் முன்னணியில் இருக்கிறது.

வாகனங்களில் கதிரை சின்னத்தோடு கூடிய பிரசுரங்கள் சகிதம் ஆதரவாளர்கள் புடைசூழ, பட்டாசு சத்தங்களோடு பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள் ஆதரவு தேடி வருகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியும் களத்தில் இறங்கியிருக்கிறது. ஆயினும் இன்னமும் அதன் பிரசாரத்தில் சூடு பிடிக்கத் தொடங்கவில்லை.

இதேவேளை திருமதி ஹேமா பிரேமதாசாவும் அவரது மகன் சஜித்தும் அடிக்கடி தம் முடிவுகளை மாற்றிக்கொண்டு தடுமாறியதால் கொழும்பில் போட்டியிட முடியவில்லை.

திருமதி ஹேமாவின் கோரிக்கைகள் சிலவற்றை ஐ.தே.கட்சி ஏற்றுக்கொண்டு அவருக்கு இடமளிக்க முன்வந்த போதும் இறுதி நேரத்தில் ஹேமா குடும்பத்தினர் தமது முடிவில் ஊசலாடினார்கள். அதனால் வேட்புமனுத்தாக்கல் செய்யும் இறுதிநாள் அன்று அவரது பெயர் ஐ.தே.கட்சி பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.

## அம்பாறையில் சேனாதிராஜாவுக்கு வாய்ப்பு?

## சுயேச்சைக்குழு வேட்பாளரின் சூத்துமாத்து!

## ஈ.பி.ஆர்.எல்.எஃப்-ஈ.பி.டி.பி. மறைமுக ஆதரவா?

தமிழர் விடுதலைக்கூட்டணியின் இளம் தலைவரான திரு.மாவை சேனாதிராஜா அம்பாறையில் போட்டியிடுகிறார்.

தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை போன்றவற்றின் உறுப்பினராகவும், தமிழ் இளைஞர் பேரவைத் தலைவராகவும் இருந்தவர்.

பலமுறை சிறை சென்றவர். இளைஞர் பேரவை மேடைகளில் முழங்கிய வண்ணை ஆனந்தன் போன்றோர் ஒதுங்கிச் சென்றபின்னரும் இன்றுவரை அரசியலில் இருந்து வருபவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பொறுப்பை ஏற்கக்கூடியவர் என்று கருதப்படுபவர். இவைதான் மாவை சேனாதிராஜாவுக்கு உள்ள பலங்கள். பிரதேச வாதத்தை கிளப்பி விட்டு வாக்குப் பெறுவதற்கு அவரது எதிர்தரப்பு முயற்சி செய்யலாம். அதுதான் அவரது தரப்புக்கு உள்ள பலவீனம்.

இதேசமயம் சுயேச்சைக்குழுவில் இருந்து கொண்டே போட்டியிடும் கோபால கிருஷ்ணன் என்பவரது பின்னணி சரியாக இல்லை.

இவர் ஈ.பி.அர்.எல்.எஃப். அமைப்பின் செயலதிபருக்கு தன்னை நெருக்கமாக காட்டிக் கொண்டவர். அவரது பெயரில் அவரது தொலைபேசியில் பேசும் உரிமைகூட கோபாலகிருஷ்ணனுக்கு கொடுக்கப் பட்டிருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலதிபருக்கு மட்டக்களப்பில் போட்டியிடும் ஆசையை உருவாக்கியவரும் இவர்தான்.

பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப்பிற்கு ஈ.பி.டி.பி. அமைப்போடு சேருவது பற்றி பேச்சும் நடத்தினார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மற்றும் ஈ.பி.டி.பி. உதவியோடு தானே தேர்தலில் போட்டியிடும் எண்ணத்தோடு தமிழ் மகாசங்க உறுப்பினர்களை தன்னோடு சேர்த்துக் கொண்டு பொதுவான சுயேச்சைக்குழு என்ற திட்டத்தை முன்வைத்தார்.

தமிழ் மகாசங்கத்தினர் யாரை பொதுப் பட்டியலில் போடுவது என்று தீர்மானிக்கும் முன்னரே திரு.கோபாலகிருஷ்ணன் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி அமைப்புக்களின் தலைவர்களை சந்தித்து தனக்கு ஆதரவு தருமாறும், வேட்பாளர்களை நிறுத்த வேண்டாம் என்றும் ஆதரவு திரட்டத் தொடங்கியிருந்தார்.

தமிழ் மகாசங்கத்தினர் இந்த கோ.கிருஷ்ணரால் செய்யப்பட்ட அரசியல் லீலைகளை அறிந்துகொள்ளாமல் கொழும்புக்கு வந்து தமிழ் கட்சிகளோடு பொது வேட்பாளர்களை நிறுத்துவோம் என்று பேசிக்கொண்டிருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் முன்னாள் தலைவர் ஒருவரை தூதுவிட்டு தமிழ் கட்சிகளது ஆதரவை அவர் கோரியதாகவும், அதுவும் தமிழ் மகாசங்கத்தினருக்கு தெரியாது என்றும் கூறப்படுகிறது.

'தமிழ் பிரதிநிதித்துவம் காக்கப்பட வேண்டும், பொதுவான சுயேச்சைக்குழு, 'மண்ணின் மைந்தன்' என்னும் கோபால கிருஷ்ணனின் கோசங்கள், தான் ஒரு பிரதிநிதியாக வரவேண்டும் என்ற ஆசையைச் சுற்றியே வருகின்றன.

எப்படியும் பிரதிநிதியாகவேண்டும், என்று ஆசைப்படும் கோபாலகிருஷ்ணன் பிரதேசவாதத்தை நம்பியிருப்பதாக கூறப்படுகிறது.

பிரதிநிதித்துவம் 'பறிபோகக் கூடாது' என்பது உண்மைதான். அதற்காக பிழையானவர்கள் கரங்களிலும் போய்விடக் கூடாது என்பதை தமிழ் மகாசங்கமும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களும் உணர்ந்தால் சரி.

ஈ.பி.டி.பியோ-ஈ.பி.ஆர்.எல்.எஃப்பினரோ இவ்வாறான பிரதிநிதிகளை ஆதரிப்பது உண்மையானால் அது அவர்கள் தமிழ் அரசியலுக்கு செய்யும் துரோகம் என்று அந்த கிருஷ்ணனின் பக்கம் மாறும் பாய்ச்சல் தெரிந்தவர்கள் கூறுகின்றனர்.

ரெலோவில் இருந்து கட்சி மாறிய திவ்வியநாதன் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடுகிறார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஆள்காவிகள் என்று ஆறுபேர் மீது வழக்கு!
## கனடிய உளவுப்பிரிவு கடும் நடவடிக்கை
# 35 இலங்கைத் தமிழருக்கு வலை விரிப்பு!

கனடாவின் 'ரோயல் கனேடியன் மவுண்டட் பொலி'சின் துப்பறியும் பிரிவினர் கனடாவுக்குள் இலங்கையர்களை சட்ட விரோதமாக அழைத்து வரும் குழுவினரின் நடவடிக்கைகளை கண்டுபிடித்துள்ளனர். பிரதி மாதமும் இவர்கள் 50 இலங்கையரை கனடாவுக்குள் கடத்துகின்றனர் என்றும் 20,000டொலர்வரை ஒருவரிடம் பெறுகின்றனர் என்றும் கனடிய அரசாங்கத் தகவல் தெரிவிக்கிறது.

இந்தக் குழுவினர் நூற்றுக்கணக்கானோரை இவ்வாறு கடத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வந்து சேர்ந்தவர்களில் சிலர் 10 வருடங்களாக கனடாவில் வாழ்ந்து வருகிறார்கள் என்றும் கனடிய அரசாங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

கடந்த வாரத்தில் கனடாவில் 10 இடங்கள் சுற்றி வளைக்கப்பட்டு 6 இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றும் 35 இலங்கைத் தமிழர்களைப் பிடிப்பதற்கான பிடி விறாந்துகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

கனடிய கடவுச் சீட்டுக்கள், பொய் விசா முத்திரைகள், கனடிய நகரமான ஒன்ராறியோவில் பிறந்ததாகப் போலியாகத் தயாரிக்கப்பட்ட பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் மற்றும் ஏராளமான பணம் ஆகியவற்றையும் கனடிய உளவுத்துறையினர் கண்டு பிடித்துள்ளனர்.

கடத்தி வரப்படும் ஒவ்வொருவரிடமிருந்தும் ஏறத்தாழ 18,000முதல் 20,000 டொலர்வரை பெற்று, இக்குழு மாதம் 500,000 டொலர்வரை திரட்டுவதாக சிலர் கணக்கிட்டுள்ளனர். அது மட்டுமல்லாமல், இவர்களுக்கு அரசு வழங்கும் தாபரிப்புப் பணத்தில் பாதியையும் இவர்கள் பிடுங்கிக் கொள்ளுகின்றனராம்.

இவ்வாறு ஆட்களைக் கடத்துபவர்கள் போலி ஆவணங்களைத் தயாரிப்பதற்காகவும் அதிகாரிகளுக்கான லஞ்சம் உட்பட-ஆகும் செலவுகள் போக தலா ஒருவரிடம் 10,000 டொலர்வரை லாபமாகப் பெறுகின்றனர்.

பல ஆண்டுகளாக கனடாவின் மில்ட்டன் நகரிலுள்ள துப்பறியும் பொலிசார் பௌமென்வில்லா மற்றும் நியுமார்க்கட் ஆகிய இடங்களைச் சேர்ந்த பொலிசாரின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டதன் அடிப்படையிலேயே சுற்றி வளைப்புத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கடவுச் சீட்டு போன்ற ஆவணங்கள் பலவற்றை போலியாகத் தயாரித்தமை, 10பேர்வரை சட்டவிரோதமாகக் கடத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் 6 பேர்மீது சுமத்தப்பட்டுள்ளது.

நோர்த் யோக்கைச் சேர்ந்த ஜீவா கிட்ணபிள்ளை (30) அருணகிரிநாதன் கந்தையா (30), எற்றோபிகோக்கைச் சேர்ந்த ஜஸ்வந்த் மொன்ரினி பெர்னாண்டோ (30) பிரதீப் ஜோசப் பெர்னாண்டோ (32), ஸ்காபரோவைச் சேர்ந்த சிவகுருநாதன் கதிர்காமத்தம்பி (31) ஆகியோரே குற்றஞ் சாட்டப்பட்டவர்களாவர்.

தற்போது நடவடிக்கையில் இறங்கியுள்ள கனடிய பொலிஸ் அமைப்புத்தான் அங்கு சகல அதிகாரமும் கொண்ட பொலிஸ் அமைப்பாகும்.

## தனி ஈழப் பிரகடனம் அன்று!
## பாராளுமன்ற பிரவேச ஆசை இன்று!!

திருகோணமலையில் சுயேச்சைக் குழுவாக போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியுள்ளார் வட-கிழக்கு மாகாணசபை சபாநாயகராக இருந்த ராஜகாரியர்.

இவர் முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பிலிருந்து விலக்கப்பட்டவர். பின்னர் வேறு ஒரு தமிழ் அமைப்பிடம் தேர்தலில் நிற்க ரிக்கற் கேட்டவர். அந்த அமைப்பு மறுத்துவிட்டதால் சுயேச்சைக் குழுவாக போட்டியிட முன்வந்துள்ளார்.

முன்பு வடக்கு-கிழக்கு மாகாண சபையில் ராஜகாரியர் சபாநாயகராக இருந்தபோது தனி ஈழப் பிரகடனம் செய்யப்பட்டமை ஞாபகமிருக்கலாம்.

இப்போதும் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் சபாநாயகர் என்று தன்னைக் கூறிக்கொண்டு அதற்கான ஊதியத்தை அரசிடம் பெற்றுவரும் ராஜகாரியர் என்பவர் இப்போது இலங்கைப் பாராளுமன்றம் செல்லும் அவசரத்தில் மிக வேகமாக கட்டுப்பணம் செலுத்தியுள்ளார். தனி ஈழப் பிரகடனம் செய்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளது.

## இலவச சட்ட உதவி வசதி

(திருகோணமலை நிருபர்)

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உதவியுடன் திருகோணமலை நீதிமன்ற வளவில் 'இலவச சட்ட உதவி நிலைய'மொன்று திறக்கப்பட்டுள்ளது.

இதன் பணிப்பாளர் சட்டத்தரணியாக, சட்டத்தரணி திருமதி சுபாஷினி வரதன் நியமிக்கப்பட்டுள்ளார். குறைந்த வருமானம் பெறுவோருக்கான சட்ட உதவிகளை இலவசமாக வழங்குவதே இந்நிலையத்தின் செயற்பாடாகும்.

2500 ரூபாவுக்குக் குறைந்த மாத வருமானம் பெறுவோர்–கிராம சேவகர்கள், தபாலதிபர்கள், சட்டத்தரணிகள், சமாதான நீதிவான்கள், பாடசாலை அதிபர்கள், ஆகியோருள் ஒருவரைக் கொண்டு தங்கள் வருமானத்தை உறுதிப்படுத்தி வேண்டிய சட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்' என்று திருமதி சுபாஷினி வரதன் முரசுக்குத் தெரிவித்தார்.

தாபரிப்பு வழக்குகள், காணி சம்பந்தமான வழக்குகள் மற்றும் விபத்து வழக்குகள் என்பன இந்நிலையத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

உதவி தேவைப்படுவோர் நீதிமன்ற வளவில் அமைந்துள்ள அலுவலகத்திலோ, அல்லது 78 கிறீன் வீதியில் அமைந்துள்ள பணிப்பாளரின் இல்லத்திலோ பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. திறப்பு விழா அன்றே தாபரிப்பு வழக்கொன்று இந்நிலையத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

## தேர்தல் ஜோக்




"அதோ கார்ல போறாரே. அவர் பத்து வருசமா அரசியலில் இருந்தும் சம்பாதிக்காதவர்."

"அட ஆச்சரியமா இருக்கே?"

"நல்ல பெயரைச் சம்பாதிக்காதவர் என்று சொல்ல வர்றேன்."

நன்றி-சரண்.

## குடிநீர் வசதி; மாணவர்களின் நன்முயற்சி

(அக்குறணை நிருபர்)

அண்மையில் கல்விச் சுற்றுலாவில் கலந்துகொண்ட அக்குறணை ஸாஹிரா மத்திய கல்லூரி மாணவர்கள் தங்களது செலவிற்கான பணத்தின் மிகுதியில் கல்லூரிக்கான குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க மனப்பூர்வமாக முன்வந்துள்ளனர்.

போதிய சுத்தமான குடிநீர் வசதியை ஏற்படுத்திக்கொள்ள இந்தப் பணம் உபயோகிக்கப்படும். மேற்படி சுற்றுலாவில் சுமார் 450 மாணவ மாணவியர் பங்குபற்றியுள்ளார்கள்.

இம்மாணவர்களின் பரோபகார சிந்தையையும் இவர்களுக்கு ஊக்கமளித்த பெற்றோரையும் அதிபரும் ஆசிரியர்களும் மனதாரப் பாராட்டினார்கள். இம்முயற்சி ஏனைய பாடசாலைகளுக்கும் ஒரு முன் மாதிரியாகுமென கல்விச் சுற்றுலாவிற்குப் பொறுப்பான ஆசிரியர் ஜனாப். எஸ்.எச்.எம். பாரிஸ் அவர்கள் முரசின் நிருபரிடம் தெரிவித்தார்.

## அங்கொரு சுருட்டல்

இலங்கைப் பணிப்பெண் ஒருவர் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் துபாய் நாட்டில் திருடிய குற்றத்திற்காக அண்மையில் துபாய் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இலங்கையைச் சேர்ந்த-டபிள்யு.எப். எனும் பெண்மணிதான் வேலை செய்த பிரிட்டிஷ் நாட்டு பிரஜை ஒருவரின் வீட்டில் இலங்கை நாணயப்படி ஐந்தரை லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை திருடியிருந்தார், இவருக்கு வயது 45 ஆகும்.

## வாசகர் கவனிக்க

முரசுடன் சகல கடிதத் தொடர்புகளுக்கும்-
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772–கொழும்பு.
என்ற முகவரியினையே குறிப்பிடுங்கள்.
பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் ஆக்கங்கள் ஏற்கப்பட மாட்டாது

## விளம்பரப் பகுதி




### மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவை.
உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு. இன்னும் வசிய ரொஃபி, தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, என் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

**வறியவர் எனக்கண்டால் எமது ஸ்தாபனத்தில் தனி இடம் உண்டு.**

| தலைமைப்பீடம் | கொழும்பில்– |
|---|---|
| P.K.சாமி JDGAN<br>(மாந்திரீகச் சக்கரவர்த்தி)<br>சிறீ துர்க்காதேவி ஆலயம்<br>32, தினச்சந்தை<br>காம்பிளக்ஸ்<br>நுவரெலியா. | இல: 162,<br>கொட்டாஞ்சேனை வீதி,<br>கொட்டாஞ்சேனை.<br>கொழும்பு-13. |

தொலைபேசி: 052-2508, 052-3093, 01-434225

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093


### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:


| | |
|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

| | |
|---|---|
| தினமுரசு வாரமலர்<br>த.பெ.இல:1772<br>கொழும்பு | THINAMURASU VAARAMALAR<br>P.O.BOX: 1772<br>COLOMBO |


என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


# ஆடி–16
# வீரமக்கள் தினம்



மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) செயலதிபர் தோழர் உமா மகேஸ்வரன் மறைந்து ஆண்டுகள் 5 ஆகிவிட்டன.
எமது செயலதிபரை நினைவு கூரும் இவ்வேளையில்–
பாசிசத்தின் பதவி மோகத்தால் பலியெடுக்கப்பட்ட,
சக இயக்கத் தலைவர்கள்–உறுப்பினர்கள்–ஆதரவாளர்கள்–
கல்லூரி ஆசிரியர்கள்–புத்திஜீவிகள் ஆகியோரையும்–
பாரிசில் பலியெடுக்கப்பட்ட பத்திரிகையாளர் திரு. சபாலிங்கத்தையும்
இந்த வீரமக்கள் தினத்தில் நினைவு கூருகிறோம்.

**மறைந்த தியாகிகள் அனைவருக்கும் 'வீர வணக்கம்' செலுத்துகிறோம்.**



-புளொட் ஆதரவாளர்கள்-
சுவிஸ் சொலற்றூண் மாநிலம்.

### கடிகார பரிசுப் போட்டி


வீரமக்கள் தினத்தை முன்னிட்டு புளொட் சுவிஸ் ஆதரவாளர்கள் நடத்தும் போட்டி இது.
கீழ்வரும் கேள்விகளுக்கு சரியான விடைகளை எழுதி அனுப்புவோரில் 10 அதிஷ்டசாலிகளுக்கு புளொட் சுவிஸ் ஆதரவாளர்களால் கடிகாரமும், வெகுமானங்களும் பரிசாக வழங்கப்படும்.

1) ஈழத்து காந்தி என்று போற்றப்பட்டவர் யார்?
2) இலங்கையில் முதன் முதலில் தற்கொலை செய்துகொண்ட தமிழ் போராளி யார்?
3) களத்தில் மரணமடைந்த முதல் தமிழ் பெண் போராளி யார்?
4) பேச்சுவார்த்தைக்கு சென்றவர்களால் பலியெடுக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களது இரண்டு மூத்த தலைவர்கள் யார்?
5) ஐரோப்பாவில் பலியெடுக்கப்பட்ட இலங்கைத் தமிழரான பத்திரிகையாளர் யார்?
6) அவரைக் கொன்றவர்கள் யார்?
7) மரண தண்டனைக் கைதியாக இருந்தபோது தனது கண்களை தமிழ் மகன் ஒருவருக்கு கொடுக்குமாறு சொன்ன இலங்கைத் தமிழ் போராளி யார்?
8) 27 வருடம் இருளில் மறைந்திருந்த சூரியன் யார்?
9) தமிழர்களது இன்னல்களை கண்டறிய யாழ் சென்றுவந்த முதல் சிங்களத் தலைவர் யார்?
10) இலங்கையில் இருந்து ஈழப் பிரகடனம் செய்தவர்கள் யார்?

இக்கேள்விகளுக்கான பதில்கள் 23.7.94இற்கு முன்பாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

**பதில்கள் அனுப்பவேண்டிய முகவரி–**

கடிகாரப் பரிசுப் போட்டி, மே/பா. தினமுரசு வாரமலர், த.பெ.எண்–1772, கொழும்பு.
அதிஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் முரசின் வாயிலாக அறிவிக்கப்படும். ADVT.



# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தேர்தல் திருவிழாவில் வெற்றிமாலை யாருக்கு?

யார் தேர்தல் களத்தில் குதிக்கப் போகிறார்கள்? கேள்விகளுக்கு விடைகள் கிடைத்துவிட்டன.

எல்லோரும் "நாம் நல்லவரே" என்கிறார்கள்.

"இல்லையில்லை. உங்களில் இவர்கள்தான் நல்லவர்கள், வல்லவர்கள்" என்று ஆகஸ்ட் 16ம் திகதி திருவாளர் பொதுஜனம் தீர்ப்புச் சொல்லப் போகிறார்.

எல்லோரும் கழுத்தை முன்னே வளைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வெற்றிமாலையை யார் வாங்கப் போகிறார்கள் என்பது ஆகஸ்ட் 16க்கு பின்தான் தெரியும்.

ஜே.வி.பிக்கு மக்களிடம் உள்ள செல்வாக்கை சோமவன்ச மூலம் நாடி பிடித்தறிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இதே வேளையில் திருமதி சந்திரிக்காவுக்கு ஜே.வி.பியோடு தொடர்பிருப்பதாக ஒரு கதை பரவியிருந்தது.

தனது துணைவரைக் கொன்றவர்களோடு அரசியல் லாபம் கருதி சந்திரிக்கா அணிசேர முற்படுகிறார். ஆதரவு பெற நினைக்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால்-இப்போது சோமவன்ச பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிராக தேர்தலில் வேலை செய்யவுள்ளதால் சந்திரிக்காவுக்கு அது சந்தோசமான விசயம்.

தன் மீதான குற்றச்சாட்டொன்று தானாகவே விலகிய திருப்தியில் சந்திரிக்கா நிம்மதிப் பெருமூச்சுவிட்டிருப்பார்.

இலங்கையில் தேடப்பட்டவரான சோமவன்ச மீண்டும் திரும்பி விமான நிலையம் மூலமாக வந்தபோது உளவுத் துறையினர் எட்ட நின்று பார்த்ததோடு சரி. கிட்டத்தில் செல்ல உத்தரவில்லை.

அதனால் அரசாங்க ஆதரவுக் கரம் அவருக்கு மறைமுகமாக இருக்கலாம் என்று பேசப்படுவதை நம்பாமலிருப்பது சிரமம்.

யிடுவதை ஆளும் கட்சிக்குள் ஒரு சாரார் முதலில் விரும்பவில்லை.

அதனால்தான் ஹேமாவுக்குப் பதிலாக அவரது மகன் சஜித்துக்கு இடம் தரப்பட்டது. ஆனால் ஹேமா இலங்கையின் பிரபல அரசியல் சாணக்கியரான பிரேமாவின் மனைவியாக இருந்தவர்.

பிரேமாவின் சாணக்கியத்தில் பத்தில் ஒன்றாவது இல்லாமல் போகுமா?

எனவே-தனக்கில்லையென்றால் தன் மகனுக்கும் வேண்டாம் என்றுவிட்டு பத்திரிகைகளோடு பேச ஆரம்பித்துவிட்டார்.

பிரேமாவின் ஆதரவான வாக்குகளை பெரிதும் நம்பியிருக்கும் ஆளும் கட்சிக்கு ஹேமாவுக்கு விட்டுக் கொடுப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

எனவே-திருமதி ஹேமா தேசியப் பட்டியலில் இடம்பெற்றுள்ளதுடன், தேர்தல் பிரசாரத்திலும் ஈடுபடமுடியும்.

பிரேமா ஆதர்வு வாக்கு வங்கிகளை தக்க வைப்பதில் ஹேமாவின் பிரசாரம் கைகொடுக்கும் என்று தெரிகிறது.

தெற்கில் இரு பிரதான கட்சிகளுக்குமே ரிக்கற் கிடைக்காத அதிருப்தியில் துள்ளும் ஆட்களை சமாளிப்பது பெரும் தலையிடி

முன்னணியின் அலுவலகப் படிக்கட்டில் தேர்தல் ரிக்கற் கேட்டு ஏறிய நிமிசமே அரசியலில் மேலும் பல படிகள் அவர் கீழே இறங்கிவிட்டார்.

ஐ.தே.கட்சிக்கு விசுவாசமாக இருக்காமல் போனதால்தான் தொண்டாவோடு பிரச்சனை பெரிதாக வெடித்ததாக விளக்கம் சொன்னவர் அவர்.

சுதந்திரக்கட்சியை வசைபாடியும் தொண்டா சுதந்திரக்கட்சியோடு சேர்ந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு துரோகம் செய்வதாகவும் சொல்லி வந்தவர் செல்லா.

இப்போது மட்டும் செல்லா எப்படி தேர்தல் ரிக்கற் கேட்டு படியேறினார்?

செல்லா விடயத்தில் ஆளும் கட்சி நடந்துகொண்ட முறை நியாயமல்ல.

ஆனால் அரசியலில் இப்படியான கைவிடல்கள் சகஜம்.

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்.

வாக்கு கிடைக்கும் என்றால் பேரன்பும் மறக்கப்படும். துரோகமும் நடத்தப்படும்.

அதுதான் தற்கால அரசியல். செல்லாவுக்கு இப்போது புரிந்திருக்கலாம். செல்லாவை நம்பியவர்களுக்கும்தான்.

ஆனால் அதற்காக செல்லா பொதுஜன



ஆகவே-இம்முறை செல்லா பாராளுமன்றம் செல்வது முடியாத காரியம்.

அதுதவிர திருமதி வேலம்மாள் செல்லச்சாமி பற்றிய பல அதிருப்திகள் நிலவுகின்றன.

ஏஜென்சி நடத்தியதில் தில்லுமுல்லுகள் என்று பலவாறாகப் பேசப்படுகிறது.

செல்லாவுக்கு வேலம்மாளால்தான் கெட்ட பெயர் என்றும் ஒரு அபிப்பிராயம் கொழும்பில் செல்லா ஆதரவாளர்கள் மத்தியிலேயே நிலவுகிறது.

எனவே-செல்லா தம்பதியினரின்



தெற்கே ஜே.வி.பி.யும் தேர்தல் களத்தில் குதிக்கிறது.

முன்னரும் ஜே.வி.பி, ஜே.ஆர். காலத்தில் ரோஹன விஜயவீர தலைமையில் பாராளுமன்றப் பாதைக்கு வந்திருந்தது.

சிறிமாவோ காலத்தில் ஆயுதம் ஏந்திய பாதையில் கலகம் செய்து சிறைசென்ற ரோஹனாவுக்கு ஜே.ஆர். காலத்தில் சிறைக்கதவம் திறந்தது.

"துப்பாக்கிக் குழாய்களிலிருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது" என்று சீனப் புரட்சி தலைவர் மா ஓ சேதுங் சொன்னதை தாமும் திருப்பிச் சொன்ன ஜே.வி.பி.-

பின்னர் வாக்குச் சாவடிகளுக்குள்ளாக அரசியல் அதிகாரம் பிறக்குமா

பொதுஜன ஐக்கிய முன்னணியோடு இடதுசாரிக் கட்சிகள் சில சேர்ந்து நிற்பதையும், அதனால் பெறப்படும் ஆதரவையும் சோமவன்ச மூலமாக திசைமாற்றலாம் என்று ஆளும் கட்சி நினைக்கக்கூடும்.

ஆனால்-திருமதி சந்திரிக்கா சோமவன்ச பற்றி அலட்டிக்கொள்ளாமல் மிக அலட்சியமாகப் பேசுகிறார்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் முன்னாள் பிரபல நடிகர் திரு.காமினி பொன்சேகா போய் கலந்திருக்கிறார்.

உப சபாநாயகராக இருந்த திரு.காமினி பொன்சேகா தமிழர்கள் மீது பிரியம் உள்ளவர். இனவாதம் இல்லாதவர்.

ஆனால் அவர்மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்னர் கூறப்பட்டன. பல்லைக்

யாகவே இருக்கிறது.

ரிக்கற் தரவில்லையா? விட்டேனா என்று சுயேச்சையாக தேர்தலில் நிற்பவர்கள்தான் பெரிய தலைவலியாக இருக்கிறார்கள்.

அவர்களுக்கு உள் விசயங்களும் தெரிந்திருப்பதுதான் பெரிய வம்பு. நாறவைத்து விடுகிறார்கள்.

இதுதவிர-சக கட்சிகளுக்கு இட ஒதுக்கீடு செய்வதில் சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கு தலையே வெடித்துவிடும் நிலை ஏற்பட்டது.

இப்போதுகூட இட ஒதுக்கீட்டில் சுதந்திரக் கட்சி நியாயமாக நடக்கவில்லை என்ற புகைச்சல் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் இருக்கிறது.

எனினும், பொதுஜன ஐக்கிய முன்னணி என்பதே திருமதி-சந்திரிக்காவைச் சார்ந்தும் நம்பியுமிருப்பதால் புகைச்சல் அடங்கி

ஐக்கிய முன்னணிக்குள் சங்கமமாகிப் போக நினைத்தது பொருத்தமான நடவடிக்கையல்ல.

தன்னை நியாயப்படுத்தும் காரணங்களை அவரே களத்தில் போட்டுவிட்டதால் வெறுங்கையோடு தேர்தல் அரங்கை விட்டு இம்முறை திரும்பினாலும் ஆச்சரியமில்லை.

கொழும்பில் இம்முறை திரு.குமார் பொன்னம்பலம் தலைமையிலான குழுவும் போட்டியிடுகிறது.

குமாருக்கு வாக்குகள் விழுகிறதோ இல்லையோ அவரது குழுவில் உள்ள தரமான சிலருக்கு விழும் வாக்குகளை ஒன்றாகக் கூட்டி கணக்குப் பார்த்து குமார் மட்டும் என்றாலும் பாராளுமன்றத்துக்கு செல்ல முடியும்.

1977ல் இருந்து குமார் எடுத்த முயற்சி 17 வருடத்தின்பின் கைகூடக்கூடும். குமார்

## ஈரோசின் புலி ஆதரவு நாடகம் புஸ்வாணம்

## வெளிச்சவீடும்- புலிகள் அனுப்பிய குண்டும்

என்று ஆராய்ந்து பார்த்தது.

பிறக்காது என்று முடிவுக்கு வந்து மீண்டும் துப்பாக்கிகளைத் தூக்கிக் கொண்டது.

திருமதி சந்திரிக்காவின் துணைவர் விஜய குமாரணதுங்கா வெகுஜன செல்வாக்கு பெற்று வளர்ந்துவந்த நேரத்தில் அவர் மீதும் ஜே.வி.பி. தன் வேட்டுக்களைத் தீர்த்தது.

இறுதியில் ஜே.வி.பி. தலைவர் ரோஹன விஜயவீரா உட்பட முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டதோடு ஜே.வி.பி.யின் இரண்டாவது கலகத் திற்கும் இரத்தத்தால் முற்றுப்புள்ளி யிடப்பட்டது.

தற்போது ஜே.வி.பியின் தலைவராக உள்ளவரான சோமவன்ச இந்தியாவில் தனது தலைமறைவு வாழ்வை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பியிருக்கிறார்.

அவரது வரவு சிறு சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

கடித்துப் பொறுத்துக்கொண்டிருந்தவர், பாராளுமன்றம் கலையும்வரை ஆளும் கட்சி மூலமாக பெற்ற உபசபாநாயகர் பதவியில் இருந்துவிட்டு இப்போது திருமதி சந்திரிக்காவோடு போய் கை குலுக்கிவிட்டார்.

ஆனாலும்-காமினி பொன்சேகாவால் பெரியளவுக்கு ஆளும் கட்சி வாக்கு வங்கிகளை சேதப்படுத்த முடியாது.

அப்படி முடிந்திருந்தால் அவர் நேரடியாக தேர்தலில் குதித்திருப்பார்.

மறுபுறம் திருமதி ஹேமா பிரேமதாச முன்னுக்குப் பின் முரணாகப் பேசி, பரபரப்பை ஏற்படுத்திவிட்டு இறுதியில் தனக்கொரு ரிக்கற் மகனுக்கொரு ரிக்கற் என்று வாங்கிக்கொண்டு யூ.என்.பியோடு சமரசமாகிவிட்டனர்.

பிரேமா கொலைக்கு விசாரணைக் கமிசன் வைக்கவேண்டும் என்பது அரசியல் பேரம் என்று நினைக்க வைத்தது மூலம் திருமதி ஹேமாவின் மதிப்பு சற்றுக் குறைந்திருக்கிறது.

திருமதி ஹேமா தேர்தலில் போட்டி

யிருக்கின்றன.

தாராளப் பொருளாதாரக் கொள்கை பற்றிக்கூட இடதுசாரிக் கட்சிகள் வாயே திறக்கவில்லை என்பது ஒன்றே போதும் அவர்களது தன்னம்பிக்கை தளர்ந்திருப்பதற்குச் சாட்சி சொல்ல.

"நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி புல்லுக்கும் அங்கே பொசியுமாம்."

புல்லின் நிலைதான் இடதுசாரிகளுக்கு!

திருமதி சந்திரிக்கா அலையில் விழும் வாக்குகள் தம்மையும் கரைசேர்க்கும் என்று நம்பியிருக்கிறார்கள்.

எனவே-இசகு பிசகாக வாய் திறந்து வெண்ணெய் திரளும்போது தாழியை உடைக்கமாட்டார்கள்.

■

மலையகத்தில் தொண்டாதான் இம்முறையும் ராஜாவா? என்பதற்கு ஆகஸ்ட் 16ல்தான் பலப் பரீட்சை.

செல்லாவை ஆளும்கட்சியும் அலைய வைத்துவிட்டது. பொதுஜன ஐக்கிய

புத்திசாலி. யாருக்கு எதிராக தேர்தலில் குதித்து தன் அரசியலுக்கு பிள்ளையார் சுழி போட்டாரோ அந்த கூட்டணியின் ஆதரவோடு இம்முறை தேர்தலில் போட்டியிடுகிறார்.

1977 பொதுத் தேர்தலில் திரு.குமார் பிரசார கூட்டத்தில் பேச ஆரம்பிக்கும் போது, தலைவர் அவர்களே! தாய்மாரே, பெரியோரே, ஆங்கங்கே பதுங்கி நிற்கும் கூட்டணிக் கோழைகளே என்று விழித்து அழைப்பதுண்டு.

ஒருவேளை கூட்டணியினருக்கு இப்போது வீரம் வந்துவிட்டதாக திரு. குமார் நினைத்திருக்கலாம்.

'உடுப்பிட்டிச் சிங்கம் (பின்னர் நல்லூர் சிங்கம்) சிவா இம்முறை வன்னியில் போட்டியிட்டாலும்கூட கொழும்பில் குமாரை ஆதரிக்கச் சொல்கிறார்.

தொண்டா தம்மோடு ஒத்துவரவில்லை என்று கவலைப்படும் குமாரும், சிவாவும்கூட செல்லாவைப்பற்றி ஏனோ நினைத்தும் பார்க்கவில்லை.

அரசியலுக்கு திரு.தொண்டா மிகச் சுலபமாக முற்றுப்புள்ளியிட்டுவிட்டார்.

ஆனால்-மலையக மக்கள் முன்னணியை திரு.தொண்டா அலட்சியம் செய்யமுடியாது.

செல்லாதான் மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு.சந்திரசேகரனின் விடுதலைக்கு உதவியவர் என்று கூறப்பட்டது. அதில் உண்மை இல்லாமல் இல்லை.

திரு.சந்திரசேகரன் உதவியோடு திரு.தொண்டாவை ஓரம்கட்ட செல்லா நினைத்தார். அதற்கு ஆளும் கட்சியும் பச்சைக்கொடி காட்டியது என்றே பேசப்பட்டது.


ஆனால் இப்போது சந்திரசேகரன் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறவை நாடிப்போனது மூலமாக அந்தக் குற்றச்சாட்டின் கடுமை குறைந்திருக்கிறது.

எனினும்-ஒருவேளை திரு.தொண்டா பொதுஜன ஐக்கிய முன்னணிப் பக்கம் போயிருந்தால் சந்திரசேகரன்-செல்லா ஆகியோரில் செல்லா நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சியோடு சேர்ந்து நின்றிருப்பார்.

சந்திரசேகரனும் செல்லாவால் ஐ.தே.கட்சி பக்கம் இழுக்கப்பட்டிருக்கலாமோ என்று ஒரு மெல்லிய கேள்வி எழாமல் இல்லை.

ஏனைய கட்சிகளைப் பொறுத்தவரை மலையகத்தில் குறிப்பிட்டளவான செல்வாக்கை அவை பெறமுடியாது.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)



## அதிரடி அய்யாத்துரை

மூன்று கூட்டுக் கட்சிகளில் ஒன்று யாழ் மாவட்டத்தில் ஒரு ஆசனம் கேட்டு ஒரு தமிழ் கட்சியோடு பேசியதாம். அங்கு ஒன்று தந்தால் கூட்டைவிட்டு விலகி வருவதாக பிரமுகர் பேசினாராம். இவர்களோடு சேர்ந்து எமக்கு ஒரு சீற்கூட கிடைக்காது உங்களோடு வருகிறோம். ஒன்று பிளீஸ் என்றாராம். ம்ஹும் சரிவரவில்லையாம்.

முன்னாள் யாழ் பிரதிநிதி ஒருவர் வன்னியில் குதித்திருக்கிறார். யாழ் போனால் வெற்றி பூச்சியம் என்று நினைத்ததுதான் காரணமாம். ஆனால் வன்னியிலும் அவருக்கு பிரச்சனை. முன்னாள் வன்னிப் பிரதிநிதியான அவரது கட்சியைச் சேர்ந்த உறுப்பினருக்குத்தான் அங்கு செல்வாக்காம். பத்திரிகையிலும் அவர் படம்தானாம் வந்தது.

கூட்டான அணியினருக்கு திருவான மலையிலை ஆதரவு அலை வீசுறதாலை ஏனைய தமிழ் கட்சி வட்டாரங்கள் யோசிக்கிறமாதிரித் தெரியுது. கிழக்கிலையும் பிரச்சனை இல்லையாம். வன்னியிலைதான் உடுப்பிட்டிச் சிங்கம் கர்ச்ஜிக்க முடியாமல் போகும் எண்டு ஒரு பரவலான அபிப்பிராயம். தலைவரைக் கொண்டுபோய் தடுமாறவைச்சது பெரிய பிழை பாருங்கோ.

பயந்து ஓடிப்போட்டியள் எண்டு சொல்லுவினம் நீங்களும் வந்து கேளுங்கோ எண்டு சம்பந்தமானவருக்கு திருவான மலையிலை சிலர் கயிறு கொடுத்தவையாம். அதுதான் வேண்டாம் வேண்டாம் எண்டுபோட்டு கடைசி நேரத்திலை சம்மதிச்சவராம். அவரை ஒப்புக்கொள்ளவைக்க பட்டபாடு வாழ்க்கையை வெறுக்க வைச்சுப் போட்டுதாம்.

கொழும்பிலை பொன்னானவரின் பட்டியலில் கேட்கிற ஆட்களின் பெயரோடு பெயராக யாழ் முன்னாள் எம்.பியின் பாரியார் பெயரும் இருக்குது. ரெண்டு எழுத்தாராலைதான் கணவர் மறைக்கப்பட்டவர். ரெண்டு எழுத்தார் நியாயம் எண்டமாதிரி பேசுறவர் பொன்னான குமரர். எனக்கொரு கேள்வி பாருங்கோ.அப்படி எண்டா தன் கணவரை தட்டினது சரி எண்டு பாரியார் நம்புறாரோ? பசி வந்தால் மட்டுமில்லை பதவி ஆசை வந்தாலும் பத்தும் பறக்குமாக்கும்.

யாழ் அரச உயர் அதிகாரி ஒருவரை ரெண்டு எழுத்தார் வீட்டுக்குள் வைத்து காவல் எண்டு முரசு செய்தி போட்டது. எனக்கு என்ன மாதிரிப் படுகுதெண்டா அவரே ரெண்டு எழுத்தாரிட்டைப் போய் "தம்பிமார் என்னை நீங்கள் உள்ளுக்கு வைக்கிற மாதிரி நடியுங்கோ நானும் உள்ளுக்கிருக்கிறமாதிரி அழுகிறன்" எண்டு சொல்லியிருப்பார். ஆக பதவிக்கும் ஆபத்தில்லை. உயிருக்கும் சேதமில்லை. சூப்பர் ஐடியா பாருங்கோ.

யாழ்ப்பாணம் போனோம் அங்கு சனத்தை காணேல்லை எண்டு ஒரு கட்சி பிரதிநிதி சொன்னவராம். அப்படியெண்டா இவர் ஏன் வேட்பு மனுவைக் கொடுத்துப் போட்டு வந்தவர்? நல்லா பூ சுத்துகினம்.

யாழ் பகுதியிலை ஒரு தமிழ் கட்சி சிங்கள பிரதிநிதிக்கும் வேட்பாள அந்தஸ்து கொடுத்து தன்ரை முற்போக்கு விலாசம் காட்ட முயலுதாம். இருக்கிற பிரதிநிதித்துவத்தையும் பறிச்சுக்கொடுக்கிற வேலை எண்டு சனம் கோபப்படுகுதாம்.

பாரதிதாசன் பாடல்...ஒண்டு கேளுங்கோ.

"இறப்பதே இல்லை தமிழன்-புகழுடம்பை
எங்குமே வைத்தது காண்க.
மறக்குமா வையம் தமிழன்-மனப்பாங்கு
வளர்த்த அறத்தையும் அறிவையும்."

தேர்தல் திருவிழாவிலை தமிழன் அறத்தை வளர்க்கிறானோ இல்லையோ களைகள் வளரவிடக்கூடாது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்


# பல்கேரியாவிடம் உலக சாம்பியன் ஜெர்மனி தோல்வி!




## ஸ்போர்ட்ஸ்

### பிரட்மன்

# ஆசியாவில் பாரிய தொலைக்காட்சி அரங்குகள்!!



உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சாம்பியனாக இருந்த ஜேர்மனி கால் இறுதிப் போட்டியில் பல்கேரியாவிடம் தோல்வியடைந்துள்ளது. இத்தடவை உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் ஆரம்பம் முதல் கூடுதல் புள்ளிகளுடன் முன்னணியில் இருந்த ஜேர்மனி கால் இறுதிப் போட்டியில் 2-1 என்ற ரீதியில் பல்கேரியாவிடம் தோல்விகண்டுள்ளது.

ஜேர்மனியின் தோல்வி ஆச்சரியத்தைக் கொடுப்பதாகவே இருக்கின்றது. உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இதுவரை குறிப்பிடத்தக்க இடத்தை ஜேர்மன் வகித்து வந்திருந்தது.

மூன்று தடவைகள் ஜெர்மன் உலகக் கிண்ணத்தைத் தட்டிச் சென்றிருந்தது. 1954, 1974, 1990ம் ஆண்டுகளிலேயே ஜேர்மன் உலக சாம்பியனாக உலகக் கிண்ணத்தை தன்வசப்படுத்தியிருந்தது.

இது தவிர உலகக் கிண்ண போட்டிகளில் மூன்று தடவைகள் 1966, 1982, 1986ம் ஆண்டுகளில் இரண்டாவது இடத்தையும் ஜெர்மன் பெற்றிருந்தது. 1962ம் ஆண்டு ஜெர்மன் கால் இறுதிப் போட்டிவரை மோதியிருந்தது. 1958ம் ஆண்டு உலகக் கிண்ண போட்டிகளில் நான்காவது இடத்தைப் பெற்றிருந்தது.

### ஜெர்மன் வெற்றிகள்

உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை இதுவரை மூன்று நாடுகளே மூன்று தடவைகள் தம்வசமாக்கியுள்ளன. பிரேஸில், இத்தாலி ஆகியனவற்றுடன் ஜெர்மனியே அந்த மூன்றாவது நாடாகும்.

பிரேஸில், இத்தாலி ஆகியன கால் இறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிக்குப் பிரவேசிக்கும் தகுதியைப் பெற்றுள்ளன. ஆனால் ஜெர்மனி அத்தகுதியைப் பெறத் தவறியுள்ளது.

1954ம் ஆண்டு சுவிற்ஸர்லாந்தில் இடம்பெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் ஹங்கேரி நாட்டை 3-2 என்ற ரீதியில் வென்று ஜெர்மன் முதல் தடவையாக உலக சாம்பியனாகியிருந்தது.

1974ம் ஆண்டில் ஹொலன்ட் நாட்டை 2-1 என்ற ரீதியில் வென்று ஜெர்மன் இரண்டாவது தடவையாக உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தது. இப்போட்டி ஜெர்மனியிலேயே இடம்பெற்றிருந்தது.

தொடர்ந்து 1990ம் ஆண்டு, அதாவது இறுதியாக இடம்பெற்ற உலகக்கிண்ணப் போட்டிகளிலும் ஜெர்மனி உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்திருந்தது.

இத்தாலியில் இடம்பெற்ற 1990ம் ஆண்டின் உலகக்கிண்ணப் போட்டிகளில் ஆர்ஜன்டீனாவை 1-0 என்ற ரீதியில் தோற்கடித்து ஜெர்மன் சாம்பியனாகியிருந்தது.

இதேவேளை பல்கேரிய அணி உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பைச் செய்திராத போதிலும், இத்தடவை உலக சாம்பியனாக இருந்த ஜெர்மனியைத் தோற்கடித்தமை பல்கேரியாவுக்கு ஒரு பெரு வெற்றியாகவே இருக்கின்றது.

இத்தடவையும் இறுதிப்போட்டிவரை செல்லும் என்று எதிர்பார்த்த ஜெர்மனியை பல்கேரியா தனது திறமையான ஆட்டம் மூலம் கால் இறுதிப்போட்டியிலேயே தோல்வியடையச் செய்திருந்தது.

ஜெர்மனியை வெற்றிபெற்ற பல்கேரிய அணி 1962ம் ஆண்டிலேயே இறுதியாக உலகக் கிண்ண போட்டிகளில் பங்குபற்றியிருந்தது. இத்தடவை பிரான்ஸ் நாட்டை 2-1 என்ற ரீதியில் வெற்றி பெற்றதன் மூலமே பல்கேரியா உலகக் கிண்ண சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றிருந்தது.

### தொலைக்காட்சி அரங்குகள்

இதேவேளை அமெரிக்காவில் இறுதிக் கட்ட போட்டிகள் மிகவும் சூடுபிடித்திருக்கக் காணப்படுவதுடன் உலகம் பூராவும் உதைபந்தாட்ட இரசிகர்கள் பூகோள ரீதியான நேர வித்தியாசங்களையும் பொருட்படுத்தாது இரவு, பகலாக உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்வையிட்டு வருகின்றனர்.

அமெரிக்காவில் நேரடியாகச் சென்று போட்டிகளைப் பார்வையிட முடியாத உதைபந்தாட்ட இரசிகர்கள் தொலைக்காட்சி மூலமாக தத்தமது நாடுகளில் போட்டிகளைப் பார்வையிடுகின்றனர்.

பிரேஸில், இத்தாலி ஆகியன கால் இறுதிப்போட்டிகளை வென்றதையடுத்து உதைபந்தாட்ட இரசிகர்கள் இத்தாலியிலும், பிரேஸிலிலும் பெரும் ஆரவாரத்துடன் தத்தமது நாட்டவரின் வெற்றிகளைக் கொண்டாடியுள்ளனர்.

இதேவேளை நெதர்லாந்து கால் இறுதிப் போட்டியில் தோற்றதையடுத்து அந்நாட்டில் இரசிகர்கள் ஆத்திரமிகுதியினால் வீதிகளில் இறங்கி கலகம் செய்துள்ளனர். இதனால் பொலிசார் கண்ணீர்ப் புகை பிரயோகம், தடியடிப் பிரயோகம் ஆகியனவற்றையும் மேற்கொண்டிருந்தனர்.

உலகக் கிண்ண போட்டிகளில் ஆசியாவிலிருந்து சவுதி அரேபியா, தென் கொரியா ஆகிய நாடுகள் மட்டுமே பங்குபற்றியிருந்தன.

ஐரோப்பிய நாடுகள், மற்றும் தென் அமெரிக்க நாடுகளே பெருமளவு பங்குபற்றியிருந்தன. இருந்தபோதிலும் உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்ளும் நாடுகளைவிட, அச்சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்ளாத நாடுகளின் இரசிகர்களும் பெருமளவில் போட்டிகளைப் பார்வையிட்டு வருகின்றனர்.

### ஆசிய இரசிகர்கள்

ஆசியாவில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இரசிகர்களை படாதபாடுபடுத்தி வருகின்றன என்று 'Asia Week' என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

ஆசிய நாடுகளில் உலகக்கிண்ண உதைபந்தாட்ட இரசிகர்கள் குறித்து ஒரு விசேட ஆய்வொன்றையும் இச்சஞ்சிகை நடத்தியிருந்தது.

சுமார் 2 பில்லியன் இரசிகர்கள் தொலைக்காட்சிகள் வாயிலாக உலகம் பூராவும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்வையிட்டு வருகின்றனர்.

ஆசிய நாடுகள் பலவற்றில் இரவு 11 மணிமுதல் மறுநாள் காலை எட்டுமணி வரையே நேரடி ஒளிபரப்பு நேரம் காணப்படுகின்றது.

இதனால் தாய்லாந்து, ஹொங்கொங், சிங்கப்பூர், மலேஷியா, தென்கொரியா ஆகிய நாடுகளில் நள்ளிரவு முதல் காலை நேரம்வரை ஆயிரக்கணக்கான இரசிகர்கள் உதைபந்தாட்டப் போட்டிகளின் நேரடி ஒளிபரப்பை பார்வையிடுகின்றனர்.

மலேஷியா, தென்கொரியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் நகரமையங்களில் பிரமாண்டமான தொலைக்காட்சித் திரைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து உதைபந்தாட்ட இரசிகர்கள் நேரடியாகப் போட்டிகளைப் பார்ப்பது போன்ற உணர்வுடன் அப்பிரமாண்டமான தொலைக்காட்சி திரைகளின் முன்பாக அமர்ந்திருந்து போட்டிகளைப் பார்வையிட்டு வருகின்றனர்.

எனவே விடிகாலையில் போட்டிகளைப் பார்வையிட்டோர் நகரமையங்களிலேயே நெடுஞ்சாலைகளில் படுத்துறங்குவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

### குற்றச் செயல்கள் குறைவு

ஹொங்கொங் நாட்டில் தரைக்குக் கீழான இரயில் நிலையங்களிலும் தொலைக்காட்சிகளில் இரசிகர்கள் உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்வையிட குழுமி நிற்கின்றனர்.

தென்கொரியா உலகக் கிண்ண சுற்றுப் போட்டிகளில் பிரவேசித்ததையடுத்து அந்நாட்டில் பாடசாலைகள், தொழிற்சாலைகள், காரியாலயங்கள் என்பன பலதடவைகள் பூட்டப்பட்டிருந்தன.

மாணவர்கள், தொழிலாளர்களின் வருகை குறைவாக இருந்ததனாலேயே பாடசாலைகள், தொழிலகங்கள் பூட்டப்பட்டிருந்தன.

தென்கொரியாவில் தொழிலதிபர்கள், மற்றும் பாரிய அலுவலகங்களின் முகாமையாளர்கள் தமது தொழிலாளர்களை கடினமான வேலைகளைச் செய்ய வேண்டாமென பணித்துள்ளனர்.

போதியளவு தூக்கமின்மை, மற்றும் உதைபந்தாட்ட ஆர்வம் காரணமான சிரத்தையின்மை போன்றவற்றினால் கடினமான பணிகளைப் புரியும்போது விபத்துக்கள் நேர்ந்துவிடும் என்பதனாலேயே கடினமான வேலைகளைத் தவிர்க்கும் படி கோரப்பட்டுள்ளது.

இதேவேளை தாய்லாந்தில் பொலிசார் விடுத்துள்ள அறிக்கையொன்றில் உலகக்கிண்ண சுற்றுப் போட்டிகள் ஆரம்பமானதிலிருந்து தாய்லாந்தில் குற்றச்சம்பவங்கள் கடந்த ஒரு மாதகாலமாகக் குறைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

குற்றச் செயல்களில் ஈடுபடும் கேடிகள், மற்றும் குழப்பகாரப் பேர்வழிகளும் உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்வையிடுவதனாலேயே குற்றச் செயல்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதென்று தாய்லாந்து பொலிசார் கூறியுள்ளனர்.

### ஸ்பெஷல் உணவு

இந்தியாவின் கல்கத்தா நகரும் உலக உதைபந்தாட்டத்தினால் கவர்ந்திழுக்கப்பட்டிருக்கக் காணப்படுகின்றது.

இந்தியாவில் உதைபந்தாட்டத்தில் உன்னதமான நிலையில் உள்ள மேற்கு வங்காளத்தின் தலைநகரே கல்கத்தா ஆகும்.

இந்தியா உலகக் கிண்ண பூர்வாங்கப் போட்டிகள் பிராந்திய ரீதியாக நாடுகளுக்கிடையே நடத்தப்பட்டபோது ஆசிய நாடுகள் சார்பில் கலந்து கொண்டிருந்தது. ஆயினும் இந்தியாவினால் தகுந்த வெற்றிகளைப் பெறமுடியவில்லை.

இருந்தபோதிலும் கல்கத்தாவில் தற்போது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இரசிகர்களை பெரிதும் உலுப்பி விட்டுள்ளன.

கல்கத்தாவில் உள்ள சாப்பாட்டுக் கடைகளில் தயாராகும் விசேட உணவு வகைகளுக்கும் பிரபல உதைபந்தாட்ட வீரர்களின் பெயர்களே சூட்டப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரடோனா மாஜிக், கிலின்ஸ்மன் ஸ்பெஷல் என்று உணவு வகைகள் பெயரிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அன்புக்காக காத்திருப்போர்

## அமெரிக்காவில் புதிய இயக்கம்!

"என்னுடன் படிக்கும் மாணவிகள் திடீர் திடீரென கர்ப்பமுற்று விடுகிறார்கள். சிலர் அதனைப் பெருமையாகக் கருதி குழந்தையைப் பெற்று மகிழ்ச்சியடைவதாகக் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் மகிழ்ச்சி அதிக காலம் நீடிப்பதில்லை. பள்ளிப் படிப்பு சீர்குலைந்து விடுகிறது. பெரும்பாலான பெற்றாரும் இவர்களை அணைத்துக் கொள்ளுவதில்லை. தகப்பன்நிலையிலிருக்க வேண்டியவரும் யார்-எவர் என்று கண்டுபிடிக்க முடியாமலும்; அவ்வாறு தெரிந்து கொண்டாலும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளாமலும் ஆகிவிடுகிறது. இந்நிலைக்குள்ளான வேறு சில பெண்களின் வாழ்க்கை சீரழிந்து போய்விடுகிறது."

இவ்வாறு அமெரிக்க டெக்சாஸ் மாநில

### உலக ரவுண்டப்

வாக்சாச்சே என்ற நகரைச் சேர்ந்த கற்றி பேர்க்ஸ் என்ற 13 வயதேயான மாணவி கூறுகிறார். இத்தகைய நிலை இனிமேல்



வரும் காலங்களிலும் தொடரக் கூடாது என்று கூறும் கற்றி, கற்புடமை பிரகடனம் செய்துகொண்ட 100,000 யுவ-யுவதிகளில் முன்னணியில் நின்றார்.

ஃபுளொரிடா மாநிலம் ஒர்லாண்டோ நகரில் கடந்த (ஜுன்) மாத மத்தியில் நடைபெற்ற 'சதேர்ண் பப்ரிஸ்ற்' 137வது ஆண்டு மாநாட்டு நிகழ்ச்சிகளின்போது, கற்புடமை காக்கும் யுவ-யுவதிகளுக்கான சத்தியப்பிரமாணச் சடங்கும் இடம் பெற்றது. அமெரிக்காவில் பல மாநிலங்களிலிருந்தும் 100,000 இளைஞர்கள் இதில் கலந்துகொண்டு பிரமாணம் செய்தார்கள்.

15 வயதான சாரா ஓவன், தான் சார்ந்த தேவாலயத்தில் கற்புடமை சத்தியப் பிரமாணம் செய்துகொண்டமைக்காக அணிவிக்கப்பட்ட மோதிரத்தை, பலரும் காணும் வண்ணம் காட்டி முத்தமிட்டார்.

"பாலியல் சுதந்திரத்தால் எமக்கு முன்பிருந்த இளம் சமுதாயம் சீரழிந்த நிலை இனிமேலும் எமக்கு வேண்டாம். நாம் ஒரு புதிய தராதரத்திலான இளம் சமுதாயத்தை அமைப்போம். அதற்கான அடையாளமே இந்த மோதிரம்" என்று பெருமையுடன் கூறினார். இத்தகைய சத்தியப்பிரமாணத்தின்படி திருமணத்தின்முன் பாலியல் தொடர்புகள் வைத்திருக்கலாகாது.

இந்த இளைஞர்கள் சத்தியப் பிரமாணம் செய்தமைக்காக ஒப்பமிட்ட பலவர்ண அட்டைகள் மாநாட்டு மண்டபத்தின் பல பகுதிகளிலுமுள்ள தரைகளில் அழகாகப் பரப்பி வைக்கப்பட்டிருந்தன.

'உண்மையான அன்புக்காகக் காத்திருப்போருக்கான செயற்குழு' என்ற அமைப்பே இத்தகைய கற்புடமை பிரமாணத்துக்கான பிரசாரத்தினை தேவாலயங்களுடன் இணைந்து நடத்திவருகிறது.

# மண்டேலாவுக்கு மண்டையிடி தரும் பிரச்சனைகள்

பல ஆண்டுகள் நிறவெறிக்குப் பலியாகிக் கிடந்த தென் ஆபிரிக்கா இன்று ஜனநாயக நாடாக மாறி பெரும்பான்மை கறுப்பு இன மக்களின் அதிகாரத்துடன் நடைபோடத் துவங்கியிருக்கிறது.

அதிபர் டாக்டர் நெல்சன் மண்டேலா, நாட்டின் மேம்பாட்டுக்கென பலதரப்பட்ட பொருளாதாரத் திட்டங்களை-தேர்தல் கால பிரசாரங்களில் தெரிவித்திருந்தார். அவற்றை உடனடியாக அமுல் நடத்துவதில் தாமதம் ஏற்படும் என்றே பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இன ஒதுக்கலினால் ஏற்பட்ட சமச்சீரின்மைக் கேடுகளுக்கான நிவர்த்திக்காக மண்டேலா ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்தியிருந்தார். இதனை நிறைவேற்ற எந்தவிதமான வரி அதிகரிப்புமில்லாமலும் பணவீக்கமின்றியும் 3 சதவிகித வளர்ச்சிக்கு வழி கோலப்பட்டிருந்தது. இத்திட்டம் எதிர்பார்த்த அளவு நிறைவேறும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

1994-95க்கான வரவு செலவுத்திட்டத்தில் மீள் ஒதுக்கீட்டின்மூலம் 70கோடி டொலர் பெறப்பட்டு, 1994வரை, ஆண்டொன்றுக்கு 2.8 பில்லியன் டொலர்வரை இத்திட்டங்களுக்குத் தேறும் என மண்டேலா அறிவித்தார். இதற்கு தனியார் துறையின் பங்கும் தேவைப்படும். அத்துடன் சிறிதளவிலாவது புதிய வரிகளும் விதிக்கப்பட வேண்டிவரும்.

# எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

பல அமைப்புக்கள் இருந்தபோதும் அவற்றில் பல வெறும் கடிதத் தலைப்போடும், எப்போதாவது தமது ஆசைகளை வெளியிட பத்திரிகை பிரசுரம் என்று வெளியிடும் அமைப்புக்களாகவுமே இருக்கின்றன.

இ.தொ.காங்கிரசை அடுத்து வளர்ந்து வரும் சக்தி மலையக மக்கள் முன்னணி என்பதை மறுக்கவியலாது.

ஆகவே-எதிர்வரும் பொதுத் தேர்தலில் திரு.தொண்டாவுக்கு பாரிய சவாலாக இல்லாமல் போனாலும், சவாலாக உருவாகி வருவதை மலையக மக்கள் முன்னணி வெளிப்படுத்தக்கூடும் என்று கருதலாம்.

ஆனால்-பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு மலையகத் தமிழ் பேசும் மக்கள் ஆதரவளிப்பார்களா? ஐ.தே.கட்சிக்கு ஆதரவளிப்பார்களா என்று ஆராய்ந்தால் ஐ.தே.கட்சியின் பக்கமே தராசுத் தட்டு இறங்குகிறது.

சந்திரிக்காவின் புதிய முகம் மக்களிடம் முன்பிருந்த சுதந்திரக்கட்சிமீதான வெறுப்பை ஓரளவு மட்டுமே தணிக்கக்கூடும்.

கிழக்கே மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்களில் முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே தன்னம்பிக்கையோடு இருக்கிறது.

பத்தாவது பாராளுமன்றத்தில் அஷ்ரப்பின் குரல் புது உத்வேகத்துடன் ஒலிக்கக்கூடிய நிலைமை தேர்தல் தீர்ப்பில் தெரியக்கூடும் என்றே நம்பப்படுகிறது.

தமிழ் கட்சிகள் வழக்கம்போல களத்தில் நிற்கின்றன.

தம்மை புலி ஆதரவாளர் என்று காட்டும் ஈரோசின் தந்திரம் இம்முறை அம்பலமாகிவிட்டது.

ஈரோஸ் உரிமை கொண்டாடிய வெளிச்சவீடு சின்னமும் ரெலோவிடம் சென்றுவிட்டது.

கொழும்பில் உள்ள ஈரோஸ் அலுவலகத்திற்கு புலிகளால் கொண்டுவரப்பட்ட குண்டொன்று இடைநடுவில் வெடித்ததோடு ஈரோசின் புலி ஆதரவுப் போக்கு வாக்காளர்களை ஏமாற்றும் முயற்சியே என்பது வெளிச்சமாகிவிட்டது.

அதுதவிர யாழ் மாவட்டத்தில் தமக்கு ஒரு ஆசனமாவது விட்டுத் தருமாறு ஈ.பி.டி.பியிடம் ஈரோஸ் குழுவினர் கேட்டிருந்தனர். அது சரிவராமல் போகவே கொழும்பில் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பும் ஏஜென்சி வியாபாரம் செய்த சுதாகரன் என்பவர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகின்றனர்.

ஆனால் புலிகளோ யாழ் அரச அதிபரைக்கூட வீட்டுக் காவலில் வைத்து அங்கிருந்து வேட்பாளர் பட்டியலை அனுப்பாமல் தடைசெய்துள்ளனர்.

சுதந்திரமான தேர்தல் பற்றி பேசிக் கொண்டே வாய்ப்பான இடம் பார்த்து போட்டியிடும் கூட்டணிகூட வாக்காளர் பட்டியலை அனுப்பாமல் தடுத்துள்ள புலிகள் பற்றி வாய் திறக்கவில்லை.

அமுதர் காலத்தின் பின் கூட்டணியின் அரசியல் துணிச்சல் என்பது புலிகளை தம்மைத் தேடிவராமல் தப்பிக்கொள்ளல் என்றாகிவிட்டது.

இம்முறை கடந்தமுறை செய்தது போல புலிகள் என்ற பெயரில் சுவரொட்டி வெளியிட்டு தேர்தலில் ஆதரவு தேடும் ஏமாற்று வேலைகள் எடுபடப் போவதில்லை.

அதே சமயம் எந்தவொரு தமிழ் கட்சியும் புலிகளை பகிரங்கமாக கண்டிக்கப் போவதுமில்லை. கண்டித்தால் வாக்குகள் குறைந்து போகுமோ என்று அஞ்சுவார்கள்.

பெரிய பதவியில் இருப்பவர்களை அல்லது பெரும் புள்ளிகளை தமது சொந்தம் என்று சொல்லிக்கொள்வதில் சிலருக்கு ஒரு சுகம். ஒரு தற்பெருமை.

அப்படித்தான் இன்றைய கொழும்பு ஈரோசின் நிலையும். புலிகளது 'துரோகிகள் பட்டியலில் உள்ளபோதும் 'வெளிச்சவீட்டு' சின்னத்தை காட்டி வாக்காளர்களை ஏமாற்றப்பார்க்கிறது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஏனைய இரு தமிழ் அமைப்புக்களோடு சேர்ந்து ஈரோஸ் போட்டியிடுகிறது.

ஆனால் ஒரு ஆசனம்கூட அதற்கு கிடைக்கப்போவதில்லை என்பது உறுதியாகி விட்டது. ஏனைய இரு தமிழ் அமைப்புக்களுக்கு ஆசனங்கள் கிடைக்கும்.

அவை தமது ஆதரவு மூலமே பெறப்பட்டதாக தேர்தலின் பின் ஈரோஸ் கூறிக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி திரு.குமாரை கொழும்பில் ஆதரித்து அறிக்கை விட்டுள்ளது.

கூட்டணியின் ஒருசில உறுப்பினர்களும் குமாரின் பட்டியலில் இருக்கிறார்கள்.

திரு.ரவிராஜ், திருமதி. யோகேஸ்வரன், திரு. முகுந்தன் ஆகிய மூவரே கூட்டணி வேட்பாளர்கள்.

ஆயுதம் தாங்கும் குழுக்கள் என்றால் தனக்கு ஒரு 'அலர்ஜி' மாதிரி கூட்டணி பேசுகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் ஆயுதம் தாங்கிய அமைப்புக்களோடு இணைந்து போட்டியிட்டபோது அந்த அலர்ஜி எங்கே போனதோ தெரியவில்லை.

ஆனால்-77 பொதுத் தேர்தலில் தம்மால் 'துரோகி' என்று செல்லமாக அழைக்கப்பட்ட குமார் பொன்னம்பலத்தை மட்டும் கூட்டணி போற்றுவதும் கவனிக்கத்தக்க விடயம்.

எல்லோரும் வெற்றிமாலைக்காக காத்திருக்கிறார்கள்.

யார் கழுத்துக்கு அந்தப் பாக்கியம் என்று ஆகஸ்ட் 16ல் தீர்வுச் சொல்லப்படப் போகிறது.

அதுவரை நாம் எமக்கு கிடைக்கும் தகவல்களை வைத்து தொடர்ந்து தேர்தல் அரங்கை துருவிப்பார்க்கலாம்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# ஏமாற்றப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகள் மீண்டும் ஏமாற நினைப்பது ஏனோ!?

அலசுவது - இராஜதந்திரி

ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள நினைப்பதில் என்ன குறை? யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடவடிக்கைகள் களை கட்டியிருந்த காலத்தில் மக்களைச் சுண்டி இழுக்கும் வகையில் காணப்பட்ட பிரசார வாசகங்களில் ஒன்றாகவே மேற்குறிப்பிட்ட வாசகமும் விளங்கியிருந்தது.

பொதுத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது முனைப்படைந்திருகின்றன.

ஐக்கியதேசியக் கட்சி, மற்றும் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான முன்னணி ஆகியன எதிரும், புதிருமான நிலையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் மும்முரமாகக் குதித்திருக்கக் காணப்படுகின்றன.

1977ம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி பல்வேறு அரசியல் மாற்றங்களை ஏற்படுத்திய நிலையில் கடந்த பதினேழு வருடமாக நாட்டை ஆட்சி செய்திருந்தது.

இலங்கையின் இதுவரையான அரசியல் வரலாற்றில் மிக நீண்டகாலம் ஆட்சி செய்த ஓர் அரசியல்கட்சியாகவும் ஐக்கியதேசியக் கட்சி விளங்குகின்றது.

கூடவே இலங்கையில் நிலவிய பிரிட்டனின் வெஸ்ட் மின்ஸ்டர் (Westminister) பாணியிலான

பாராளுமன்ற ஆட்சிமுறையே இடம்பெற வேண்டுமெனவும் வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால் இன்று திரு.லலித் அத்துலத் முதலி உயிருடன் இல்லை. அவருடன் சேர்ந்திருந்தவர்களும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டுள்ள ஐக்கியதேசியக் கட்சியில் தற்போது தம்மை இணைத்திருக்கக் காணப்படுகின்றனர்.

இலங்கையின் இன்றைய அரசியல் ஒரு 'சாக்கடை'யாக மாறியிருப்பதனையே கடந்தகால நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.

பிரச்னை தொடர்பாக ஆளுங்கட்சியினர் உட்பட தென்னிலங்கையில் பல்வேறு அரசியல் கட்சிகளும் வெளிப்படுத்திய நிலைப்பாடுகள் அப்பிரச்னையைத் தீர்ப்பதில் எந்த வகையிலும் பயன்பட்டிருக்கவில்லை.
வட்டமேசை மகாநாடுகள், ஒப்பந்தங்கள் மட்டுமல்ல பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமான நடவடிக்கைகள்கூட வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஓர் உறுதியான தீர்வைக் காணத் தவறியிருந்தன.
இந்நிலையில் மீண்டும் பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறுவதற்கான முஸ்தீவுகள் முனைப்படைந்துள்ளன.

திரு.மு.சிவசிதம்பரம் போன்றவர்களின் தலைமையின்கீழ் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் நடவடிக்கைகள் வடக்கு-கிழக்கு மக்களின் கோரிக்கைகளை தீவிரமாக வலியுறுத்துவனவாக விளங்கியிருந்தன.

காந்தீயம், சாத்வீகம் என்ற ரீதியில் அரசியல் நடத்திவந்த வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல்வாதிகள் 1977ம் ஆண்டு

இலங்கையில் நாடு தழுவிய ரீதியில் தேர்தல்கள் இடம்பெற்ற காலங்களில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களும் சூடான தேர்தல் பிரசாரக் கூட்டங்களைக் கொண்டிருந்தன.

கண்கவர் ஊர்வலங்கள் உட்பட விடிகாலைப் பொழுதுவரையிலான பிரசாரக் கூட்டங்களும் வடக்கு-கிழக்கில் அன்று இடம்பெற்றிருந்தன.

எப்போதும் சிறந்த பாராளுமன்றப் பிரதிநிதிகளையே வடக்கு-கிழக்கு மக்கள் தேர்ந்தெடுத்து வந்தனர் என தென்னிலங்கையர்களில் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

ஆனால் இன்று அனைத்துமே தலைகீழாக இருக்கக் காணப்படுகின்றன.

மக்கள் பிரதிநிதிகளாக தம்மை அறிமுகப்படுத்தி கூட்ட மேடைகளில் ஆளுயர மாலைகளை மட்டுமல்ல, ஆதரவாளர்களினால் இரத்தத் திலகம் சூட்டப்பட்ட தமிழ் அரசியல் வாதிகளும் இன்று வடக்கு-கிழக்கில் விரைந்து கொண்டிருக்க இந்தப் பிரவாகத்தைத் தடுத்து நிறுத்த முடியாதவர்களாகவே இருக்கின்றனர்.

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில்




பாராளுமன்ற அரசியலை மாற்றியமைத்து, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை இலங்கையில் அறிமுகப்படுத்திய கட்சியாகவும் ஐ.தே.க காணப்படுகின்றது.

எனவே பாராளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் அரசியல் கட்சிகள் அடுத்தமாதம் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலுக்குத் தயாராகி வருகின்ற போதிலும், ஆளுங்கட்சியான ஐ.தே.க, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி மூலமாக தொடர்ந்து நாட்டில் பூரண ஆட்சியதிகாரம் கொண்ட கட்சியாக இருந்து வருகின்றது.

இந்நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் பாராளுமன்ற நடவடிக்கைகள் என்பது வெறுமனே ஒரு 'பொம்மலாட்டமாக' இருந்து வந்துள்ளதையே கடந்த 17 வருட

ஐக்கியதேசியக் கட்சி கடந்த பதினேழு வருடகாலமாக ஆளுங்கட்சியாக இருந்து வருகின்றது. தாம் அறிமுகப்படுத்திய பொருளாதாரத் திட்டங்களே தமது நீண்ட கால ஆட்சிக்கு

உரமூட்டியிருந்தன என்று ஐ.தே.கவினர் கூறிவருகின்றனர்.
ஆனால் இப்பதினேழு வருடகால ஆட்சியில் இலங்கை அடைந்துள்ள நன்மைகளைவிட பாரதூரமான விளைவுகளே பெருமளவில் இருக்கக் காணப்படுகின்றன.

கடந்த பத்து வருடகாலத்தில் வடக்கு-கிழக்கில் தோற்றம் பெற்ற ஆயுதப் போராட்டம், மற்றும் தென்னிலங்கையில் தோன்றியிருந்த ஜே.வி.பி கிளர்ச்சி என்பன இலங்கையில் சமூக பொருளாதார, அரசியல் ரீதியாக பல்வேறு பாதகமான சூழ்நிலைகளையும் உருவாக்கியுள்ளன.

தென்னிலங்கையில் ஜே.வி.பி கிளர்ச்சி நடவடிக்கைகளை அரசு தனது இரும்புக்கரம் கொண்டு நசுக்கியிருந்தது.

தென்னிலங்கையின் அரசியல் கட்சிகளுடன் பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளும் இத்தடவை பாராளுமன்றத் தேர்தல்களத்தில் குதித்துள்ளன. தமிழ் அரசியல் கட்சிகளைப்



அமரர் அமிர்தலிங்கம்

பொதுத் தேர்தலின்போது தமது தொனியை மாற்றி இளஞ் சமூகத்தவரையும் அரசியலில் தீவிர நாட்டங்கொள்ளச் செய்யும் வகையில் உணர்ச்சிகரமான கருத்துக்

கண்ணோட்டங்களை வெளியிட்டிருந்தனர்.
இலங்கைத் தமிழர் போராட்டத்தை உலகின் ஏனைய இனங்களின் விடுதலைப் போராட்டங்களுடன் ஒப்பிட்டு, வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் பிரதேச தனித்துவம், பாதுகாப்பு, சுயநிர்ணய உரிமைகள் என்பவற்றை உறுதி செய்யும் வகையில் தனிநாட்டுக் கோரிக்கையையும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரே முன்வைத்திருந்தனர்.

நாளடைவில் தீவிரவாதிகளாக மாறி ஆயுதப் போராட்டத்தில் குதித்த தமிழ் இளைஞர்கள் பலரும் அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் அதீத விசுவாசிகளாக விளங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தன்னிகரில்லாத முறையில் வெற்றி வாகை சூடியிருந்தது.

ஆனால் இன்று பதினேழு வருடங்களின் பின்னர் தேர்தல்

களத்தில் குதித்திருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர், பத்து வருடங்களுக்கு முன்னர் தாம் வெளிப்படுத்திய கொள்கைப் பிடிப்பு, உறுதிப்பாடு என்பனவற்றை மீண்டும் கொண்டிராதவர்களாகவே இருக்கக் காணப்படுகின்றனர்.

இத்தடவை பொதுத் தேர்தல்களில் என்றுமில்லாதவாறு பெருமளவில் தமிழ் அரசியல் கட்சிகள் குதித்திருக்கக் காணப்படுகின்றன.

தனித்தும், மற்றும் கூட்டுச் சேர்ந்த நிலையிலும் சுமார் ஏழு தமிழ் அரசியல் கட்சிகள் இத்தடவை தேர்தல் களத்தில் குதித்துள்ளன.

எனவே இத்தடவை தமிழ் கட்சிகள் பெருமளவில் தேர்தலில்

## இலங்கை அரசியல் வரலாற்றில் பெருமளவு தமிழ் அரசியல் கட்சிகள் பங்கு கொள்ளும் தேர்தல்!

கால அரசியல் நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.

ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியை (DUNF) ஸ்தாபித்தவர்களில் ஒருவரான திரு.காமினி திசாநாயக்கா உட்பட, அக்கட்சியில் நடவடிக்கைகளில் தீவிரமாக உழைத்தவர்கள் பலர் இன்று ஐக்கியதேசியக் கட்சியில் சேர்ந்திருக்கின்றனர்.

திரு.காமினி திசாநாயக்கா, மறைந்த திரு.லலித் அத்துலத் முதலி ஆகியோர் ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியை ஆரம்பித்தபோது இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை நீக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்திருந்தனர்.

கூடவே இலங்கையின் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஒத்துவராத பல அம்சங்களை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டுள்ளது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியதுடன், மீண்டும்

ஆனால் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் இடம்பெற்று வரும் போராட்டம் தென்னிலங்கை அரசியலாளருக்கு தொடர்ந்து ஒரு சவாலாக இருந்து வருவதுடன், எதிர்காலத்தில் ஆட்சியமைக்க இருப்போருக்கும் ஒரு பெரும் சவாலாகவே இச்சர்ச்சை விளங்கவிருக்கின்றதென்றே கருத வேண்டியுள்ளது.

அடுத்த மாதம் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு தென்னிலங்கையின் அரசியல் கட்சிகள் தமது அரசியல், பொருளாதாரக் கொள்கைகளை விரிவான முறையில் விளக்கி வருபவையாக இருக்கின்றன.

ஆனால் வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்துப் பிரஸ்தாபிக்கையில் பேச்சுவார்த்தைகள் மூலமான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டே அப்பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என்று தென்னிலங்கையின் அரசியல் கட்சிகள் குறிப்பிட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்குப்

பொறுத்தவரை, அவற்றின் செயற்பாடுகள் வேடிக்கையானவையாகவே இருக்கின்றன.

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் என்பனவே பாராளுமன்றத்தில் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்ப் பேசும் மக்களை நீண்டகாலமாகப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்தன.

இக்கட்சிகளின் பிரதிநிதிகள் ஆட்சியிலிருந்தவர்களுடன் அவ்வப்போது கூட்டுச் சேர்த்து அமைச்சரவைப் பொறுப்புக்களையும் வகித்திருந்தனர்.

ஆனால் 1977ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போதே தமிழரசுக் கட்சியினரும் சிரேஷ்ட தமிழ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கியிருந்தனர்.

அமரர் அ.அமிர்தலிங்கம்,

ஆனால் இன்று பதினேழு வருடங்களின் பின்னர் வடக்கு-கிழக்குப் பிரச்னை பல்வேறு பரிமாணங்களையும் பெற்றுள்ளதுடன் அப்பிரச்னை பல்லாயிரக்கணக்கானவர்களையும் பலியெடுத்திருக்கக் காணப்படுகின்றது.

ஓர் அரசியல் பிரச்னையாக இருந்துவந்த வடக்கு-கிழக்கு விவகாரம் கடந்த பத்து வருடகாலத்தில் ஒரு கெடுபிடி யுத்தமாகவே மாறியிருக்கின்றது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு விவகாரம் தற்போது பெரிதும் ஒரு மனிதாபிமானப் பிரச்னை சார்ந்ததாகவே அழிவுகள், அவலங்கள் சூழ்ந்திருக்கக் காணப்படுகின்றது.

இதேவேளை தென்னிலங்கையில் தேர்தல் சமாச்சாரங்கள் சூடுபிடித்திருக்கின்றன. சுவரொட்டிகள், பலவர்ண கட்சிக் கொடிகள் அரசியல் என்பவற்றுடன் வாக்குறுதிகளை அள்ளி வீசும் பொதுக் கூட்டங்களிலும் அரசியல் கட்சிகள் குதித்திருக்கின்றன.

குதித்துள்ளபோதிலும் வடக்கு-கிழக்கின் அடிப்படை அரசியல் பிரச்னைகளைத் தீர்ப்பதில் இவை ஒன்றுக்கொன்று எவ்வளவு தூரம் ஒற்றுமைப்பட்டிருக்கும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரை மனிதாபிமான ரீதியில், ஒரு கௌரவமான, உறுதியான அரசியல் தீர்வே இன்று தேவைப்படுகின்றது.

எனவே உறுதிமிக்க அரசியல் போராட்டங்களை நடத்தி திட்ட வட்டமான அரசியல் தீர்வை ஏற்படுத்திய பின்னர் தேர்தல்களில் குதிப்பதை விடுத்து, தகுந்த தீர்வுத் திட்டங்களோ, அரசியல் சிந்தனைகளோ இன்றி பாராளுமன்றத்தினுள் பிரவேசிப்பதைக் குறியாகக் கொண்டு நிற்கும் தமிழ் அரசியல்கட்சிகளின் நிலைப்பாடு விசனத்துக்குரியதாகவே இருக்கின்றது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## ஒரு எச்சரிக்கைத் தகவல்

# கர்ப்பிணித் தாய்மார்கள் கவனிக்க

கர்ப்பிணித்தாய்மார் எத்தகைய காட்சிகளை தொலைக்காட்சியில் பார்க்கிறார்களோ அதற்கேற்ப அவர்கள் வயிற்றில் வளரும் குழந்தைகள் பாதிப்படைகின்றன. இக்கருத்தினை கடந்த 7 வருடங்களாக ஆராய்ந்த ஜப்பானிய விஞ்ஞானி டாக்டர் சீச்சி ரொமோஜோ கூறுகிறார்.

"தொலைக்காட்சிகளைப் பார்க்கும் கர்ப்பிணித்தாய்மார்களிடம் எத்தகைய தாக்கம் ஏற்படுகிறது என்பதனைக் கண்டறியவே ஆய்வுகளை நடத்தினோம். ஆனால் சற்றும் எதிர்பாராத வகையில், வயிற்றிலுள்ள சிசுக்களுக்கு ஏற்படும் விளைவுகளைக் கண்டறிய நேர்ந்தது" என்கிறார் டாக்டர் சீச்சி.

சண்டைக் காட்சிகள், திகிலூட்டும் பயங்கரக் காட்சிகளைப் பெரிதும் விரும்பிப் பார்க்கும் தாய்மார்களின் குழந்தைகள் பெரும்பாலும் வளமைக்கு மாறாக எடை குறைந்தும் அழகற்றும் காணப்படுகின்றன. தொலைக்காட்சியில் கவனம் செலுத்தாத தாய்மார்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைவிட இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் 57 சதவிகிதம் பாதிப்படைகின்றனர்.

காதல் காட்சிகள் மற்றும் இசை தொடர்பான அம்சங்களை விரும்பிப் பார்க்கும் தாய்மார் நல்ல தேகாரோக்கியமும் அழகும் அறிவும் நல்ல குணநலன்களும் கொண்ட குழந்தைகளைப் பிரசவிக்கின்றனர் என்று டாக்டர் சீச்சி தெரிவிக்கிறார்.

டாக்டர் சீச்சி தனது ஆய்வுகளுக்கு 18 வயதுமுதல் 40 வயதுவரையிலான 346 கர்ப்பிணிகளைப் பயன்படுத்தியுள்ளார்.



இவருடைய ஆய்வின் பயனாகக் கிடைத்த தரவுகளில் சில:

- செய்திகள் மற்றும் பிறநாட்டு உள்நாட்டு விவகாரங்களை ஆர்வத்துடன் பார்க்கும் தாய்மார்களின் குழந்தைகள் எப்போதும் படபடப்புக் கொண்டதாகவும் எளிதில் அச்சமடையக்கூடிய தன்மையுடனும் காணப்படுவர்.
- பேச்சு, விவாதம், உரையாடல் மற்றும் நாடகம் போன்ற நிகழ்ச்சிகளில் நாட்டம் கொண்ட தாய்மாரின் குழந்தைகள் பேசும் சக்தி அதிகமுள்ளவர்களாக இருப்பர். இவர்கள் பிறந்து 8 மாதங்களுக்குள்ளாகவே பேசத் தொடங்கி விடுகின்றனர்.
- விளையாட்டுகளுடன் தொடர்பான காட்சிகளை விரும்பிப் பார்க்கும் தாய்மார் எப்போதும் சுறுசுறுப்புடன் காணப்படுவர். இருப்பினும் இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் மிகவும் சுறுசுறுப்பாகவும் படு சுட்டிகளாகவும் வளர்வார்கள். இவர்கள் துடிப்புத்தனம் மிக்கவர்களாக விளங்குவதனால் எவராலும் இவர்களை அடக்க முடியாதிருக்கும்.
- கல்வி மற்றும் கலாசார நிகழ்ச்சிகளோடு ஐக்கியமாகும் தாய்மாரின் குழந்தைகள் கிரகிக்கும் சக்தி படைத்தவர்கள். எந்தப் பொருளையும் தொட்டுத் தடவி ஆராய்ந்தறியும் பண்பு கொண்டவர்களாக இவர்கள் வளருவார்கள்.

"கர்ப்பிணிகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கலாகாது என்பதல்ல எமது கருத்து. தங்கள் வயிற்றில் வளரும் சிசுக்கள் தாங்கள் பார்க்கும் காட்சிகளின் தன்மையினால் உருவாக்கப்படுகிறார்கள் என்பதனால் தங்கள் குழந்தைகள் நல்ல படியாக வளரவேண்டும் என்ற கருத்தினை மனதிலிருத்தி அதற்கேற்ற காட்சிகளில் நாட்டம் கொள்வது அவசியம் என்பதனையே வலியுறுத்த விரும்புகிறோம்" என்று டாக்டர் சீச்சி கூறுகிறார்.

இது ஒரு ஆய்வு முடிவு. முற்றிலும் நூற்றுக்கு நூறுவீதம் சரியாகவே இருக்கும் என்று அர்த்தமல்ல.

எனினும் முரசின் வாசகர்களது தகவலுக்காக அதனைத் தந்துள்ளோம்.

## லேடீஸ் ஸ்பெசல்

## கைவேலைப் பகுதி - நீங்களும் செய்து பாருங்கள்


# செவ்வரத்தம்பூ

எஸ்-எஸ்

**தேவையான பொருட்கள்:**
தங்கநிறக்கம்பி- 1 டசின்
ஸ்ரொக்கிநெற்- சிவப்பு
ஸ்ரொக்கிநெற் பச்சை
மகரந்தம்
கம்ரேப்(ஒட்டும் நாடா)
சிறுதுண்டு கிறேப் பேப்பர் (சிவப்பு)
கட்டுக்கம்பி
நூல்

**செய்யவேண்டிய பூக்களுக்கான அளவுகள்:**

1. **பெரிய பூ**
 8 அங்குல அளவில் 5 துண்டுகள்
2. **நடுத்தர பூ**
 6 1/2 அங்குல அளவில் 5 துண்டுகள்
3. **சிறிய பூ**
 5 1/2 அங்குல அளவில் 5 துண்டுகள்
4. **மொட்டு**
 6 அங்குல அளவில் 3 துண்டுகள்
5. **பெரிய இலை**
 8 அங்குல அளவில் 2 துண்டுகள்
6. **சிறிய இலை**
 5 அங்குல அளவில் 3 துண்டுகள்




**செய்முறை:**

மேற்கூறப்பட்ட அளவிலான தங்கநிறக் கம்பிகளை வெட்டி எடுத்து ஒரு கம்பியின் இரு நுனிகளும் சேரும் வண்ணம் குறட்டினால் முறுக்கவும். முறுக்கிய கம்பிகளை (பூவிற்கான கம்பியை) பகுதி பகுதியாக வைக்கவும். அதன் பின்னர் (படம் 1ல்) காட்டப்பட்டவாறு இதழின் மேற்பகுதியை விரல்களினால் நெளிவுகளை அமைத்துக்கொள்ளவும். அவ்வாறு அமைத்த இதழ்களுக்கு சிவப்பு நிற ஸ்ரொக்கிநெற் கட்டவும்.

- இப்பூவிற்கு மகரந்தம் கட்டும் முறை வேறுபாடானது.

**மகரந்தம் கட்டும் முறை:**

10 அங்குல நீளமான மெல்லிய கட்டுக் கம்பியில் மகரந்தம் 1+1/2,ஐ முதலில் வைத்து முறுக்கி கிறேப் பேப்பரால் இரண்டு தரம் நெருக்கமாக இறுக்கி சுற்றி அதன் பின் மகரந்தத்தில் இன்னோர் 1+1/2ஐ எடுத்து அவ்வாறு செய்யவும்.

இதே போன்று இன்னொரு 1+1/2 மகரந்தத்தை எடுத்து (படம் 3ல் காட்டியவாறு) செய்யவும். கட்டுக்கம்பிக்கு (4 1/2 அங்குலம் வரை) கிறேப் பேப்பர் சுற்றவும்.

**பூவினை கட்டும் முறை:**

படம் 3ல் காட்டியவாறு அமைக்கப்பட்ட மகரந்தத்தில் 3 1/2 அங்குலத்தை அளந்து அதில் முதலாவது 8 அங்குல இதழை வைத்து நூலினால் கட்டவும். கட்டிய இதழின் அருகருகே அடுத்த நான்கு இதழ்களையும் வைத்து நூலினால் கட்டி கம்ரேப்பினால் சுற்றிக்கொள்ளவும்.

அதன் பின்னர் இதழின் நெளிவான பகுதியை சிறிது கீழ்நோக்கி வளைக்கவும். இவ்வாறு அடுத்த பூக்கள் இரண்டையும் அமைக்கவும்.

**மொட்டு:**

பூவிற்கு மகரந்தம் கட்டியதுபோன்று கட்டவும். அதனை அடுத்து இதழ் ஒவ்வொன்றையும் அருகருகே வைத்து கட்டவும். கட்டும்போது மகரந்தத்தின் முனைப்பகுதி சிறிது வெளியில் தெரிய வேண்டும். பின்பு கம்ரேப் சுற்றி ஒரு இதழை மட்டும் கைவிரல்களால் விரிக்கவும். அப்போதுதான் மலரும் மொட்டுபோல் இருக்கும்.

**இலை:**

இலைக்கென மேலே கொடுக்கப்பட்ட அளவுகளை எடுத்து இரு நுனிகளும் சேரும் வண்ணம் குறட்டினால் முறுக்கவும். முறுக்கிய கம்பிகளை (படம் 2ல்) காட்டியவாறு அகலமாக விரித்து நெளிவுகளை அமைத்து பச்சைநிற ஸ்ரொக்கிநெற்றினால் செய்து கொள்ளவும். அவ்வாறு ஏனைய இலைகளையும் அமைத்து நூலினால் கட்டப்பட்ட இடத்தில் கட்டுக்கம்பியால் சுற்றிகட்டி பின் கம்ரேப் சுற்றிக் கொள்ளவும்.

**கொப்பாக கட்டும் முறை:**

தடிப்பான கட்டுக்கம்பியை எடுக்கவும். எடுத்த அக்கம்பியை மடித்து அப்பகுதியில் சிறிய இலையில் ஒன்றையும் மொட்டையும் வைத்து கம்ரேப்பால் சுற்றிக்கொண்டு சிறிய பூவையும் இலையில் ஒன்றையும் வைத்து மீண்டும் கம்ரேப்பினால் சுற்றவும். இவ்வாறு அடுத்த இரு பூக்களையும் இலைகளையும் வைத்து கம்ரேப்பினால் சுற்றி கொப்பிலுள்ள பூக்களை பார்வைக்கு அழகாக்கிக் கொள்ளுங்கள். இப்போது செடியில் இருந்து பறிக்காத செவ்வரத்தம்பூ உங்கள் கரங்களில்.

## தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் தங்க நகைப் பரிசுத்திட்டம்

## இப்போது அனுப்பலாம்

இதுவரை முரசில் வெளியான 1 முதல் 20 வரையான பரிசுக் கூப்பன்கள் உங்களிடம் பத்திரமாக இருக்கிறதல்லவா? அவற்றை ஒன்று சேர்த்து தபால் கவரில் இட்டு இப்போது நீங்கள் அனுப்பலாம். உங்கள் பரிசுக் கூப்பன்கள் எமக்கு வந்துசேர வேண்டிய கடைசித் திகதி 30.7.94.

அனுப்பவேண்டிய முகவரி:
லேடீஸ் ஸ்பெசல்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு

மு.குறிப்பு: நேரிலோ - பதிவுத் தபால்களோ ஏற்கப்படமாட்டா.

## வீட்டுக்குறிப்பு



சாண்ட்விச் செய்யும்போதும் ,பாண் துண்டில் மாஜரீன் பூசும்போது மாஜரினுடன் சிறிதளவு பால் சேர்த்து கலந்து பாண் துண்டில் பூசிப்பாருங்கள். வெகு சுலபமாக பாண் முழுக்க மாஜரீனைப் பூச முடியும். சுவையும் கூடும்.




தேர்தலில் இன்று தாங்கள் வாக்கு கேட்டுவரும் கட்சிக்கு எதிராக வசை பாடியவர்கள் என்று ஒரு கணக்கெடுப்பு நடத்திப் பாருங்கள்.

அப்போதுதான் பிழைப்புவாத பிரமுகர்களது பின்னணி புரியும். போகும் இடமெல்லாம் அவர்கள் போடும் பிற்பாட்டின் போலித் தனமும் பிடிபடும்.

கடந்த ஐந்து வருடமாக ஒரு கட்சிக்குள் இருந்து கிடைத்ததையெல்லாம் பங்குபோட்டுக் கொண்டார்கள்; அடுத்த ஐந்து வருடத்திற்கு கிடைப்பதை பங்குபோட வசதியான இடம் பார்த்து பாய்கிறார்கள்.

இவர்களுக்கு எல்லாம் தம் கொள்கைகளை மாற்றிக்கொள்ள ஐந்து நிமிடமே போதும்.

ஆனால், ஐந்துவருடம் அனுபவிக்க கிடைத்தால் பொல்லாத தவறுகளையும் உடனிருந்து செய்துகொண்டிருப்பார்கள்.

இனி அனுபவிக்க முடியாது என்னும் போது ஐந்து நிமிட முடிவில் அடுத்த பக்கம் தாவிவிடுவார்கள்.

பிழைக்கத் தெரிந்த இந்த நபர்கள் கட்சித் தலைமைகளுக்கும் தேவையாக இருக்கிறார்கள்.

பிழைகளை சுட்டிக்காட்டித் திருத்துபவனைவிட தாம் கொடுப்பதை வாங்கி கூட இருந்து பிழைத்துக்கொள்பவர்களைத்தான் தலைமைகளுக்கும் பிடித்துக் கொண்டிருக்கிறது.

அறிந்தே தவறு செய்கிறவர்கள் தங்களை தட்டிக்கொடுப்பவர்களால் தற்காலிகமாகக் குளிர்ந்து கொள்ள நினைக்கிறார்கள்.

அதனால் பிழைப்புவாதிகள் பிரபலம் பெற்று நடமாடமுடிகிறது.

தேவையற்ற பாரம் என்று அவர்கள் இருக்கும் கதிரைகள்கூட கவலைப்படப் போகும் நபர்களும் முதிரா அரசியலின் பிரதிநிதிகளாக முகம் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். பாவம் பாராளுமன்றக் கதிரைகள்!

எனவே-விழிப்பாயிருப்பது முக்கியம். தேர்தல் திருவிழாவில் வழிப்பறிக்காரர்களிடம் வாக்குகளை பறிகொடாதிருப்பது அவசியம்.

வாக்குரிமை ஜனநாயகத்தில் வலிய ஆயுதம். அது தவறாக பயன்படுத்தப் பட்டால் அதுவே ஜனநாயகத்திற்கு அபாயமாகவும் மாறிவிடும்.

## சிந்திக்கலாம் இங்கே...

"அரசியலில் நிரந்தர நண்பனும் கிடையாது. நிரந்தர எதிரியும் கிடையாது."

இதை யார் சொன்னார்களோ தெரியாது.

சொன்னவர் எந்த நோக்கத்திலே சொல்லியிருப்பாரோ அதுவும் தெரியாது.

ஆனால்-நம் நாட்டு அரசியல் வாதிகள் உட்பட பல அரசியல்வாதிகளுக்கு அந்த வாசகம் மட்டும் தங்களை நியாயப்படுத்தும் மிக வசதியான சுலோகம் ஆகிவிட்டது.

தனிப்பட்ட ரீதியிலும் சரி, அரசியலிலும் சரி ஒருவன் என்ன சொல்கிறான் என்று பார்ப்பதைவிட என்ன செய்கிறான் என்று பார்த்துத்தான் அவன் எப்படியானவன் என்று எடை போடவேண்டும்.

அப்படிப் பார்க்கத் தவறும்போது தான் தனிப்பட்ட வாழ்விலும், பொதுப்பட்ட அரசியல் அரங்கிலும் ஏமாந்து போகிறோம்.

அதனால்தான் வாய் உள்ளவன் பிழைத்துக்கொள்வான் என்பதை அரசியலில் பிழைப்பு வாதிகளாக உள்ளவர்கள் தமக்கும் பிடித்தமான பழமொழியாக வரித்துக்கொண்டார்கள்.

பேசுவதற்கும்-எழுதுவதற்கும் முற்றிலும் மாறான அரசியல் நடைமுறைகள்தான் இங்கே அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

அரசியல் கட்சிகள் வெளியிடும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் அந்தக் கட்சித் தலைவர்களால்கூட படித்துப் பார்க்கப்படுவதில்லை.

அது மக்களை வசப்படுத்த மட்டுமேயல்லாமல் தங்கள் மனதில் வைத்துக்கொண்டு மறக்காமல் நிறைவேற்றவல்ல என்றுதான் அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாகவும்- சிறப்பாகவும் நம் தமிழர்களது அரசியல் இரு கூறாக இருக்கிறது.

இங்கே-எழுதுவதற்கென்று சிலரும் பேசுவதற்கு என்று சிலரும் இருக்கிறார்கள்.

இவர்கள் மிக அழகாகவும், ஆணித்தரமாகவும் எதிர்தரப்புமீது வசைகளை எடுத்து வீசத்தெரிந்தவர்களாக இருப்பார்கள்.

அதற்காக மட்டுமே இவர்களுக்கு கட்சித் தலைமை மரியாதை கொடுக்குமே தவிர, அவர்கள் எழுதும், பேசும் கருத்துக்களுக்கு அவர்கள் கட்சிக்குள்கூட மதிப்பிருக்காது.

அவன் எதையோ எழுதிக்கொண்டிருப்பான். எல்லாக் கட்சியும் மட்டம், என் கட்சி மட்டுமே இலட்சியத்தின் உச்சம் என்று பேசிக்கொண்டிருப்பான்.

"அய்யா இங்கே வா. உன் கட்சிக்குள்ளும் ஏனைய கட்சிகள் போலத்தானே குப்பைகளும், கூழங்களும் கிடக்கின்றன. பார்த்தாயா அப்பனே?"

உடனே அவன்; "அடடா அப்படியா? எனக்குத் தெரியாதே?" என்று அப்பாவித்தனமாகப் பதில் சொல்லுவான்.

மனச்சாட்சியே இல்லாத சிலர் மட்டும் அதற்கும் ஒரு வறட்டு நியாயம் சொல்லி விட்டு நடையைக் கட்டிவிடுவார்கள்.

அவர்களுக்கும் தெரியும் தவறுதான் என்று. ஆனால் சொல்ல மாட்டார்கள்.

உண்மை பேசினால் அரசியலில் உருப்பட முடியாது என்று ஒரு அகராதி இங்கே உருவாக்கப்பட்டுவிட்டதல்லவா?

எனவே-பிழைக்கத் தெரிந்த பிரமுகர் கூட்டம் ஒன்றும் அந்த அகராதியை அணைத்துக்கொண்டு அரங்கில் தோன்றிவிட்டது.


இன்று வாக்குக் கேட்டு வருகிறவர்களில் எத்தனைபேர் கடந்த பொதுத்

(மீண்டும் சிந்திக்கலாம்)

## மணவாழ்வில் புற அழகின் அவசியம்!

# இல்வாழ்வு செழிக்க இதோசில அழகுக் குறிப்புகள்

-ருக்கா-நாதன்-



முகம், உடல் எல்லாம் அழகாய் இருக்க வேண்டும். சிலருக்கு உடலில் வேண்டாத மணம் அல்லது வியர்வை நாற்றம் ஏற்பட இடமுண்டு. அதுவும் வெய்யில் காலங்களில் அதிகமாய் இருக்கும் ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். பருவங்களுக்கு ஏற்ற மாதிரி உடைகளை மாற்ற வேண்டும். முகத்திற்கு அடிக்கடி பேர்சல் செய்யவேண்டும் வெளியில் அணியும் உடைகளுக்கேற்ற மேக்கப் போடவேண்டும்.


உடை அணியும் போது உங்களுக்கு அவை ஏற்ற மஜ் ஆக அணிய வேண்டும் நெற்றியில் உங்கள் முக வடிவத்திற்கு ஏற்ற மாதிரி பொட்டு குங்குமம் அணியலாம்.



**தலைமயிர்:**

வாரம் முழு வதும் வேலை செய்வதால் முகம் களைப்புடன் காணப்படும். தலை முடியும் வேர்வை பட்டு மணமாக காணப்படும். வாரம் 2,3 முறை ஷாம்பு போட்டு தலை க்ழுவ வேண்டும் முடி துர் நாற்றம் இல்லாமல் இருக்கவேண்டும். கோடை காலத்தில் மைல்ட் ஷாம்பூ பாவிக்கவும். ஒருவரை ஒருவர் ஈர்க்கும் படியாக முடி அலங்காரத்தை அடிக்கடி மாற்றி கொள்ளலாம். தலைமயிரை பிரஷ் பண்ணி எந்த நேரமும் அழகாய் இருக்க பார்த்துக் கொள்ளவும்.

**வாயின் தூய்மை**



கணவன் மனைவிக்கிடையே உள்ள அன்பு வலுவடைய நீங்கள் உங்கள் பல், வாய் இவைகளை மிகவும் கவனிக்க வேண்டும். மாவுப்பொருள்கள், இனிப்பு வகைகளை சாப்பிட்டால் உடனே பிரஷ் போட்டு பல் கழுவவேண்டும். வாய் துர்நாற்றம் வீசினால் பற்களில் பாக்டீரியாக்களினால் தான் வரும் என்று நினைக்க வேண்டும். 1 நாளைக்கு 1 ஆப்பிள் சாப்பிடுவது நல்லது. எது சாப்பிட்டாலும் வாய் உடனே கொப்பளிக்க வேண்டும். அடிக்கடி மவுத் வாஷ் (Mouth-Washes) நிறைவுள்ளன. எதுவானாலும் பாவிக்கலாம். உதடு காய்ந்திருந்தால் லிப் வஸ்லின் பாவிக்கவும். உங்கள் நிறத்திற்கேற்ற லிப்ஸ்டிக் பாவிக்கவும். நீங்கள் பாவிக்கும் கைக்குட்டையும் லைட் கலராக இருக்க வேண்டும்.



**ஹண்ட் பேக்ஸ்:**

உங்கள் உயரம், உடுக்கும் உடைகளை பொறுத்து தான் ஹண்ட்பேக்ஸ் பாவிக்க வேண்டும். கட்டையானவர்கள் பெரிய பாக் கொண்டு சென்றால் அழகிருக்காது. ஒவ்வொரு வைபவங்களுக்கு ஏற்ற முறையில்தான் பாக் கொண்டு சொல்ல வேண்டும். முக்கியமாக தேவையான பொருட்களை மட்டும்தான் வைக்க வேண்டும். மேக்கபிற்கு தேவையானவைகளை ஒரு பாக்கில் போட்டு ஹண்ட் பாக்கில் வைக்கவேண்டும். அதிக கொம்பார்ட் மென்ட் உள்ள ஹண்ட்பாக் பாவிக்கலாம். எல்லா பெண்களையும் போல் முன்னேற்றமாக வரவேண்டும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# தின்ன-தின்ன ஆசை! தகவல் பெட்டி

## உண்டதனால் உலகிலேயே குண்டான பெண்!

படுத்த படுக்கைதான். எழுந்திருக்கவோ அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திரும்பவோ முடியாது. அன்றாடப் பணிகள் அத்தனையையும் படுக்கையிலேயே முடித்து விடுகிறார். இதுதான் உலகிலேயே அதிக எடைகூடிய பெண்மணி எனக் கணக்கிடப்பட்டிருக்கும் காரோல் யாகரின் இன்றைய நிலை.

அமெரிக்க மசாசுசெட்ஸ் மாநிலத்தில் ஃபிளின்ற் நகரைச் சேர்ந்த இவருக்கு 34 வயதாகிறது. 5 அடி 7 அங்குலம் உயரமுள்ள இவருடைய எடை 1,600 இறாத்தல். மூச்சு விடமுடியாமல் தவிக்கும் இவருக்கு செயற்கை சுவாசம் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

வாயையும் வயிற்றையும் கட்டுப்படுத்த முடியாது கண்ட கண்ட உணவுகளை-எண்ணை மற்றும் கொழுப்பு அதிகமான பண்டங்களை-தேடித்தேடி உண்டமையினால்தான் தனக்கு இக்கதி நேர்ந்தது என்று புலம்பும் இவரை அமெரிக்காவின் உணவியல் விற்பந்நரான றிச்சாட் சிமன்ஸ் கடந்த மே மாதக் கடைசியில் போய்க் கண்டார். உடனடியாகவே கரோலின் எடையைக் குறைத்து அவரைக் காப்பாற்ற திட சங்கற்பம் பூண்டுள்ளார்.

கரோலின் எடை கனவேகத்தில் குறைக்கப்பட வேண்டும் என்றும் தவறினால் 3 அல்லது 4 மாதங்களில் இறந்துவிடுவார் என்றும் றிச்சாட் எச்சரித்துள்ளார்.

இவருடைய எடை குறைக்கப்படுவதற்கு முன்னதாக உலக சாதனைப் பதிவான கின்னஸ் புத்தக வெளியீட்டாளர்களின் பிரதிநிதிகள் கரோலின் புகைப்படங்களையும் ஏனைய விபரங்களையும் சேகரித்துச் சென்றுள்ளனர்.

அடுத்துவரும் கின்னஸ் புத்தகத்தில் "உலகிலேயே அதிக எடை கூடிய பெண்" என்ற இடத்தினை கரோல் பெறுவார். மூச்சு விடுவதே சிரமமாகத் திணறிய போதிலும் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறப் போவதை அறிந்து மிகவும்' தென்புடனும் மகிழ்ச்சியுடனும் காணப்படுகிறார்.

உடம்பு பருத்து எடை கூடியமையினால் படுத்த படுக்கையிலேயே கிடக்கும் பாற் மக்கௌலிஃப் என்ற 38 வயதுப் பெண்மணியைப்பற்றி கடந்த மார்ச் 6-12 வெளியான 41வது முரசின் 14ம் பக்கத்தில் செய்தி பிரசுரித்திருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். பர்றின் எடை ஆக 448 இறாத்தல் மட்டுமே. இவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஷெஃபீல்டில் வசிப்பவர். உறவு முறை என்று கூறிக்கொள்ள எவருமே அற்ற அநாதை போன்றவர்.

ஆனால் கரோல் சிம்ஸ் கொடுத்து வைத்தவர். இவருக்கு ஒரு காதலன் இருக்கிறார். லாரி மாக்ஸ் வெல் என்பது அவரது பெயர். 14 வயதில் ஹீதர் என்ற மகளும் உண்டு. இவர்களுடைய உதவியுடன் உணவியல் நிபுணர் றிச்சாட் சிம்ஸ் காட்டும் வழியில் தனது எடை குறைப்புக்கான திட்டத்தை ஆரம்பித்துள்ளார். றிச்சாட், கரோலுக்கு வேண்டிய சிறப்பு உணவுப் பட்டியலைத் தயாரித்தளித்திருக்கிறார். சில பயிற்சி முறைகளை வீடியோ நாடாக்களில் பதிந்து கொடுத்திருக்கிறார்.

உடல் பருமனும் எடையும் அதிகரித்து வந்தமையினால் கடந்த வருடம் கிராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அப்போது அவருடைய எடை 1,189 இறாத்தலாகவிருந்தது. அங்கு தினமும் 1,200 கலோரி உணவு மட்டுமே தரப்பட்டு 7 மாதங்களில் 400 இறாத்தல் எடை குறைக்கப்பட்டு 788 இறாத்தல் எடையுடன் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். எடை கூடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் எச்சரித்திருந்தனர். ஆனால் கரோலுக்கு ஆசை விடவில்லை. பழையபடி வழமையான உணவுகளை உட்கொள்ளத் தொடங்கியதன் பயனாக இன்று 10 முழு ஆண்களின் மொத்த எடைகொண்டு காணப்படுகிறார்.

இப்பொழுது றிச்சாட் சிம்ஸ் மிகக் கடுமையான எச்சரிக்கையுடன் சிகிச்சையைத் தொடங்கியுள்ளார்.

கரோல் உயிர்வாழ்வதற்கு இதுவே கடைசி சந்தர்ப்பம் என்று றிச்சாட் கூறியிருக்கிறார்.






### என்ன செய்யலாம்?

இந்த ஒட்டகச் சிவிங்கியாருக்கு கழுத்தில் என்ன சுளுக்கா? இல்லவே இல்லை. சுளுக்கென்றால் சுலபமாக சரி செய்துவிடலாம். இது பிறக்கும்போதே உள்ள குறைபாடு! என்ன செய்யலாம்? அதைத்தான் மிருக வைத்தியர்களும் மூளையை பிசைந்து யோசிக்கிறார்கள். முடிவு மட்டும் முயற்கொம்பாக இருக்கிறது. கலிபோர்னியாவின் மிருகக் காட்சிச் சாலையில் 45 பாகைவரை முடங்கியிருக்கும் கழுத்துடைய இந்த சிவிங்கியார் சீவித்து வருகிறார்.

## ஆஹா! ஆஹா!!

### உண்டகளை கரடிக்கும் உண்டு!



ஜேர்மன்-ஃபிராங்க்ஸ்பேர்ட் நகர மிருகக் காட்சிச்சாலையில்-மதிய வெய்யிலில் ஆனந்தமாக குறட்டைவிட்டுத் தூங்கும் கரடியார். குளிர்காலமானதால் நிலச் சூடு சுகமாக இருக்கிறது போலும். ஆசியாவில் காணப்படும் இக்கறுப்பு நிறக்கரடி அமெரிக்காவில் உள்ள கரடி இனத்தையும் ஒத்ததாகவே இருக்கிறது. இதன் மார்பில் பிறைவடிவமான வெள்ளை வரி தென்படுவதால் இதனை 'சந்திரக்கரடி' என்று அழைப்பார்கள். முழுவளர்ச்சி பெற்றால் இந்தக் கரடியார் 265 இறாத்தல் எடைவரை வளருவார். ஒரு பெரும் மாட்டையே அடித்து தன் வயிற்றில் போட்டுக்கொள்ளும் பலசாலியாகவும் மாறுவார்.

உண்டகளை தொண்டருக்கும் உண்டு. இந்த குண்டுக் கரடியாருக்கும் உண்டு.



### ஒரு வித்தியாசம்

இது என்ன விளையாட்டு என்று யோசிக்கிறீர்களா? இதுவும் செஸ் விளையாட்டுத்தான். இதில் செஸ்போட் வட்ட வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளதுதான் இதன் விசேஷம். ஆடுவது என்னவோ அதே முறைப்படிதான். ஆனால் இந்த வட்ட வடிவ செஸ் போட்டில் இரண்டு பச்சை நிறக்கட்டம் இருக்கும். இதில் காய்களை நகர்த்தலாம். ஆனால் சிவப்புக் கட்டங்களிலோ எதுவும் நுழையக்கூடாது. மேலும் 'ஆர்க்'கையும், 'பிஷப்'பையும் S வடிவத்தில்தான் நகர்த்த வேண்டும். பழமையிலும் புதுமை.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# டும்-டும் செய்திகள் 3



பார்த்திபன்
படம்-சரிகமபதநி

## செய்தி-I
### பொன்னான வாய்ப்பு!

'தமிழ் பொண்ணு' படத்தில் அறிமுகமானவர் வந்தனா. அந்த வந்தனாவுக்கு வாய்ப்புக்கள் வரவில்லை. திண்டாடிக் கொண்டிருந்தார். 'மன்னனுக்கு மரியாதை' படத்தில் தங்கை வேசம் கிடைத்தது.

கிடைத்த வாய்ப்பு புளியங்கொம்பாக இல்லாவிட்டாலும் அந்தப் படப்பிடிப்பில் ஒரு புளியங்கொம்பு கிடைத்துவிட்டது.

அதாகப்பட்டது மலேசியாவில் உள்ள இளைஞர் ஒருவரின் நட்பு கிடைத்தது. கண்டனர் காதல்கொண்டனர். திருப்பதி போய் இரகசியமாக மாலை மாற்றி டும்-டும். தேனிலவுக்கு மலேசியா பயணம். சென்னையில் வசதி போதாதோ?

## செய்தி-2
### பாண்டியன் தங்கை

'பாண்டியன்' படத்தில் ரஜினிகாந்தின் தங்கையாக நடித்தவர் சாந்தினி. இவர் 'வா முருகா வா' படத்தில் நடித்துக்கொண்டிருந்தபோது முஸ்லிம் தொழிலதிபர் ஒருவரோடு காதல் மலர்ந்தது. இப்போது இருவரும் இரகசியமாகத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

## செய்தி-3
### காயத்திரிக்கும் டும்-டும்

'அரண்மனைக்கிளி' படத்தில் நடித்தவர் காயத்திரி. இலவு காத்த கிளியாக வாய்ப்பு வரும் என்று காத்திருந்து ஏமாந்து போனார்.

அந்த நேரத்தில் பம்பாய்க்காரர் ஒருவரை இவரும் பார்க்க, அவரும் நோக்க காதல் ஓ.கே. திருமணம் நிச்சயமாகிவிட்டது. ஆனால் ஒரு நிபந்தனை. திருமணத்தின் பின் காயத்திரி திரையுலகை எட்டியும் பார்க்கக்கூடாது. "அதற்கென்ன பார்க்கவிட்டால் போச்சு" என்று சம்மதித்து விட்டார் காயத்திரி. முடிவு காயா? பழமா? பழம்.



பிரேம்
படம்-வீரமணி

## மேலாடைக்கு விடை

இந்தித் திரையுலகில் நடிகைகள் ஏற்படுத்தும் பரபரப்புக்கு குறைச்சல் இல்லை.

மேலாடை இல்லாமல் அட்டகாசமாக ஒரு போஸ் கொடுத்தார் மம்தா குல்கர்னி.

அவர் நமது சாதனைக்கு மார்தட்டிக் கொள்ள முடியாமல் போய்விட்டது காரணம், வர்ஷா உஸ் கோன்கர் என்னும் புதுநடிகை தானும் தயார் என்று மார்தட்டிக்கொண்டு களத்தில் குதித்து தொலைத்திருக்கிறார்.

-முகப்பில்-
புன்னகை மன்னனாக
-கமல்-
புதிரை விடுவிப்பதுபோல
-மதுபாலா-

## பிரபுவுக்கு அடுத்து சிவாஜி!

பிரபுவை வைத்து 'வியட்நாம் காலனி' படத்தை தயாரித்து வருகிறார் பழம்பெரும் இயக்குநர் சி.வி.ராஜேந்திரன்.

நீங்கள் ஏன் படத்தை இயக்கவில்லை? இது கேள்வி.

"தயாரிப்பாளர்-இயக்குநர் என்னும் இரு பொறுப்புக்களையும் சுமக்கவிரும்பவில்லை" இது அவரது பதில்.

அத்தோடு அவர் சொல்லியுள்ள புதிய தகவல் இது: "பிரபுவை வைத்து இந்தப் படத்தை முடித்தவுடன் ஒரு படமொன்றை புதுமையாகச் செய்ய திட்டமிட்டுள்ளேன். அதில் சிவாஜியை வைத்து இயக்குவேன்."

## கௌதமியின் ரகசியம்

...படங்களில் நடிப்பதில்லையே ஏன்? என்று கவுதமியிடம் கேட்டால் தொலைந்தீர்கள்.

...க்கு தமிழில் இப்போதும் வரவேற்பு உண்டு. கமலோடுகூட நடிக்கிறேன்" என்று சூடாக பதில் தெறிக்கும்.

...தமியை 'கல்'லன்ன உடம்பை எப்படி இப்படி கச்சிதமாக ...த்திருக்கிறீர்கள்?" என்று கேட்டால், சிரித்து வெட்கப்பட்டு, ...வியான பயிற்சி எதுவும் கிடையாது. உணவுக் கட்டுப்பாடும் ...ாது. ஆனால் ஒரு விசயம். எந்த பிரச்சனையையும் பெரிதாக ...துக்கொள்வது கிடையாது. அதனால் கவலையும் கிடையாது" என்று உடல் ரகசியத்தை சொல்லுகிறார்.

## சிவாஜி போட்ட போடு!

இரவல் குரலில் நடிப்பவர்கள் பற்றி நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தமிழக சினிமா சஞ்சிகை ஒன்றுக்கு அதிருப்தியாக கருத்துத் தெரிவித்திருந்தார்.

சொந்தக் குரலில் பேசி நடிப்பதுதான் சிறந்தது என்று நடிகர் திலகம் ஒரு போடு போட்டது இரவல் குரல் நடிக நடிகையரை ஒரு கலக்கு கலக்கிவிட்டது.

சொன்னவர் நடிகர் திலகம் என்பதால் அவர்கள் தமது கோபத்தை கொடுப்புக்குள் அடக்கிக் கொண்டார்கள்.

## நாசரால் பொறாமை

தான் தெலுங்கில் நடித்த 'மாத்ரு தேவோ பவா' என்ற படத்தின் வெற்றிவிழாவில் கலந்து கொள்வதற்காக ஆந்திராவுக்குச் சென்றிருந்தார் நாசர். அவ்விழாவில் கலந்து கொண்ட தெலுங்கு முன்னணி நடிகரான சோபன்பாபு பேசும்போது, "இந்தப் படத்தில் நாசர் ஏற்றிருக்கும் வேடத்தில் சிறப்பாக நடித்ததைப் பார்த்தபோது எனக்குப் பொறாமையாக இருக்கிறது" என்றார்.

தற்போது நாசர் அதே போன்றதொரு வேடத்தில் இன்னொரு தெலுங்குப் படத்தில் நடித்து வருகிறார்.

## சளைக்காத புகழ்ச்சி

'டூயட்' படத்தில் நடித்த மீனாட்சி சேஷாத்திரி தமிழ்த் திரையுலகைப்பற்றி ஆகா ஓகோவெனப் புகழ்ந்து தள்ளுகிறார். 'டூயட்' படத்திற்குப் பின்னர் மீண்டும் ஒரு தமிழ்ப்படத்தில் நடிக்க வுள்ள மீனாட்சி ஆங்கிலத்தில் நிறையக் கவிதைகள்எழுதி வைத்திருக்கிறாராம்.

நடனத்தில் ஈடுபாடுள்ள மீனாட்சி நடன ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்.

## ...மல் போன சேலை!

...உள் கோவிலிலே' படத்தில் பட்டுச்சேலை ...ாக அறிமுகமானவர் கஸ்தூரி. அதனைத் தொடர்ந்து ...ல கட்டும் பாத்திரங்களில் வந்து போனார். ...னாலும் நல்ல ஆடைகள்தான் அவருக்குப் பிரிய ...னை. வீட்டில் இருக்கும் போது நல்ல ஆடைகளி... ...ன் காணலாம்.

...தமிழில் ஒன்றிரண்டு படங்களில் நல்ல ஆடைகளில் தோன்றினார். ஆனால் எதிலும் ஒரு உச்சகட்டம் வேண்டுமல்லவா? இப்போது அந்த உச்ச கட்டம் வந்துவிட்டது. கன்னடப் படம் ஒன்றில் நீச்சல் உடையில் துணிச்சல் காட்டியிருக்கிறார். கஸ்தூரியின் துணிச்சலையும், தாராள உள்ள மற்றும் உடல் போக்கையும் தமிழ் இரசிகர்களும் அறிந்து கொள்ள வசதியாக அந்தக் கன்னடப்படம் தமிழில் மொழி மாற்றம் செய்யப் படுகிறது.

ரூபஸ்ரீ
படம்-தாட்பூட் தஞ்சாவூர்



★

## ஆச்சரியம்தான்

"நான் திரையுலகிற்கு வந்து பத்து வருடங்களாகி விட்டது. இந்த வகையில் தற்போது எனது பொறுப்புக்கள் அதிகமாகி இருக்கிறது. இரசிகர்கள் என்னிடம் நிறைய எதிர்பார்க்கிறார்கள். இப்போது நான் 'அஞ்சாம்' என்ற படத்தில் முற்றிலும் மாறுபட்ட பழிவாங்கும் வேடத்தில் நடித்து வருகிறேன்." என்று கூறும் மாதுரி டிக்ஸிட், தற்போது இந்தியில் 'நம்பர் வன்' ஆக இருக்கும் ஜூஹி சாவ்லாவைப் பற்றிக் கூறும்போது, "ஜூஹி சாவ்லா ஒரு திறமையான நடிகை. அவர் நடிக்கும் படங்கள் தற்போது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது." என்றார். ஆச்சரியம்தான் ஒரு நடிகை சக நடிகையைப் பாராட்டுவது.

## பிரியங்கா ஜோடியில் பிரியம்

ரேவதி-ஜெயராம் ஜோடி நடித்த 'பிரியங்கா'வுக்கு நல்ல வரவேற்பு.

அதனால் அந்த ஜோடி மீண்டும் இணைந்து புதிய படத்தில் நடிக்கிறது.

ஜெயராம், ரேவதி பற்றி மரியாதையோடு பேசுகிறார்.

'மிகச் சிறந்த நடிகை' என்று கூறுகிறார்.

'பிரியங்கா' படத்தின் வெற்றியில் பிரபுவின் பங்கும் உண்டு. அதே சமயம் ரேவதி-ஜெயராம் ஜோடி பொருத்தமான ஜோடியாக இரசிகர்களால் வரவேற்கப்பட்டுமிருக்கிறது.

## கார்த்திக்கோடு மோகன்லால்

...லையாள நடிகர் மோகன்லால் தமிழில் ...ார்க்கெட்டைப் பிடிக்க முயற்சி செய்கிறார்.

இப்போது கார்த்திக்கோடு ஒரு படத்தில் நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளார்.



## ஏ.ஆர்.ரகுமான் மாற்றம்

'யாகம்' படத்தின் இசையமைப்புக்கு ஏ.ஆர்.ரகுமான் அதிக நாட்கள் எடுத்துக்கொண்டதால் அவரை மாற்றிவிட்டு வேறு ஒருவரை போட்டுள்ளார்கள். அதிக படங்கள் கைவசம் இருப்பதால் தாமதம் ஏற்படச் செய்கிறதாம்.

## சி.பி. அழகுராணி

அழகுப் போட்டிகளில் வெற்றிபெற்றுவிட்டு சினிமாவுக்குள் புகுந்தவர்கள் கஸ்தூரி, லாவண்யா, அஞ்சலி...அனால் 'தாய்மனசு' படத்தில் நடித்த சொர்ணா இப்போது தான் கேரளாவில் 'கேரள அழகு ராணியாக' பட்டம் பெற்றுள்ளார். சினிமா பிரவேசத்தின் பின் (அதுதான் சி.பி)

## ரூபினி இருந்தாலும் ரோகிணி

'தாமரை' படத்தில் ரூபினியும் இருக்கிறார். ஆனால் கதாநாயகி ரோகிணி.

'நேற்று வந்தவர்கள் எல்லாம் என்னை ஓரம் கட்டிவிட்டார்கள்" என்று வருத்தப் பட்டாராம் ரூபினி.

## கதை சிவசங்கரி!
### ரஜினியின் கண்தானம்

எஸ்.பி.பாலசுப்பிரமணியம், ரஜினிகாந்த், பேபி ஐஸ்வர்யா ஆகியோர் நடித்துள்ள படம் ஒன்று சென்னைத் திரைகளில் ஓடிக்கொண்டிருக்கிறது. ரஜினி இரசிகர்கள் ஆச்சரியப்பட வேண்டாம். அது 'கண்தானம்' பற்றிய துண்டுப் பிரசாரப் படம். சிவசங்கரி கதை எழுத, எஸ்.பி.முத்துராமன் இயக்கியுள்ளார்.

'கண்தானம்' பிரசார படத்தில் நடித்திருப்பதோடு ஒரு இலட்சம் ரூபா நன்கொடையும் கொடுத்துள்ளார் ரஜினி.

## நெப்போலியனின் நியாயம்

பாடல்காட்சியில் நடிக்காத கதாநாயகன் தமிழ் சினிமாவில் நிலைக்க முடியுமா? முடியாது.

முன்னர் சத்யராஜ் தனக்கு டூயட் பாடல் காட்சிகள் சரிப்பட்டு வராது என்றார். பின்னர் படு நெருக்கமான 'டூயட்' காட்சிகளில் புகுந்து விளையாடத் தொடங்கினார்.

வில்லனாக இருந்து கதாநாயகனாகிய நெப்போலியனும் முதலில் அப்படித்தான் சொன்னார். இப்போது மணி-ரத்னம் என்னும் படத்தில் மகா நெருக்கமான காட்சிகளில் நடித்திருக்கிறார்.

இதுபற்றி நெப்போலியன் சொல்லும் நியாயம் இதுதான். "உலகத்திலே யாரதான் சொன்னதைச் செய்கிறார்கள்!"

## முதலிடத்தில் ரகுமான்

இளையராஜா இராச்சியம் சற்று ஆட்டம் கண்டிருப்பதாக இந்திய சஞ்சிகை ஒன்று கணிப்புத் தந்திருக்கிறது.

சூப்பர்ஹிட் பாடல்களை வழங்கி ஏ.ஆர்.ரகுமான் முதலிடத்தில் வந்துவிட்டார். ஆனாலும் இளையராஜாவால் முடியாது என்று முடிவுக்கு வந்துவிடவும் முடியாது என்கிறது அந்த சஞ்சிகை. சஞ்சிகையின் பெயர் இந்தியா டுடே.

## பிரமாண்டம் பிரபுதேவா

இளையராஜாவின் இயற்பெயர் இராசையா. அவரே ஆரம்பித்துள்ளது பிரபுதேவா ரோஜா நடிக்கும் படம் 'ராசையா'.

'காதலன்' படத்தை எதிர்பார்த்திருக்கும் பிரபுதேவா 'ராசையா' படத்தைப் பற்றியும் பேச ஆரம்பித்துவிட்டார்.


அம்மா கிரியேஷன்ஸ் டி.சிவா படத்தை தயாரிப்பதால் செலவுக்கு குறைவு இருக்காது. பிரமாண்டம் இருக்கும்.

## இடையில் ஒன்று

'ராஜா ராணி' படத்தை தயாரிக்கும் வேலைக்கிடையே சத்யராஜ், மீனாவை ஜோடியாக வைத்து மற்றொரு படத்தையும் விரைவாக முடிக்க திட்டமிட்டுள்ளார் சத்யராஜின் மனேஜர் ராமநாதன். படத்தை இயக்குவது மணிவண்ணன்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## பூக்கள்



சின்ன சின்ன பூக்கள்
சிங்காரப் பூக்கள்
பல வண்ண நிறத்தில்
பாரெங்கும் பூக்கள்

மென்மை இதழால்
மிளிரும் பூக்கள்
கண்ணுக்கு விருந்தாய்
காட்சியாகும் பூக்கள்.

பிஞ்சு உள்ளங்கள்
கொஞ்சிடும் பூக்கள்
வாசம் தந்திடும்
வடிவழகு பூக்கள்.

அனுப்பியவர்: செல்வன் எம். அகிலன்
டிக்கோயா.

"திறமை கொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வோம் இந்த நாட்டிலே"
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

## சிட்டுக்குருவியின் தந்திரம்



நரி மிகவும் தந்திரசாலி என்று சொல்வதுண்டு. அப்படிப்பட்ட நரியிடம் ஒரு சிட்டுக்குருவி தந்திரம் செய்து அதை ஏமாற்றிவிட்ட கதைதான் இது.

ஒரு மரத்தில் ஆந்தை ஒன்று வசித்து வந்தது. அது உயரமான வாகை மரம். அதன் உச்சியில் கூடு கட்டி இருந்தது ஆந்தை. அது அங்கே ஐந்து குஞ்சுகள் பொரித்திருந்தது. குஞ்சுகள் அழகாக இருந்தன. எப்போதும் 'கீச்,கீச்' என்று கத்தியபடி இருந்தன. அடிக்கடி அவைகளுக்கு ஆகாரம் கொண்டு வந்து வாயில் ஊட்டி குஞ்சுகளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்துக்கொண்டிருந்தது ஆந்தை.

ஒருநாள் அந்த வாகை மரத்து நிழலில் ஒரு நரி வந்து வெய்யிலில் களைப்பாற உட்கார்ந்தது. அதன் காதில் ஆந்தைக் குஞ்சுகள் 'கீச்,கீச்' என்று கத்துவது விழுந்தது. குஞ்சுகள் இளம் எலும்புகளோடு, நிறைய சதைகளோடு இருக்கும் என்பதால் நரியின் நாக்கில் எச்சில் சுரந்தது. உடனே அது எழுந்து மேலே பார்த்தது.

அப்போது ஆந்தை தற்செயலாகக் கூட்டிலிருந்து கீழே பார்த்தது. நரி மேலே அண்ணாந்து பார்த்து நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தது. தன் குஞ்சுகள் போடும் 'கீச்,கீச்' சப்தம் அதன் காதில் விழுந்துதான் அவைகளைச் சாப்பிட நரி வந்து உட்கார்ந்து இருக்கிறது என்பது ஆந்தைக்குப் புரிந்துவிட்டது. உடனே அதற்குப் பயம் பிடித்துக் கொண்டது. பயமான அதன் முகத்தைப் பார்த்துவிட்டது நரி.

"ஆந்தையே எனக்குப் பசிக்கிறது. உன் குஞ்சுகளை நான் சாப்பிடப் போகிறேன்" என்றது நரி. "ஐயய்யோ, வேண்டாம்." என்று தன் குஞ்சுகளை அணைத்துக் கொண்டது ஆந்தை.

"ஒரே ஒரு குஞ்சை எடுத்துப்போடு!" என்றது நரி.

"மாட்டேன்- என் குஞ்சைப் போட மாட்டேன்" என்றது ஆந்தை.

"ஒரே ஒரு குஞ்சைக்கூடப் போட மாட்டேன் என்கிறாயே? நான் மரமேறி மேலே வந்தால் எல்லா குஞ்சுகளையுமே சாப்பிட்டு விடுவேன் தெரியுமா?" என்று கூறி எழுந்தது நரி.

அது மரமேறி மேலே வந்தால் எல்லாக் குஞ்சுகளையும் சாப்பிட்டு விடுமே என்கின்ற கவலையும், பயமும் ஆந்தைக்கு உண்டாயிற்று. ஒரு குஞ்சை இழக்கத் துணிந்து விட்டால், மற்றக் குஞ்சுகளையாவது காப்பாற்றலாமே? என்று எண்ணிற்று. மனதைக் கல்லாக்கிக்கொண்டு கண்களை மூடிக்கொண்டு ஒரு குஞ்சை எடுத்துக் கீழே போட்டது ஆந்தை.

அதை வாயில் கவ்விக்கொண்டு ஓடிப் போய்விட்டது நரி. தனது குஞ்சைத் தானே கொல்லக் கொடுத்துவிட்ட கொடுமையை எண்ணி ஆந்தை அழ ஆரம்பித்தது.

அப்போது, ஒரு சிட்டுக்குருவி வந்து அருகில் இருந்த கிளையில் உட்கார்ந்து அழுகின்ற ஆந்தையைப் பார்த்தது. "ஆந்தையம்மா, ஆந்தையம்மா ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது சிட்டுக்குருவி.

"ஒரு நரி வந்தது. மரத்தில் ஏறி வந்து என் எல்லா குஞ்சுகளையும் சாப்பிட்டு விடுவேன் என்றது. ஆனால் ஒரே ஒரு குஞ்சை மட்டும் நீ கீழே போட்டுவிட்டால் நான் மரமேறி மேலே வரமாட்டேன். உன் மற்ற குஞ்சுகளையும் சாப்பிட மாட்டேன். அதை மட்டும் எடுத்துக்கொண்டுபோய் சாப்பிட்டுப் பசியாறுவேன் என்றது," என்று அழுதபடி சொல்லியது ஆந்தை.

"நீ என்ன செய்தாய் ஆந்தையம்மா?" என்று கேட்டது சிட்டுக்குருவி.

"நான் மகாபாவி. எனக்கு மன்னிப்பே கிடையாது. மற்றக் குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்காக ஒரே ஒரு குஞ்சை எடுத்து நரிக்குப் போட்டுவிட்டேன்." என்று கூறி தேம்பித் தேம்பி அழுதது ஆந்தை.

"ஆந்தையம்மா, நரி உன்னை நன்றாக ஏமாற்றிவிட்டதே?" என்றது சிட்டுக்குருவி.

"என்ன சொல்கிறாய் சிட்டுக்குருவி?" என்று கண்களைத் துடைத்துக்கொண்டு கேட்டது ஆந்தை.

"நரிக்கு மரம் ஏறவே தெரியாது. மரம் ஏறி வந்து உன் குஞ்சுக்ளைச் சாப்பிட்டு விடுவேன் என்று பொய் கூறி உன்னை ஏமாற்றி விட்டது நரி. இனிமேலாவது கவனமாக இரு ஆந்தையம்மா." என்று சொல்லிவிட்டுப் பறந்து சென்றது சிட்டுக்குருவி.

மறுநாள் நரி வாகை மரத்தடிக்கு வந்து ஆந்தையைப் பார்த்து, "ஏய் ஆந்தையே எனக்கு இன்றைக்கும் உன் குஞ்சுகளில் ஒன்றை ஆகாரமாகப் போடு, இல்லாவிட்டால் மரம் ஏறி மேலே வந்து உன் எல்லாக் குஞ்சுகளையும் சாப்பிட்டு விடுவேன்," என்றது.

"உனக்கு மரம் ஏறவும் தெரியாது. ஒன்றும் தெரியாது என்று சிட்டுக்குருவி என்னிடம் சொல்லிவிட்டது. உன் தந்திரம் ஒன்றும் என்னிடம் பலிக்காது போ...போ..." என்று தைரியமாகக் கூறியது ஆந்தை.

தனக்கு மரம் ஏறத் தெரியாது என்பதை ஆந்தையிடம் தெரிவித்துவிட்ட சிட்டுக் குருவியின் மீது அசாத்திய கோபம் வந்தது நரிக்கு. அதைப் பிடித்து ஒரே வாயில் தின்றுவிட வேண்டும் என்கின்ற ஆத்திரமும், கோபமும் உண்டாயிற்று. சிட்டுக்குருவி மரத்தில் தானே வசிக்கும்? அதை எப்படிப் பிடிப்பது?

நரி மரத்தடியில் செத்துவிட்டதுபோல படுத்துக் கண்களை மூடிக்கொண்டது. செத்த பிராணிகளைக் கொத்திச் சாப்பிட பறவைகள் வரும். அதுபோல சிட்டுக் குருவியும் வரும் என்று எண்ணி லேசாக அடிக்கண்ணை கொஞ்சம் திறந்து, திறந்து பார்த்துக்கொண்டே இருந்தது.

சிறிது நேரத்தில் சிட்டுக்குருவி, நரி எதிர்பார்த்தபடியே வந்து அதன் மீது உட்கார்ந்தது. நரியின் கண்களைக் கொத்த ஆரம்பித்தது.

நரி சட்டென்று எழுந்து குருவியைக் கப்பென்று வாயில் பிடித்துவிட்டது.

"ஆந்தையிடம் எனக்கு மரம் ஏறத் தெரியாது என்று சொன்னது நீதானே? உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று கோபமாகக் கேட்டது நரி.

"என்னை என்ன வேண்டுமானாலும் செய்யும் நரியாரே! ஆனால் என் பின் சிறகுகளை மட்டும் பிடிக்காதீர்கள் என் உயிர் போய் விடும்." என்றது சிட்டுக்குருவி.

"உன் உயிர் போக வேண்டும் என்பதுதானே என் ஆசை." என்று சொன்ன நரி சிட்டுக்குருவியின் கழுத்தை விட்டுவிட்டு அதன் சிறகுகளைப் பிடித்தது.

அதுதான் சமயமென்று சிட்டுக்குருவி தன் சிறகுகளை உதிர்த்துவிட்டு நரியிடமிருந்து தப்பிப் பறந்தோடிவிட்டது.

கண்மணிகளே! வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பதை நிரூபிப்பதுபோல தந்திரசாலி நரியை சின்னஞ்சிறு குருவி எப்படி ஏமாற்றியது பார்த்தீர்களா? ஆபத்து சமயத்தில் அஞ்சி நடுங்காது நாமும் இப்படி சிந்தித்துச் செயற்பட வேண்டும். ■

## எண் விநோதம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 12 | 11 | 10 | 9 | 8 | 7 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 24 | 23 | 22 | 21 | 20 | 19 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 36 | 35 | 34 | 33 | 32 | 31 |
| 111 | 111 | 111 | 111 | 111 | 111 |

ஜென்சி காமிலா பெர்ணான்டோ
நல்லாயன் கன்னியர் மடம்-கொழும்பு-13.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.07.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 49
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 46

**பரிசுக்குரியவர்**
கா.கோணேஸ்வரன்-கற்குடா, மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**

ச.டேவிட்-ஹொரண.

செல்வன்.பி.பாலகணேசானந்தன்
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.

ஏ.சி.பைறூஸா-மத்திய கல்லூரி, புத்தியகாத்தான்குடி-03.

ஏ.அமனுல்லாஹ்-புத்தளம்.

சுபாசினி நடராஜா- தமிழ் மகா வித்தியாலயம், அப்புத்தளை.

ஏ.சி.எப்.சி ஹானியா-சாஹிரா மத்திய கல்லூரி, அக்குறணை.

எம்.ஆர்.என்.ஜெஸீலா-அல் அமீன் மகா வித்தியாலயம், பன்னல.

எம்.எம்.சாஜகான்-வாழைச்சேனை-4.

எம்.சிவகுமாரன்
களு/றைகம மே.பி/தமிழ் வித்தியாலயம், இங்கிரிய.

## விடுகதைகளும் விடைகளும்

1. வயல் நடுவில் ஒற்றைத்தடி. அதில் காய்கிறது வெள்ளைத் துணி. அது என்ன?
2. பகலில் மூலையில் சுருண்டிருப்பான். இரவில் படுக்கைக்கு முந்துவான். அவன் யார்?
3. இணை பிரிய மாட்டார்கள்; நண்பர்களுமல்ல. ஒன்று சேர மாட்டார்கள்; பகைவருமல்ல. அவர்கள் யார்?
4. போட்டால் எடுக்க முடியாது. அது என்ன?

**விடைகள்**

1. கொக்கு 2. பாய்
3. கண்கள் 4. எழுத்து

எஸ். பாத்திமா நிரோஸா
பாத்திமா மகளிர் வித்தியாலயம்-புத்தளம்.

1. தேர் ஓடி வருது. பூ சிந்தி வருது. அது என்ன?
2. காளை கட்டி இருக்கு. கயிறு ஓடி இருக்கு. அது என்ன?
3. செக்கச் சிவந்திருக்கும். செவ்வாழை பூத்திருக்கும். வால் முளைத்து இருக்கும். சந்தைக்கு வந்திருக்கும். அது என்ன?
4. அண்ணனின் கிணற்றில் தம்பி இறங்குவான். ஆனால் தம்பியின் கிணற்றில் அண்ணனுக்கு இறங்க முடியாது. அவை என்ன?
5. மஞ்சநத்தி மரத்திலே, மகாலிங்க கொப்பிலே, மூன்று முத்து இருந்து வாழுது. அது என்ன?
6. சின்னஞ் சிறு பிள்ளைக்கு ஏழு சுத்து கண்டாங்கி. அது என்ன?
7. ராஜா மகள் கோவக்காரி. பூ இல்லாமல் சடை பின்ன மாட்டாள். அது என்ன?
8. நாக்கு இல்லாமல் பேசும். அது என்ன?

**விடைகள்**

1. திருகைக்கல்லு
2. பூசனிக்கொடி
3. மிளகாய்
4. கொத்து. சுண்டு
5. தாலி
6. வெங்காயம்
7. முருங்கைக்காய்
8. வானொலிப் பெட்டி

அ.சுமதி-நீர்கொழும்பு.

## மிகப் பெரிய கூடு



உலகிலேயே மிகப்பெரிய கூடுகள் உள்ள பறவைகள் அமெரிக்காவில் உள்ள வெள்ளைத் தலைக் கழுகுகள்தான். 'போல்ட் ஈகிள்' என்று இவற்றை ஆங்கிலத்தில் அழைப்பார்கள். அமெரிக்காவில் புளோரிடா மாநில்தில் இந்தக் கழுகுகள் வாழ்ந்த ஒரு கூடு 9.5 அடி அகலமும், 20 அடி ஆழமும் கொண்டதாய் இருந்தது. எடை 3 ஆயிரம் கிலோ.

இவை உருவத்தில் பெரியவை. அதனால் கூடு கட்டும் போதே பெரியதாகத்தான் கட்டும். பிறகு அடுத்தடுத்து வேறு கழுகுகள் அதே கூட்டைப் பயன்படுத்தும். ஒவ்வொரு புதுஜோடியும் அங்கு குடும்பம் நடத்த வரும்போதும் புதிதாக சருகு, குச்சிகளைக் கூட்டில் சேர்த்துக் கூட்டைப் பயன்படுத்தும். இப்படியே பல ஆண்டுகளில் ஒரு மிகப்பெரிய கூடு உருவாகி விடும். புளோரிடா மாநிலத்தில் உள்ள இந்தப் பறவைகளின் கூடுகள் சில 100 ஆண்டுகள் பழமையானவை.

## அறிவோம் மனதில் பதிவோம்



மிக அதிகம் பாடப்படும் ஆங்கிலப் பாடல் 'ஹப்பி பேர்த்டே ரு யூ' என்ற பிறந்தநாள் பாட்டு. இதை இயற்றியவர்கள் அமெரிக்காவைச் சேர்ந்த மில் ரெட்ஹில், பேட்டி ஹில் என்ற இரு பாடசாலை ஆசிரியைகள் ஆவர்.

'அகிஸ்வி' என்ற இங்கிலாந்துக்காரர் வளர்த்த செல்லப் பிராணியான எலி 1982ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ம் திகதி குட்டிகளை ஈன்றது. அதில் ஒரு குட்டி இறந்து விட்டது. மற்றக் குட்டிகள் நன்றாக இருந்தன.



பாலைவனங்களில் உள்ள மண் சில இடங்களில் வெள்ளையாகவும், சில இடங்களில் பழுப்பாகவும் இருக்கும். ஆனால் அவுஸ்திரேலியாவில் உள்ள சிம்சன் பாலைவனத்தில் உள்ள மணல் சிவப்பு நிறமாக உள்ளது.

## துருப் பிடித்தல்

- **துரு என்றால் என்ன?**
இரும்பு காற்றிலுள்ள ஈரப்பதன், ஒட்சிசன் வாயு ஆகியவற்றுடன் சேர்ந்து ஒட்சைட்டாக மாறுவது துரு எனப்படும். இது உலோகம்+நீர்+ஒட்சிசன் சேர்க்கையால் ஏற்படும் இரசாயன மாற்றமாகும். துருவின் விஞ்ஞானக் குறியீடு $FC_2O_3H_2O$
- **உலர்ந்த காற்றில் இருக்கும் இரும்பு துருப் பிடிக்குமா?**
துருப்பிடிக்காது. ஈரப்பதனில்தான் துருப்பிடிக்கும்.
- **கிராமங்களைவிட தொழிற்சாலைகள் அதிகம் உள்ள பகுதிகளில் இரும்புப் பொருட்கள் துருப் பிடிக்கக் காரணம் என்ன?**
அமிலத்தன்மை உடைய காபன்டை ஒட்சைட்டு, சல்பர்டை ஒட்சைட்டு போன்ற வாயுக்கள் துருப்பிடிப்பதை அதிகரிக்கச் செய்யும். தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகையில் இந்த வாயுக்கள் அதிகம் இருப்பதால் அந்தப் பகுதிகளில் உள்ள இரும்புப் பொருட்கள் விரைவில் துருப் பிடிக்கும்.
- **துருப்பிடிப்பதைத் தவிர்ப்பது எப்படி?**
ஈரப்பதனுள்ள காற்று இரும்புப் பொருட்களை அணுகமுடியாதபடி அப்பொருட்களின் மீது எண்ணெய், பெயின்ட் பூசி வைக்க வேண்டும்.
- **துருப்பிடித்தலை உடனடியாக நிறுத்தாவிட்டால் இரும்புப் பொருட்கள் எவ்வாறு பாதிப்படையும்?**
இரும்புப் பொருட்கள் துருப்பிடித்தால் அவை பொடிப்பொடியாக உதிர ஆரம்பித்து விடும். துருப் பிடித்தலை நிறுத்தாவிட்டால் துருப்பிடித்த இரும்பு உடையும். பெரிய இரும்புப் பாலங்கள் கூட துருவினால் உடைந்துள்ளன.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# சொன்னது நீதானா?



இவனுக்கு வாலிப வயது. ஆனால் வதனத்தில் என்ன சோர்வு? இருள் கவ்விய வானமாய் சோகம் கவ்விய முகம் ஏன்? யார் என்ன சொன்னதால் இவன் மனம் சுருங்கியது?

வாசகர்களே-உங்கள் கற்பனைக்கு சிறகு கட்டிவிடுங்கள். உங்கள் அனுபவமும் கைகொடுத்தால் உபயோகப்படுத்தலாமே!

ஒரு தபாலட்டையில் பத்து வரிகளுக்கு மேற்படாமல் சுருக்கமாக சுவையான வசனமாகவோ உரையாடலாகவோ எழுதி அனுப்புங்கள். சிறந்தவை பத்து இங்கு அரங்கேறும்.

அனுப்பவேண்டிய கடைசித் திகதி- 23.7.94.



முகவரி- சொன்னது நீதானா
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு-6.



# தேர்தல் கணிப்புப் போட்டி

## வாசகர்களே தயாராகுங்கள்

தேர்தல் திருவிழாவில் வெற்றி யாருக்கு?
உங்கள் மாவட்டத்தில் யாருக்கு சாதகமான காற்று வீசுகிறது?
நாடு தழுவிய ரீதியில் யார் வெற்றிபெற்று வந்தால் நல்லது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

தற்போதைய அரசியல் உங்களுக்கு பிடித்தமானதாக இருக்கிறதா?

கேள்விகள் தயார். விடை எழுத அரசியல் அரங்கை உடனே கவனிக்கத் தொடங்குங்கள்.

அடுத்த முரசில் போட்டிக் கூப்பன் வெளியாகும்.

சரியான கணிப்பை வெளியிடும் வாசக நெஞ்சங்களில் அதிஷ்டசாலிகள் ஐந்து பேருக்கு ரூபா 1000/= பரிசாக வழங்கப்படும்.

முரசின் கருத்துக் கணிப்புக்கு, உங்கள் பங்களிப்பை வழங்குங்கள்.

-விபரம் அடுத்த முரசில்-

# தேன் கிண்ணம்

### வெ(நெ)றி...

காலைப் பொழுதுகள்
கருக்கல் நீங்கி விடியும்
குடிகாரன் வீடுகளில்
கருக்கலாகவே படியும்
சோலைப் பூப்போல வாழ்வுதனில்
சோகக் கள் வடியும்
வேலையதன் கூலி கூட
வெறி போட முடியும்...

வீட்டினிலே பிள்ளைகள் வயிறு
பட்டினியிலே நெரியும்
வீதியெல்லாம் அவன் கோலம்
அவமானக் கவி எழுதும்
பிள்ளை மனமும் வார்த்தை
வதை கண்டு ஒதுங்கும்
வாழ்க்கைத்துணை கூட
உதை வாங்கிச் சரியும்—

கேலிக்கூத்து நடக்கும்
கொட்டகை வீடாகும்
அலறலும் அடிதடியும்
அங்கெல்லாம் கூடும்
நாற்ற வார்த்தை சத்தியாக
வாயிலிருந்து பொழியும்
அன்பூற்று இல்லாது
குடும்பநிலை குலையும்—

மனித வாழ்வினைக் குறைப்பது மது
மாண்பைத் துடைக்குமதைப் புரிந்து விடு
மனிதத் தன்மையை அழிப்பது வெறி
அது கண்டே தூக்கி நீ எறி!



கள்ளாமை பாவமெனத்
தினமும் படி
உனக்காகவே தினமும்
எழுதுகிறார் பலகவி
வெறி கொண்டு இறந்தவர்
பலருண்டு எண்ணியே விழி!

அன்பு பாசம் தரும் வெறி
வாழ்வினிலேற்றும் புதுத்திரி
மது உண்டானால் வரும் வெறி
அழிவுப் பாதைக்கே வழி!

மது கண்டு நீயும் விலகு
அன்பு வெறி கொண்டு பழகு
அறியாமை மனது விட்டு விலகும்
பொழுதுகள் இனிதாகப் புலரும்
வெறியை வீதியில் விட்டெறி
நெறி மட்டும் நயமென்றறி—!!!

ஜெயந்தி-பம்பலப்பிட்டி.

### கல்லூரிக் காதல்

கல்லூரி வாசல் வந்து
கண்ணாலே மலர்ந்த காதல்
களிந்தது பெண்ணே அன்று
சரிந்தது மண்ணே இன்று.
அரசியலை பாடமாக்கி
அறிவை வளர்த்து கொண்டான்
கணக்கியலில் கனவிபார்த்து
கணக்கு விட்டான் வாழ்வில் இன்று.
காதல் உன்னை காதலித்ததா
காமம் உன்னை விரட்டியதா

வானம் உன்னை தூதுவிட்டதா
வாழ்க்கை இன்று வெறுத்து கொண்டதா?
வாழும்வரை நினைக்குமென்று
பயணவழி சொன்ன காதல்
பாதை வழி வந்து இன்று
பயணம் சொல்லி போன காதல்.
வாசமலர் ஒன்று வாடிக்கிடக்குது
நேசக்கரம் ஏனோ நீட்ட மறுக்குது
பூஜைமலர் ஒன்று வண்டை நினைத்தது
பாசக்கரம் இன்று பாதை மறந்தது.

தெ.யோஜனா-கொழும்பு-15.

தேர்தலகால
போலித்தனங்களை
அம்பலப்படுத்தும்
கவிதைகள் ஏந்த
கிண்ணம் காத்திருக்கிறது.
அனுப்பலாமே நீங்களும்!



### நிலாக்காயும் விழிகள்

எத்தனை
யுகங்கள் வேண்டுமானாலும்
காத்துக் கிடப்பேன்.

•

உன்
சந்தனப் பார்வையும்
சரித்திர நேசமும்
சாகாதவரை...
எத்தனை
யுகங்கள் வேண்டுமானாலும்
காத்துக் கிடப்பேன்.

•

அந்தி நேர
அந்த-
அவசரப் பொழுதில்தான்
உன் கண்களை
அவசரமாய்
சந்தித்தேன்.

•

நியுட்டனின்
சர்ப்பு விசையை விடவும்
நிலாக் காயும்
உன் கண்களின்
கவர்ச்சி விசை பற்றித்தான்
அதிகமாய்
ஆராய்ந்தேன்.
நுனிப்புல்லில்
பனித் தெறிப்பை விடவும்
உன்
ஓரப் பார்வையின்
ஒளித் தெறிப்பில்தான்
ஒய்யாரக் கனவுகளையும்
தரிசித்தேன்.

•

நீ-
வித்தியாசமானவள்.

•

என்
வார்த்தைகளை
விழிகளால்
அர்த்தப்படுத்தியவள்
நீ-
மட்டுந்தான்.
உனக்காக,
எத்தனை
யுகங்கள் வேண்டுமானாலும்
காத்துக் கிடப்பேன்.

அநாமிகா(சுதாசேகர்)
பொத்துவில்.

### நாளைய அராஜகம்

நில(ா)வுக்கும்
துப்பாக்கிச் சூட்டு விழா
நடக்கும்.
பூமியை எரிக்கும்
சூரியனையும்
அது சுடும்.

•••

ரோபோக்களும்
மனிதனுக்கெதிராக
போர்க்கொடி ஏந்தும்.

•••

தாவரங்களும்
அகதிகளாக
இடம் பெயரும்.

•••

இதய தேசத்தில்
நாடிகளும் நாளங்களும்
மோதிக் கொள்ளும்

•••

பிறக்கும் சிசுக்களும்
துப்பாக்கித் துணையோடு
பிறக்கும்.

•••

தேன்
சொட்டும்
மலரிலிருந்து
இரத்தம் கசியும்.
ஒளி,
துப்பாக்கி ஒலிக்கு பயந்து
இருளுக்குள்
ஒழிந்து போகும்.
அப்போது;
உலகமே
கருமைக்குள்
தஞ்சம் புகும்.

•••

எமது
உயிர்
உறிஞ்சும் வேலை
மனிதனுக்கு
மாற்றலாகும்.

-கவிவர்மன்-

### பலம் தரும் பாவை

புலரும் பொழுதினில்
மலரும் நினைவுகளில்-
தினமும் என் முன்னால்
தேவதை அவள் வருவாள்.

•••

விலகும் இதயத்தை
விடாது பிடித்திழுத்து
கலங்கும் கண்களின்
கண்ணீரை அவள் துடைப்பாள்!

•••

நிலவது தேய்வது போல்-என்
நேசமது தேய்ந்திடாது-என
பலப்பல கதைகள் சொல்லி-தன்
பாசத்தை உணர்த்திடுவாள்!

•••

பலவருடப் பழக்கமிது-இதை
பிரிப்பவர்தான் இனி ஏது?
சில நாட்கள் பிரிந்தபோதும்
சேர்வது உறுதி என்பாள்!

•••

ஆலமரம்போல் தழைக்கும்
அழியாத அன்பு இது
காலக்கரங்களினால்-இதை
கசக்கிட முடியாதென்பாள்!

•••

குலமகள் உறுதி கண்டு-என்
சஞ்சலங்கள் மறைந்து போகும்
பலம் பெற்ற என் கால்கள்
புதுப்பயணம் நோக்கிச் செல்லும்!

டி.எம்.கலைர்கான்.
காத்தான்குடி-06.

### தேர்தல் வருது!

வாக்கு
வாங்க
வாக்கு கொடுக்கும்
தேர்தல் காலத்து
வள்ளல்கள்..!

நலன்
விசாரித்து
நாட்டுக்குள்
போலிப்
பொது நலவாதிகள்!

ஊருக்குள்
உலாவரும்
கலர்கலர்
வாகனங்கள்!

வீதிச்
சுவர்களுக் கெல்லாம்,
கோதுமைக் கஞ்சியும்
கடதாசியுடுப்புக்களும்
இலவசமாய்!

வருவோம்,
தருவோம்,
எனும்
ஒலிபெருக்கியின்
ஓயாச் சத்தங்கள்!

சிறாஜ் நகர்-ரகுமான்.



### ஓட்டும் உரிமையும்

சேவல்
கூவ எழும்பணும்
கூடையை
தூக்கி மாட்டணும்
கூனி-கூனி
நடக்கணும் மாலையில்
குப்ப குழியிலதான்
தூங்கணும்.

நாடு
செழிக்க வைக்கணும்
பட்டணம்
நாகரிகத்தில்
திளைக்கணும்
நாம மட்டும் தேயணும்
அதுல முதலாளிகள்
மட்டும் உயரணும்.

கல்வி
எட்டா கனியாகணும்
தமிழன்
கரை சேராம தேயணும்
மாடுமட்டே
சாகிறோம் இந்த
பழமையை

எப்ப மாத்துவோம்?

ஓட்டுபோட
துணியணும்
உரிமை கேட்க
நடுங்கணும்
மாடுபோல திரியணும்
இந்த
மடமையை
இனித்தான் மாத்தணும்.

கதிர்-மருதராஜ்.

# இந்த வாரம் உங்கள் பலன்

## (17.07.94 முதல் 23.07.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன் |
| சிம்மம் | - வெள்ளி |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| இடபம் | - செவ்வாய் |
| மிதுனம் | - புதன் |

சந்திரன்-துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

### மீனம்:

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணத்தட்டுப்பாடு, மனக் கவலை. | பகல் 1 மணி |
| திங்கள்- | வீண்குறை கேட்டல், குடும்ப பகை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, தனவிருத்தி. | பகல் 12 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, தொழில் கேடு. | காலை 7 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, உபத்திரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரியத்தடை, மனக்கலக்கம். | பகல் 11 மணி |
| சனி- | துயர் நீங்கும், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 5

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, செய்தொழில் நன்மை. | காலை 8 மணி |
| திங்கள்- | பணவரவு, பெரியோர் நட்பு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, பணக்கஷ்டம். | பி.ப 2 மணி |
| புதன்- | தொழில் முன்னேற்றம், கடன் பயம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | அந்நியர் சகவாசம், மனக் குழப்பம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 7 மணி |
| சனி- | தனலாபம், உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பணச்செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- | மன அமைதி குன்றும், வீண் மனஸ்தாபம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் சகவாசம், கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- | துயர் நீங்கும், செல்வாக்கு அதிகம். | பகல் 12 மணி |
| வியாழன்- | காரியசித்தி, தொழில் சிறப்பு. | பகல் 11 மணி |
| வெள்ளி- | அந்நியர் எதிர்ப்பு, அதிகார விருத்தி. | காலை 7 மணி |
| சனி- | பயனற்ற செயல், பணச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பணச் செலவு. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | தெய்வானுகூலம், முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | தொழில் மாற்றம், மனக் குழப்பம். | பகல் 12 மணி |
| சனி- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, குடும்ப சுகம். | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, கௌரவம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, பணவரவு. | பகல் 12 மணி |
| புதன்- | வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | காலை 8 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, இடமாற்றம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | தெய்வானுகூலம், காரியசித்தி. | காலை 7 மணி |
| சனி- | பணக்கஷ்டம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 4

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரியக் கேடு, மனக் கவலை. | பி.ப 1 மணி |
| திங்கள்- | இடமாற்றம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, பணத்தடை. | பி.ப 1 மணி |
| புதன்- | கௌரவம், முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| வியாழன்- | தெய்வானுகூலம், தொழில் சிறப்பு. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | கடன் பயம், காரியசித்தி. | காலை 8 மணி |
| சனி- | பெரியோர் உதவி, முயற்சி முன்னேற்றம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 9

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் கேடு, பணவிரயம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, இனசனக் கொண்டாட்டம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | கௌரவம், உயர்ந்த எண்ணம். | பகல் 12 மணி |
| புதன்- | தெய்வானுகூலம், தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| வியாழன்- | வீண் தொல்லை நீங்கும், இடமாற்றம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | கௌரவமற்ற தன்மை, பெண்களால் கேடு. | பி.ப 1 மணி |
| சனி- | புதிய முயற்சி, முன்னேற்றம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -7

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், உயர்ந்த எண்ணம். | காலை 6 மணி |
| திங்கள்- | வீண் முயற்சி, பெரியோர் சகாயம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | நிலைப்பிரிவு, மனப்பயம். | பி.ப 1 மணி |
| புதன்- | காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 11 மணி |
| வியாழன்- | வெளியிட வாசம், பெரியோர் பழி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், பணவரவு. | பி.ப 2 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 8

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, முயற்சி மேனமை. | பி.ப 1 மணி |
| திங்கள்- | கௌரவம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், நிலைப்பிரிவு. | பகல் 12 மணி |
| புதன்- | உறவினர் உதவி; பொருள் வரவு. | காலை 7 மணி |
| வியாழன்- | வெளியிடப் பிரயாணம், கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| சனி- | பயனற்ற செயல், தூர இடப்பயணம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -9

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| திங்கள்- | பயனற்ற செயல், மனக் குழப்பம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| வியாழன்- | அந்நியரால் தொல்லை, மனச் சஞ்சலம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், பணத்தடை. | காலை 7 மணி |
| சனி- | செய்தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரியசித்தி, தொழில் மேன்மை. | காலை 9 மணி |
| திங்கள்- | பொருள்வரவு, உறவினர் உதவி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | அந்நியர் எதிர்ப்பு, உயர்ந்த எண்ணம். | காலை 6 மணி |
| புதன்- | வெளியிடவாழ்க்கை, கௌரவம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | எண்ணிய கருமம் சித்தி, மனத் தெளிவு. | காலை 10 மணி |
| வெள்ளி- | தனலாபம், உத்தியோக லாபம். | பி.ப 2 மணி |
| சனி- | காரியானுகூலம், கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 3

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், வீண் மனஸ்தாபம். | காலை 7 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | கௌரவம், தேகசுகம் பாதிப்பு. | காலை 9 மணி |
| புதன்- | பதவி நிலை மாற்றம், மனக் குழப்பம். | பகல் 12 மணி |
| வியாழன்- | உயர்ந்த நோக்கம், முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி- | வீண் தொல்லை, பெரியோர் பழி. | பகல் 12 மணி |
| சனி- | கடன் தொல்லை நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ ✚ விந்தைகள்

## பாதங்களில் தொற்றும் நோய்கள்

## பாதத்தில் முளைகள் வருவது ஏன்?

பெரும்பாலானோரின் பாதங்களில் முளைகள் போன்ற ஒருவகை படர் ஏற்படுவதுண்டு. இதனை புற்று (புற்று நோயுடன் தொடர்புடையதல்ல) அல்லது ஆணி என்றும் கூறுவார்கள்.

இவை ஒரு வகைத் தொற்றினால் ஏற்படுகின்றன. ஒருவரிடமிருந்து மற்ற வருக்குத் தொற்றும் என்று சொல்லுவதற்கில்லை. நிலத்தில் அல்லது தரையில் காணப்படும் ஒரு வகைப் பூஞ்சணம் கால் பாதங்களில் ஒட்டிக்கொள்ளுவதால் இத்தகைய புற்று ஏற்படுகிறது. இவை பூனை போன்ற பிராணிகள் வெளியில் உலாவிவிட்டு வீடுகளுக்குள்ளும் நடமாடுவதனால் அவற்றினாலும் இத்தகைய பூஞ்சனம் வீடுகளின் தரையிலும் ஒட்டிக்கொள்ளுவதுண்டு.

இத்தொற்றினையிட்டு டாக்டர் டீயானே டு கோம்ப் மற்றும் டாக்டர் டெனிஸ் வீகாண்ட் ஆகியோர் சில கருத்துக்களைக் கூறுகின்றனர்.

பொதுவாக ஈரலிப்பான தரைகளிலே தான் இத்தகைய பூஞ்சனம் உற்பத்தியாகிறது. சிலருடைய உடலில் மேலதிகமாகத் தேங்கும் கழிவுகளும் முளைகளாகப் புடைப்பதுண்டு. பெரும்பாலும் ஆண்களையே பீடிக்கும் இந்நோய் சிலருக்கு எரிச்சலை கொடுக்கும். நமைச்சலையும் உண்டாக்கும். இதனைச் சொறிந்தால் மேலும் சிக்கலையே அதிகரிக்கும். இதனை இளவாறிலேயே சிகிச்சை மூலம் நீக்காவிட்டால் பல இடங்களுக்கும் பரவி விடக்கூடும்.

இத்தகைய நோய் வராமல் தடுப்பதற்கு முக்கியமாக பாதங்களை எப்போதும் துப்பரவாக வைத்திருப்பது அவசியம். கழுவினாலும் ஈரம் இல்லாமல் துடைத்து, பாதங்களுக்கான பவுடர் தடவுதல் நலம். காலுறை பாவிப்பவர்கள் ஒவ்வொரு நாளும் கழுவிக் காயவைத்துப் பயன்படுத்த வேண்டும். நைலோன் காலுறைகளைத் தவிர்த்து பருத்தியாலானவற்றையே பாவிக்க வேண்டும்.

மிகரின் (MICATIN) எனப்படும் களிம்பு பெரும்பாலும் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும். பாதங்களைக் கழுவித் துடைத்த பின் இக்களிம்பினை பாதிப்புக் குள்ளான பாதங்களில் தடவ வேண்டும். பாதிப்புக் குள்ளான பகுதியில் மட்டும் பூசாமல் விரல்கள் உட்பட பாதத்தின் முழுப் பகுதிக்குமே களிம்பு தடவுதல் வேண்டும். இவ்வாறு இரண்டு தடவைகள் தடவினாலே பலன் கிடைத்துவிடும். ஒரு பாதத்தில் மட்டும் பாதிப்பிருந்தாலும் இரு பாதங்களுக்குமே களிம்பு பூசுதல் வேண்டும்.

கால் விரல் நகங்களுக்குள் தொற்று புகுந்து விடுமானால் குணமாக்குவது கடினமாகி விடும். கவனிக்காமல் விட்டுவிட்டால் 'எக்ஸீமா' போன்ற சரும வியாதிகள் வரவும் இது காலாகிவிடும்.

சாதாரண பூச்சுக்களிம்புக்கு இவ்வியாதி கட்டுப்படவில்லையானால் உடலின் உட் பகுதியில் ஏற்பட்ட பாதிப்பின் விளைவாகவே இது இருக்கக்கூடும். ஒரு சரும மருத்துவரை நாடி சிகிச்சை அளிக்க வேண்டும்.



### குறட்டை மன்னர்கள் கவனிக்க

நாள் முழுவதும் வீட்டு வேலைகளைக் கவனித்து விட்டு, களைப்புடன் நிம்மதியாகத் தூங்கலாம் என்று படுக்கையில் சாய்கிறாள் மனைவி. பக்கத்தில் 'கொர்...கொர்' என்று குறட்டை சத்தத்தால் அவளைத் தூங்கவிடாமல் செய்கிறார் கணவன். சில உத்திகளைக் கையாண்டு குறட்டையை (கணவனை அல்ல) விரட்டி விடலாம் என்கிறது ஒரு ஆய்வு.


- தூங்கும்போது பக்கவாட்டில் சாய்ந்து படுக்க வையுங்கள். உங்கள் கணவர் நிமிர்ந்து படுப்பவரானால் முதுகு படுக்கையில் படாதபடி பின்பக்கம் தலையணை ஒன்றை வைத்து இடப்பக்கமாக அல்லது வலப்பக்கமாக சாய்ந்து படுக்கச் செய்யுங்கள்.
- உறங்கச் செல்லும் முன் மதுபானம் அருந்தும் பழக்கத்தை நிறுத்துங்கள். இது தொண்டைக்குள்ளிருக்கும் திசுக்களை 'ரிலாக்ஸ்' செய்து குறட்டையை அதிகரிக்கச் செய்யும்.
- செயற்கை பல்செட் அணிபவராயின் உறங்கும்முன் கழற்றி வையுங்கள்.
- புகைப்பதை நிறுத்துங்கள். புகைப்பதால் தொண்டையின் சதை, மூக்கின் உட்புறமுள்ள சதைகளை வீங்கச் செய்து குறட்டையைத் தீவிரமாக்கும்.
- உடல் எடை அதிகமாக இருந்தால் குறைக்க முயற்சி செய்யுங்கள். குறட்டை பிரச்சனை குறையும்.

### தடுப்பதற்கு புதிய ஊசி

புற்றுநோய் தடுப்பு ஊசி (Vaccine) ஒன்றை ஸ்டோன் ஃபோர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். நோயாளிகளின் நோய்க்கு ஆளான திசுக்களிலிருந்து இந்தத் தடுப்பு ஊசியை விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர். புற்று நோய்க்குக் கொடுக்கப்படும் சிமோதெரபி (Chemitherapy) எனப்படும் மருத்துவம் சிகிச்சைக்குக் கட்டுப்படாத புற்று நோய் கண்ட பகுதிகள்கூட குணமாகியிருப்பதாக நியூ இங்லன்ட் ஜேர்னல் ஒவ் மெடிசின் (New England Journal of Medicine) என்ற மருத்துவ இதழில் வெளியாகியுள்ள கட்டுரை சொல்கிறது. இது பற்றிய ஆராய்ச்சிகள் மேலும் தொடர்கின்றன. போலியோ தடுப்பு ஊசிபோல அல்லாமல் இந்த புற்றுநோய் தடுப்பு ஊசியை பி.செல் லிம்ஃபோமா (B cell Lymphoma) என்ற நோய் கிருமிகள் உண்டான பின்னரே பயன்படுத்த முடியும்.

### தண்ணீர்-தண்ணீர்

தாகமெடுக்கும்போது தாகம் தணியச் செய்ய தண்ணீர் குடிக்கிறோம் என்பதைத் தவிர தண்ணீரைப் பற்றிய பல முக்கியமான விஷயங்களை நாம் அறிந்து கொள்ளாமலேயே இருக்கிறோம். இதோ சில முக்கிய செய்திகள்:



- குளிர் பிரதேசங்களான நுவரெலியா போன்ற இடங்களில் அறையைக் கதகதப்பாக ஹீற்றர் (HEATER) உபயோகிப்பதுண்டு. உடலின் தண்ணீர் அளவை அவை குறைத்து விடுவதால் அதை ஈடு செய்ய நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும்.
- நீங்கள் பருமனான மனிதராக இருந்தால் உங்களுடைய தண்ணீர் தேவையும் அதிகரிக்கும்.
- தேனீர், கோப்பி, மதுபானம் போன்றவை திரவ வடிவில் இருந்தாலும் சிறு நீரகங்களிலிருந்து நீரைப் பிரித்து சிறுநீராக மாற்றக்கூடிய பொருட்கள் இருப்பதால் உடலிலிருந்து தண்ணீர் அதிகமாக வெளியேறும்.
- போத்தல்களில் வரும் குளிர்பானங்கள், மற்றும் பழரசங்கள் போன்றவற்றில் உள்ள அதிகப்படியான வெல்லம், உடலில் சேரவேண்டிய தண்ணீரைத் தாமதப்படுத்தும்.
- நீங்கள் சுறுசுறுப்பாக வேலை செய்யும் போதும், விளையாடும்போதும் மட்டுமன்றி சிலர் சும்மா இருக்கும்போதும் வியர்வை மற்றும் மூச்சு விடுதல் மூலமும் உடல் தண்ணீரை இழக்கின்றது.
- ஒருவர் தினமும் சுத்தமான தண்ணீர் குறைந்தது எட்டு டம்ளர்களாவது குடிப்பது ஆரோக்கியத்திற்கு நல்லது.

### சின்னதாய் ஒரு கிளு-கிளு சமாச்சாரம்

## மறைந்த அழகி மர்லின் ஆடைகள்!

## ஏலத்தில் வாங்க சரியான போட்டி!!

### நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போடுகிறார்கள்

பல்லாயிரக்கணக்கான டொலர்களைக் கொட்டி இவற்றை வாங்கிச் சேகரிப்போர் தொகை பெருகி விட்டதாக றிச்சாட் வில்சன் என்பவர் கூறுகிறார். தபால் மூலம் பொருட்களுக்கான கேள்வி ஒப்பந்தங்களைப் பெற்று பட்டுவாடா செய்யும் 'நோமாஸ் ஜீன்ஸ்' நிறுவனத்தின் உரிமையாளர் இவர்.

மார்லின் மன்றோ 1940ல் வெளியான 'சம் லைக் இற் ஹொட்' என்ற படத்தில் அணிந்த மார்புக் கச்சை பல ஆயிரக்கணக்கான டொலர்களுக்கு அண்மையில் விற்கப்பட்டதாம். கடும்போட்டிக்கு மத்தியில் இதை வாங்கி வந்தவரும் சட்டைக் கொலரைத் தூக்கிவிட்டுக் கொள்கிறார்.





இரு வருடங்களுக்கு முன்னர் தனது வியாபாரத்தை ஆரம்பித்த றிச்சாட், 1943ல் 'கசபிளங்கா' படத்தில் இங்கிரிட் பேக்மன் என்ற நடிகை அணிந்த பருத்தி உடையினை வைத்திருக்கிறார். மைக்கல் ஜாக்சன் 1988ல் ஜேர்மனியில் ஒரு நிகழ்ச்சியின் போது அணிந்திருந்த உடையினையும் இவர் வைத்திருக்கிறார். இதில் ஜாக்சன் கையொப்பமிட்டிருக்கிறார். சுசான் ஹேவாட், கோல்டி ஹாவன், எல்விஸ் பிரெஸ்லி, ஜேம்ஸ் கக்னி போன்ற கலைஞர்கள் அணிந்த உடைகளும் பாவித்த பொருட்களும்கூட றிச்சாடின் காட்சி அறைகளில் உள்ளனவாம்.

இத்தகைய பொருட்களை றிச்சாட் எவ்வாறு பெறுகிறார் என்பதனை அறிய வினவியவர்களிடம் அவர், "இது மிகவும் இலகுவானது. படத்தயாரிப்பு நிலையங்கள், அவர்களிடம் பலகாலமாகத் தேங்கிக் கிடக்கும் பொருட்களை ஏலத்தில் விடுவார்கள். அங்கு பணியாற்றும் சிப்பந்திகள் மூலம் தகவல் கிடைக்கும். எப்பொருள் எத்தகையது; எவர் இதனை-எந்தப் படத்தில் பயன்படுத்தினார் என்ற விபரங்களையும் அவர்க்ளிடம் பெற்றுவிடுவேன்" என்று தெரிவித்தார்.

தமக்கு பிடித்தமான நடிக, நடிகையரது ஆடைகளை தம்மோடு வைத்திருப்பதால் அவர்களது வெறிகொண்ட இரசிகர்கள் மனம் நிறைந்த திருப்தியடைகிறார்களாம். அதுதான் மவுசு.

கந்தையானாலும் கசக்கிக் கட்டு. கந்தையோ, கிழிசலோ நடிகையின் ஆடை என்றால் கந்தையாக ஆனாலும் கோடி கொடுத்தும் வாங்கி வை. எல்லாம் பணமும், அலையும் மனமும் செய்யும் வேலை!

சினிமா மோகம் இங்கு மட்டுமல்ல உலக நாடுகள் பலவற்றிலும் உண்டு. இந்தியத் திரைத் தாரகைகள் இலங்கைக்கு வந்தால் அவர்களைப் பார்க்க ஆயிரக்கணக்கில் இரசிகர்களும் விசிறிகளும் மொய்த்து விடுகின்றனர்.

ஹோலிவூட் நடிகர் நடிகைகளுக்கும் உலகெங்கணும் பெரும் இரசிகர்கூட்டம் கூடுவதுண்டு. மைக்கல் ஜாக்சன் போன்ற பாடகர்களைப் பார்க்கவும் இரசிகர்கள் இலட்சக்கணக்கில் கூடுவார்கள்.

இப்பொழுது அமெரிக்காவில் ஹோலிவூட் நடிகர் நடிகைகள் பயன்படுத்திய உடைகள் மற்றும் பாவினைப் பொருட்களுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போடுகிறார்கள்.

### அபூர்வ சகோதரர்கள்

ஒரு தாய்க்குப் பிறக்கும் இரட்டைக் குழந்தைகளில் ஒருவன் எலியைக் கண்டால்கூட எட்டி ஓடுபவனாகவும், மற்றவன் புலியைக் கூட வெறும் கையால் வெல்பவனாகவும் பல படங்களில் பார்த்திருக்கிறோம்.

இத்தகைய குண வித்தியாசம் விஞ்ஞான ரீதியாகச் சாத்தியமா? என்பதை மாடிஸன் நகரில் உள்ள விஸ்கொன்ஸின் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மனோதத்துவப் பேராசிரியர் எச்.ஹில் கோல்ட்ஸ்மித் என்பவர் ஆராய்ந்தார். இதற்காக இரட்டையராகப் பிறந்த 700 குழந்தைகளை- அவர்கள் பிறந்ததிலிருந்து இரண்டு வயதாகும்வரை ஆராய்ந்தார். அவர் நடத்திய ஆராய்ச்சி முடிவின்படி ஒரே மாதிரித் தோற்றமுடைய இரட்டையர்கள் (Identical Twins) முதல் இரண்டு வருடங்களுக்குக் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான குணநலன்களைக் கொண்டிருப்பதாக கண்டறிந்தார். வெவ்வேறு தோற்றமுள்ள இரட்டையர்களில் (Fraternal Twins) குணநலன்கள் வித்தியாசமாக இருப்ப தாகக் கண்டறிந்தார்.

ஒத்த தோற்ற முடைய குழந்தைகளின் ஜீன்ஸ் (பெற்றோர்களின் தோற்றத்தையும் குணாதிசயங்களையும் குழந்தைகளுக்குத் தரும் மரபு அனுக்கள்) ஒரே மாதிரி இருப்பதும் அப்படியில்லாத இரட்டையர்களின் ஜீன்ஸ்களில் இருக்கும் வித்தியாசமே இதற்குக் காரணம் என்கிறார் இவர்.

எதற்கெடுத்தாலும் பயப்படுதல், தனிமையை நாடுதல் போன்ற குணங்கள் குழந்தையின் முதல் இரண்டு வருடங்களில் காண நேரும்போது படிப்படியாக



அத்தகைய குணங்களை மாற்றுவதற்கான வழி முறைகளைப் பெற்றோர்கள் மேற்கொண்டால், குழந்தையின் எதிர்காலம் வளமாக இருக்கும் என்பது இவருடைய ஆலோசனை.

### அபயக் கரம்




இந்தக் குரங்காரை பிறந்தவுடன் தாய் கை விட்டு விட்டது. உடனே மிருகக் காட்சிச் சாலையின் நிர்வாகியான பெண்மணி அபயக்கரம் நீட்டினார். ஐந்து வாரம்வரை பற்றிக்கொள்ள ஏதாவது இருந்தால்தான் குரங்கார் பிழைப்பார். பெண்மணியின் கரம் தான் இப்போதைக்கு பற்றிக்கொள்ள கிடைத்திருக்கும் அபயம். அந்த கையுக்குள் இருந்து வெளியுலகைப் பார்க்கிறார் குட்டிக் குரங்கார்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

"மாதத்தில் ஒருநாள் மலர்ந்திடும் மலரே
வானத்தில் மலர்ந்த என் வண்ண நிலவே
காதளவோடிய கண்களினாலே
கற்பனை உலகத்தை காட்டிவிட்டாயே"
-கவியரசு கண்ணதாசன்-



ரசிகன் 22

# கொலை விழும் நேரம்

**கா**த்திருந்து பத்து நிமிசங்கள் பஞ்சாய் பறந்தாயிற்று.

சூர்யா பிஸ்டலை தன் வலது தொடைக்கு கீழ் வைத்துக்கொண்டு வருபவனுக்காக நிமிசங்களை எண்ணி பொறுமையிழந்து கொண்டிருந்தாள்.

"எண்ணிய முடிதல் வேண்டும்."

ஆனால் உடனடியாக முடிதல் வேண்டும். முடிவு எடுத்தால் உடனடியாக அதனை செயற்படுத்திவிட்டால் ஒரு பதட்டம் இருக்காது.

முடிப்பதை தீர்மானித்துவிட்டு தள்ளிப் போட்டுக்கொண்டேயிருக்க ஆர்வம் குறையலாம். பிடரியை சிலிர்த்துக் கொண்டு எழும் சிங்கம்போல் முடிவெடுத்த சூட்டோடு வருமே ஒரு வேகம் அதுவும் குறையலாம். யோசனை வரலாம். அதனால் முடிவில் ஒரு தடுமாற்றம் தலைகாட்டலாம்.

இரண்டு மனம் வேண்டாம். கூடாது. எண்ணிய முடிக்க, அது திண்ணிய பலன்தர ஒரு மனம் வேண்டும். மனம் ஒன்றாகி திரண்டு நினைத்த காரியம் முடிக்க பலம் தரவேண்டும்.

'வருகிறவன் யார்? வருகிறவன் வாலாட்டினால் பிஸ்டல் மொழியில் பேசி அடக்கிவிட வேண்டியதுதான்' என்று நினைத்து பிஸ்டல் எடுத்து, பக்குவமாய் தன் பரந்து உருண்ட தொடையின் வசதியான மறைவில் தயாராக வைத்து காத்திருந்தபோது ஒரு வேகம் இருந்தது.

இப்போது சற்று யோசனை வந்து மனக்கதவை தட்டிக்கொண்டிருந்தது.

வருகிறவன் புத்திசாலியாக இருந்து முந்திக்கொண்டால் என்ன செய்வது?

தொடை மறைவில் இருந்து பிஸ்டல் தொட்டெடுக்க முன் அவன் முந்திக் கொள்ள வாய்ப்பிருக்குமே?

கொலையா? என்னால் கொல்ல முடியுமா? மிரட்டலாம். அது போதுமே? 'என்னிடம் உன் ஜம்பம் செல்லாது போய்விடு. என் பிஸ்டல் உனக்கு பிச்சை தருகிறது. உயிர் பிச்சை. ஓடிவிடு முட்டாளே. ஓடு!'

என்று எச்சரித்தால் போதாதோ? போதும் என்றது ஒரு மனம்.

போதாது என்று மறுத்தது மற்றொரு மனம்.

சூர்யா தன் கட்டைவிரல் நிமிர்த்தி உதட்டில் பொருத்தி நகம் கடித்தாள்.

சூர்யா தன் கால்களை ஆட்டியபடி இருக்கையில் இருந்தபடி பொறுமையின்றி தவித்தாள்.

சூர்யா இப்போது தன் கைக் கடிகாரத்தில் நேரம் பார்த்தாள். இந்த பத்து நிமிசத்தில் பதினைந்து தடவை கடிகாரம் பார்த்தாயிற்று.

வழக்கமாக வேகமாக ஓடுவது போலத் தெரியும் கடிகார முட்கள் இப்படியான நேரத்தில் மிக மெல்ல தாமதித்து நகர்வதுபோலத் தெரியும்.

சூர்யாவுக்கும் அப்படித்தான் தெரிந்தது.

வலது தொடையின் கீழ் இருந்த பிஸ்டல் உறுத்தியது.

'எடுத்துக் கையில் வைத்துக் கொண்டால் பரவாயில்லையோ' என்று நினைத்தாள்.

ஏதோ ஒரு வாகனம் வந்து வெளியே ஓய்ந்து நிற்கும் ஓசை கேட்டது.

சூர்யா உஷாரானாள். பிஸ்டல் வெளியே தெரிகிறதா என்று பார்த்தாள்.

வருவது ஒரு ஆண். அவன் விழிகளில் அலையும் இடங்களில் பிஸ்டல் மறைந்திருக்கும் இடமும் அடக்கம்.

மீண்டுமொருமுறை சரிபார்த்துக் கொண்டாள். மறைந்திருக்கும் பிஸ்டல் தெரிய வாய்ப்பில்லை.

முன் கேட் திறக்கப்படும் சத்தம் தெளிவாகக் கேட்டது.

இந்தச் சத்தம் ஒரு வசதி. யாரோ வருகிறார்கள் என்று கூப்பிட்டு சொல்வது மாதிரி வசதியான சத்தம். இந்த 'கிரீச்! கிரீச்!.

இதற்காகவே கேட் பிணைச்சல்களுக்கு கிறீசோ எண்ணையோ விடாமல் வைத்திருந்தாள் சூர்யா.

'வருவது யார்?' மனம் அடித்துக் கொண்டது.

இதயத்துடிப்பு ஏறிக்கொண்டிருந்தது. கைகளை மடித்து மார்பின் குறுக்காக கட்டிக்கொண்டாள்.

வெளியே காலடி ஓசை கேட்டது. 'ஷு போட்டிருக்கிறான்.' ஊகித்தாள்.

அடுத்து ஒரு செருமல் சத்தம். வருவதை உணர்த்துகிறான். புரிந்துகொண்டாள்.

வந்துவிட்டான். வந்தேவிட்டான். இதயத்துடிப்பு உச்சவேகம் எடுக்க,

அவன்... அது... வந்தவன் தன் முகத்தில் பாதியை கறுப்புத் துணியால் மறைத்திருந்தான்.

கறுப்பு ஜீன்ஸ். கறுப்பு சேர்ட் கறுப்பு முகத்துணி எல்லாம் பயமூட்ட,

அவன் கையில் பிடித்திருந்த சங்கிலியை விட்டால்,

எதிரே இருப்பவரின் சங்கதியை முடித்துவிடும் போன்று, அச்சமூட்டும் கறுப்பு நிறத்தில், வந்தவனின் தோள் உயரத்தை தொடும் அளவில், நாக்கைத் தொங்கப்போட்டபடி, சூர்யாவையே முறைத்துப் பார்த்தபடி,

அந்த பெரிய நாய்! 'ஜெர்மன் செப்பேட்' அல்சேஷன் நாய். அதன் தோற்றமே நடுங்க வைத்தது.

சூர்யாவுக்கு தன் மூச்சு நின்றுவிட்டதா என்பதுபோல சந்தேகம் வந்தது.

வந்தவன் ஏற்படுத்திய பயத்தைவிட நாய் பயம் தந்தது.

அவனை ஆராய்வதை நாய் தடுத்து, தன் பக்கம் சூர்யாவின் கவனம் முழுவதையும் இழுத்துக்கொண்டது.

அவன் சங்கிலியை பிடித்தபடி கம்பீரமாய் நின்று சூர்யாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

எதிரியை எதிர்பாராத முறையில் சந்தித்து மடக்கும்போது, எதிரி பலமுள்ளவனாக உள்ளபோதும் திணறுவது நிச்சயம். எதிரி விவேகியானால் சந்தர்ப்பம் தெரியாமல் மோத நினைக்கமாட்டான்; தாமதிப்பான்; யோசிப்பான்.

எனவே- அதிர்ச்சி கொடு. அதிரடியாய் திகைக்கவை! வந்தவன் அந்த சூத்திரம் தெரிந்தவனாக இருக்கவேண்டும்.

அவன் முதற்தடவையாக கறுப்புத் துணி மறைவில் இருந்த வாய் திறந்தான்.

"ஒரு மரியாதைக்கு சிட்டவுன் பிளீஸ்கூட தரமாட்டீர்களா சூர்யா?"

சூர்யா அவன் கேட்டவுடன்தான் நாயின் மீதிருந்த கவனம் விலகி, அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

சூர்யாவின் முன் நெற்றியில் பயத்தில் வியர்வைத் துளிகள் எட்டிப் பார்த்துக் கொண்டிருக்க,

அவனும்-நாயும் அவளின் ஒவ்வோர் அசைவையும் கவனித்துக்கொண்டிருக்க;

'கவனிக்கப்படுகிறேன், அடுத்தது 'என்ன? பிஸ்டல் இருக்கிறது. எப்படி அதனை பயன்படுத்துவது?' என்று சூர்யா யோசித்து, திணறி நாக்குழற, பதில் சொல்ல வேண்டுமே என்ற அவசியத்தில்,

'நீ பயந்துவிட்டாய் என்று ஒரு சிறு சமிக்கை தெரிந்தால்கூட பத்து மடங்கு பலமாகிவிடுவான்' என்று மனதுக்குள் எங்கோ குரல் கேட்க,

"ஓ..சொறி...பிளிஸ் சிட்டவுன்."

என்று சிரிக்க முயல, உயிரின் முடிச்சு அறிந்து நெஞ்சின் மையத்தில் சரியான கோணத்தில் செருகிய கூர்வாள் போல-

அவளை கூர்ந்து பார்த்து, அவள் மனதின் துடிப்பை கணக்கிட்டு கணிப்புச் செய்து,

"முடியாதபோது சிரிக்க முயல வேண்டாம் டியர். இந்த இடத்தில் நம் திருவள்ளுவரை மறந்துவிடு... விடுங்கள் சூர்யா!"

சூர்யா லேசாக குழம்பிப் பார்க்க,

"நாம் பேசலாமா சூர்யா? ஐ.மீன் பேரம்?"

சூர்யா யோசனையாய் பார்க்க,

"மூளையைக் குழப்ப வேண்டாம். மிஸ். அதற்கு முன் தரமுடியுமா?"

என்ன கேட்கிறாய் என்பதாய் சூர்யா பார்க்க,

அவன் சிரித்திருக்க வேண்டும். கறுப்புத்துணி மறைத்ததால் தெரியவில்லை.

"என்ன சூர்யா. வாய்க்குள் விரலை வைத்தால் கடிக்க தெரியாத வயதா என்ன?'



அவனே தொடர்ந்தும்

"என்ன புரியவில்லையா சூர்யா? துன்பம் வரும்போது சிரிக்கச் சொன்னார் திருவள்ளுவர் என்று நினைத்து நீ சிரிக்க, எனக்கும் என் பிரிய டைனோவுக்கும் சினம் வந்து குதிக்க..."

சொல்லி நிறுத்தி- பின் தொடர்ந்து,

"உங்கள் அழகான கழுத்தில், அம்சமாக ஒரு முத்தமிட்டால் முத்தமிடும் எனக்கும், அது வாங்கும் உங்களுக்கும் தேவசுகம் பிறக்கக்கூடிய அந்த கழுத்துப் பிரதேசத்தில் இரத்தம் பாயவேண்டுமா சூர்யா? பிரிய பிரதேசத்தை ஏன் போர் பிரதேசம் ஆக்க வேண்டும்?"

சூர்யாவுக்கு கோபம் வந்து, ஆனால் கோபம் காட்டாமல் மறைக்க நினைத்தாலும், விழிகள் காட்டிக்கொடுக்க:

அவன் மேலும் சீண்டிவிடுவது போல,

"உங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அழகுப் பிரதேசத்தை நானும், என் டைனோவும் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அதிக நேரமாகாது என்று தெரியுமா சூர்யா? தெரியும். சூர்யா நீ புத்திசாலியான மற்றும் அழகான பெண்."

சூர்யா மனதுக்குள் அவனை மோதி மிதித்தாள்.

சூர்யா மனதுக்குள் அவன் மார்பில் பிஸ்டலால் துளைபோட்டு, அந்த துளைகளில் இருந்து பீறிட்டு வரும் இரத்தம் இரசித்தாள்.

சூர்யா, மனதுக்குள்...

அவன் மீண்டும் பேசத் தொடங்க, சூர்யா மனதை ஒரு நிலைப்படுத்திக்கொண்டு அவன் முகம் பார்த்தாள்.

வலது தொடை வலிக்கும் டியர்! அந்தப் பிஸ்டலை எடுத்து தந்துவிட்டு வலி போக்கலாமா?"

சூர்யா திகைத்துப் போனாள். டைனோ எனப்படும் அந்தப் பெரிய நாய் அவளையே பார்த்துக்கொண்டிருந்தது.

பிஸ்டலை எடுக்க தன் கரத்தை கொண்டு சென்ற சூர்யா இறுதியாக ஒரு வாய்ப்புக் கிடைக்குமா என்று யோசித்தாள். அவனையும் நாயையும் கவனித்தபடி பிஸ்டல் தொட்டாள்.

■

**ப**ழைய நினைவுகளை மீட்ட மீட்ட சோகம் கசியும்.

வினோவுக்கு நெஞ்சு சோகம் கொட்டியது.

நெஞ்சின் மையத்தில் என்றும் இருப்பாள்.

நிலவுகூட பொய்த்துப் போகலாம். மேகம் மறைக்க நிலவு பணிந்து தன் முகங் காட்டாமல் போகலாம்.

ஆனால், என்றும் என்னோடு நீ என்று அவளை நினைத்த கனவு பொய்த்தது எப்படி?

நம்பமுடியாமல், அவள்...அவள்...என் தேவதை... என் இதய இராச்சியத்தின் ஒரே ஒரு ராஜகுமாரி,

விழிகள் சிமிட்டி, குழந்தைபோல் நிறைவாய், இனிதாய், பால் பொழியும் நிலவாய், பனி சிந்தும் அதிகாலைப் பூவாய் சிரிப்பாளே, இன்னமும் இங்கே-

என் நெஞ்சின் மையத்தில் அதே சிரிப்பு மாறாமல் இருக்கிறாளே?

எல்லாம் மாறுகிறது, அடிக்கொரு தடவை வானின் நிறம்கூட மாறுகிறது.

ஆனால் என்றும் என் நினைவில் புன்னகை மாறாமல் ஷவரின் துளைகளில் இருந்து உச்சந்தலையில் கொட்டும் தண்ணீர்போல,

அந்தப் புன்னகைக்குள் இருந்து மனதின் மையத்தில் இனியவை கொட்டிக்கொண்டு,

'உன்னால்... முடியுமா வினோ? உன்னால் முடியுமா என் நினைவு அறுக்க?

'உன்னால் முடியுமா வினோ என்னோடு நீ கதகதப்பாய் இருந்த நாட்கள் மறக்க?

'உன்னால் முடியுமா வினோ கடற்கரையில் மணல் குவித்து, அந்த மணலுக்குள் மறைவாக கைகள் கோர்த்து பரஸ்பரம் கிள்ளிக்கொண்டு,

"வலிக்கிறது வினோ." என்று நான் கூற,

'இதற்கே வலித்தால் எப்படி என்று நீ கண் சிமிட்டி குறும்பு எறிய-

'முடியுமா வினோ? உன்னால் என் நினைவுகளை, பழைய படம் மாதிரி தூக்கி வீசிவிட்டு, புதிய படம் வைத்து பிரேம் போட்டு உன் மனதில் வேறு ஒருத்தியை தூக்கி வைக்க முடியுமா வினோ?'

என்றெல்லாம் அவள் கேட்டுக் கொண்டும், இப்போது இந்த நிமிடம்கூட சவால்விட்டுக் கொண்டும்,

நினைக்க, நினைவில் எழ வினோவுக்கு மூச்சுத் திணறுவது போல இருந்தது.

நெஞ்சின் மையத்தில் யாரோ ஏறி நின்று பலம் கொண்டு மிதிப்பது போலத் தெரிந்தது.

கதிரையில் இருந்து எழ நினைத்தான். முடியவில்லை.

"எங்கே போகிறாய் வினோ? தப்பி ஓடலாம் என்றா"

அவள் கேட்டு, வழி மறித்து இழுத்துப் பிடிப்பது போல,

வினோ அப்படியே நிமிர்ந்து கதிரையின் பின்புற மேல் சட்டத்தில் தலை சரித்தான். மயக்கம் வருவதுபோல இருந்தது.

உயிர் விலகிப்போவது போல உணர்ந்தான்.

'நினைவு பகிரவேண்டும். இரு என்றவன், இதுவரை எதுவும் பேசாமல் இருக்கிறானே' என்று காயத்திரி நினைத்தாள்.

நினைவுகளின் இடறலால் தடுமாறுகிறானோ என்று தானும் தவித்தாள்.

குறுக்கிடாமல் இருக்க நினைத்தவள் ஏதோ வித்தியாசமாய் உணர்ந்து,

"வினோ" என்றழைத்தாள்.

பதில் வராமல் போகவே வேகமாய் எழுந்து வினோ அருகே போனாள்.

■

**க**த்தி வீசுவதில் ஜவாஹர் கெட்டிக்காரனாக இருக்கலாம்.

ஆனால்-குற்றவாளிகளை பற்றியும், அவர்கள் அசைவுகள், குணம் பற்றியும் அறிந்து வைத்திருந்த குலாம்ஷாவோடு கெட்டிக்காரத்தனம் எப்படிப் பலிக்கும்?

கத்தி வீசப்பட்ட நொடியில் சட்டென்று விலகினார் குலாம்ஷா.

கத்தி விலகிப்போய் அந்த அறையின் பின்புறமாய் சுவர் மூடிப் போடப்பட்டிருந்த திரையை குத்தி கிழித்துச் செல்ல,

எதிர்பாராத அதிர்ச்சியாக,

திரையின் மறைவில் இருந்து, அபயக்குரலாக,

"அய்யோ அ...அம்மா" என்று கூவியபடி,

திரையை விலக்கிக் கொண்டு முகம் குப்புற தரையில் விழுந்தவரை,

நிர்மலாவுக்கும் தெரிந்திருந்தது. தெரிந்தமையால்,

"அடப்பாவி."

என்று அவளையும் அறியும் உதடுகள் உச்சரித்தன.

குலாம்ஷா திரும்பி ஜவாஹரைப் பார்த்தார்.

அவன் தன் கதையும் ஷாவின் கரத்தால் சாவுக்குள் சுருளும் என்ற நினைப்பில் முகம் மரத்து கைகால் உதற ஆந்தை முழிப்பதுபோல முழித்தான்.

"நல்ல காரியம் செய்தாய் ஜவாஹர். நிர்மலா! விழுந்திருப்பது யார் தெரியுமா?"

"தெரியும்"

யார்? என்று நிர்மலாவிடம் கேட்டபடி பசுபதியை தன் பார்வைக்குள் கொண்டுவந்தார் குலாம்ஷா.

■

**டி**.ஐ.ஜி.டென்சில் தன்னோடு ஃபோனில் பேசியவள் குறிப்பிட்ட இடத்திற்கு வந்துசேர பதினைந்து நிமிசம் தேவையாய் இருந்தது.

ஜீப்பை தவிர்த்து, தானே தனியாக காரை எடுத்து வந்திருந்தார்.

போனில் அவள் சொன்ன இடம் அதுதானா என்று மீண்டும் ஒருமுறை பார்வையால் அலசினார்.

ரெலிஃபோன் பூத் விளம்பர வாசகங்களால் பூசப்பட்டிருக்க, 'என்னைப் பாவியுங்கள்...உதவக் காத்திருக்கிறேன்' என்று சொல்வது போல உள்ளே ரெலிபோன் கொழுவப்பட்டிருந்தது.

கார் விட்டு இறங்கினார். ரெலிபோன் பூத் அருகே போய் நின்று, எங்காவது ஒரு பெண் தென்படுகிறாளா என்று பார்த்தார்.

ஒரு பெண் என்பது தவிர அவள் குரல் மட்டும்தானே தெரியும்.


எதிரே நடைபாதையில் ஒரு பெண் நடந்து வருவது தெரிந்தது.

'அவளாக இருக்குமோ?' வந்து கொண்டிருந்தவள் குட்டையான கவுணில் இருந்தாள். கால்களின் வழவழ மின்னலுக்கு என்ன கிரீம் பாவிக்கலாம் என்று விளம்பரம் செய்யும் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கலாம் போல் தெரிந்தாள்.


இவளா அவள்?

(வரும் வாரமும் வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: ஏ.டேவிட் கிறிஸ்தோப்பர்
வயது: 20
முகவரி: 729, கொழும்பு வீதி நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம் வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல்.




பெயர்: ஜெ.ஹுஸைன்
வயது: 17
முகவரி: 41, மெயின் வீதி கெக்கிராவ.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம், தொலைக்காட்சி வானொலி.




பெயர்: கே.ரேகா
முகவரி: 189 கறப்பளை, கெவனபிட்டிய பொலன்னறுவை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.



பெயர்: எஃப். நௌபியா
வயது: 17
முகவரி: 'மயாஸ் மன்ஸில்' வியாங்கல்ல, அகலவத்த, ஹரிக்கந்தன.
பொ.போக்கு: பத்திரிகை வாசித்தல், வனொலி கேட்டல்.



பெயர்: என்.கோபாலகிருஷ்ணன்
வயது: 23
முகவரி: P.O.BOX-20051 DOHA- QATAR
பொழுதுபோக்கு: பத்திரிகை படித்தல்.



பெயர்: ஏ.கே. நாசர்
வயது: 27
முகவரி: 14-A, கொரடாச் சேரி ரோடு, லெட்சமாங்குடி-614101, நாகை காயிதே மில்லத் மாவட்டம், தமிழ்நாடு, தெ.இந்தியா.
பொ.போ: பேனா நட்பு, வானொலி கேட்டல்.

பெயர்: கே.வாசவன்
முகவரி: CHEZ GNANACHELVAN GNANAN, 41 BD DE LA VILLETTE 75010 PARIS - FRANCE.
பொ.போக்கு: கதைப்புத்தகம், ரீ.வி.கேம்ஸ் விளையாடுதல். தொலைபேசி காட்ஸ் சேகரித்தல்.

பெயர்: எஸ்.எம். அஸ்மி
வயது: 23
முகவரி: N.C.B. BANK MAIN 2nd FLOOR. P.O.BOX-3555 JIDDAH-21481 K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம் வாசித்தல், கரம் விளையாடுதல்.

பெயர்: கா. சுப்பையா
வயது: 23
முகவரி: சிக்னல் போஸ்ட், குறிஞ்சிநகர், கறுவாக்கேணி.
பொ.போ: கிரிக்கெட், பத்திரிகை படித்தல், தொலைக்காட்சி.

பெயர்: எம்.எச்.எம். தாஸிம்
வயது: 23
முகவரி: 468, புஞகொறதன்ன, பூகொட, கண்டி.
பொ.போ: பத்திரிகை, வானொலி கேட்டல், பேனா நட்பு.

பெயர்: உலோகிதாஸன் மகேந்திரராஜா
வயது: 29
முகவரி: 108, ஜயந்த வீரசேகர மாவத்தை, கொழும்பு-10.
பொ.போ: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: எஸ்.பி. கபைர்
முகவரி: 471, காலிவீதி, ஹேனமுல்லை, பாணந்துறை.
பொழுதுபோக்கு: ரீ.வி. பார்த்தல், பத்திரிகை வாசித்தல் நண்பர்களுடன் அரட்டை.

www.padippakam.com



சமுதாயம் எவ்வளவு சிந்தனைகளைத்தான் சிந்திக்கிறது! அதன் மேடையில்தான் எத்தனை பிரச்சனைகள்! சில கற்பனைகள்கூட தேவையற்ற பிளவுகள், மனக் கசப்புகள் முன் கொண்டு போய் வைத்து விடுகின்றன. நிகழமுடியாத, நிகழாதவைக ளெல்லாம் நிஜங்களாக பரிமாணம் பெறுகின்றன. இதற்கு யாரை நோவது? மனிதரையா அல்லது சந்தர்ப்பங்களையா? அல்லது....

# ஈரமுள்ள மனங்கள்

## ஹீரா அனஸ்



ராஜன் அப்படிப் போட்டு அடிக்க அந்தக் குழந்தை என்ன குற்றம் செய்தாள்?

பாவம் எதுவுமே அறியாத பிஞ்சு ஷம்லா. அவள் செய்ததெல்லாம் என்ன தீபன், மாமாவை 'டடா' என்று கூப்பிட்டு விட்டாள். அவ்வளவுதான். அதற்காகவா இவ்வளவு தண்டனை?

"உன்னை அடிச்சுக் கொண்டு போடுவன் ஓ!"

கோபக் கனல் மூழ அவன் அவனாய் இல்லை. "உன்னை மட்டுமில்லை, உன்ரை கொம்மாவையும் இண்டைக்கே முடிக்கிறன்." வேலையில் இருந்து திரும்பியவன் இன்று மிகவும் மனச் சஞ்சலத்தில் இருந்தான்.

"அப்படி இருக்குமோ?" மனம் அங்கலாய்த்தது.

"ஆனால் உவள் அப்பிடி நடந்திருப் பாளோ?" சிந்தனை இறுகியது. பகல் வேலைக்குச் சாப்பாடு எடுத்துப்போகாததால் வயிற்றெரிச்சல் ஒருபக்கம்.

"உமா இஞ்சை வாடீ...."

"என்னங்கோ."

"உவள் ஷம்லாவுக்கு யாரடி அப்பன்? நானா ,இல்லாட்டி...."

அவன் வார்த்தையை முடிக்காவிட்டாலும் உமாவின் இதயத்தில் 'சர்ர்' என்று குத்தி ஊனம் வடிந்தது. எல்லைக்கு அப்பாற்பட்ட வார்த்தை. எந்தப் பெண்ணாலும் கேட்க முடியாத ஒரு அதிர்வு.

"என்னடி பேசாம நிக்கிறாய்? சொல்லு. இண்டைக்கே ஒரு முடிவு கட்டுறன்."

கணவன் பற்றிய விடயம் ஆழமானது. மனைவி என்கின்ற அச்சாணி கணவன் என்கின்ற சில்லோடு இணைந்தே நிற்க வேண்டும். சில நிமிடங்கள் இரண்டு இணைகளும் பிரிந்தால்கூட ஆபத்துத்தான். இதே போலத்தான் கணவன் அல்லாத பிறர்மீது அன்பு செலுத்தும் விடயத்திலும் அழமான நோக்குதல் வேண்டும். அதுவே சில நேரம் குடும்பப் பிளவுகளுக்குள் திணித்து விடுகின்றன.

அவளுக்கு அழாமல் இருக்க முடிய வில்லை. மனம் முழுக்க எரிந்தது. என்னவென்று சரிவர அவளால் விடயத்தை இதுவரை ஊகிக்க முடியவில்லை. ராஜனின் கோபத்திற்குக் காரணம் ஒன்று; தான்- அல்லது ஷம்லா என்பதை உணர்ந்தாள்.

"உவள் ஷம்லா அவனை 'டடா' என்டு ஏனடி கூப்பிடுறாள்?"

உமாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. ஆடித்தான் போனாள்.

"உமா என்ரை குஞ்சு. உனக்கு நான் எனக்கு நீ எண்டு ஆண்டவன் எப்படி எல்லாம் அழகா எழுதி வைச்சிருக்கிறான் பாத்தியே?"

"உமா நீ எவ்வளவு அழகடி, உன்ரை பேரழகுப் பெட்டகத்தை எனக்கே தந்திட வேணும் ஓ."

"உமா ஏய் கவனம் முன்னாலை குழி."

நினைவுகள் வந்து வந்து மோதியது. ராஜனா இது? இப்படிக் கேட்டது? இவ்வளவு கேவலமாக, ஷம்லா பிறந்தபோது 'ஏய் குண்டா ஒரு வெள்ளைப் பிள்ளையைப் பெத்துத் தந்திட்டியே என்ரை கண்ணு...."

ராஜன் நீங்களா அப்படிச் சொன்னது?

ராஜன் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்வது? மாமா முறையான தீபனை ஷம்லா ஏன் இப்பொழுதெல்லாம் அடிக்கடி 'டடா' என்றுதான் கூப்பிடுகிறாள். அவளுக்கு அதிலென்ன அர்த்தம் விளங்குமா? இரண்டு வயது ஷம்லாவுக்கு. சொன்னதை அப்படியே சொல்லும் ஒரு வயது.

அம்மாவை ஓடிவந்து கட்டிக்கொண்டு அழுதாள் அவள்.

அவளை அடித்துவிட்டு மனப் பாரத்துடன் தனது கட்டிலில் போய் விழுந்தான் ராஜன்.

திரும்பத் திரும்ப அதே நினைவுகள் தான்.

தீக்குள் விரலை வைத்த வேதனை.

'உமாவும் தீபனும்...ஒன்றாய் இருந்து- தானில்லாத நேரங்களில் தனித்துப்பேசி, பின்னர் குதூகலித்து பின்னர் பரிமாற்றம் செய்து உடல்களைப் பகிர்ந்துகொண்டு...'

ச்சீ.... என்ன இது அரிக்கும் பொன் வண்டாய் அவன் மூளையைக் குடையும் வெப்பு சாரமான நினைவுகள்.

குடும்பத்தில் இப்போது பகை வந்துவிட்டது.

ராஜனும் உமாவும் ஒருவருக்கொருவர் பேசுவதில்லை. வாழ்க்கை இயந்திர மயமானதாய் ஆனது. ஷம்லா பாவம். அவளுக்கு என்ன தெரியும். சின்னவள்.

▫▫▫

உமா சமைப்பாள். பின்னர் சமையல் பாத்திரங்களைக் கழுவி வைப்பது. சாப்பாட்டு மேசையில் சாப்பாடு வைப்பது. வேளா வேளைக்கு தேனீர் கொடுப்பது. என்றெல் லாம் ஊருக்காய் வாழ்வதுபோல் நடந்தது. படுக்கை இரண்டு. ஒரே வீட்டில் இரண்டு ஊமைகள் போல, உமா தனது காரியங் களைச் செய்துவிட்டு வேலைக்குப்போவாள். ராஜனும் தனது விடயங்களைக் கவனிக்கத் தொடங்கிவிட்டான். வழமையைப்போல நாட்கள் மௌனமாய் நகர்ந்தன.

மூன்று மாதங்கள். விபரமறியா ஷம்லா வழமைபோல அம்மாவென்று ஓடிப் போவாள். பின்னர் அப்பா வேண்டுமென்று அடம் பிடிப்பாள். அவளுக்கு அப்பாமீது அளவுக்கதிகமான பாசம்.

தீபன் இப்போது ஊரில் இல்லை. இந்த வேண்டாத பிரச்சனையால் மனமுடைந்து ஊரைவிட்டேபோய் நுவரெலியாவில் ஒரு மரக்கடையில் வேலை செய்வதாகக் கேள்வி.

அன்று மாலை ராஜனின் உறவுக்காரர் வீட்டுத் திருமணம் ஒன்று. கட்டாயம் போக வேண்டும். இருவருமாய் போக வேண்டும். போகாவிட்டாலும் பிரச்சனை. தனிய ராஜன்மட்டும் போனாலும் கேட்பார்கள். உமாவைப்பற்றி என்ன சொல்வது? அப்பா போனால் ஷம்லாவும் போகவேண்டும் என்று அடம்பிடிப்பாள். ஒன்றும் செய்ய முடியாது.

இந்த மூன்று வருட வாழ்க்கையில் இப்படி ஒரு இடைவெளி வந்ததே இல்லை. ராஜனுக்கு பக்கத்து வீட்டு நாகலிங்கத்தாரின் மனுசி சொன்னவைகள் இன்னும் மனத்தோடு மனதாக ஊறிப் போய் வேதனைப்படுத்தியது.

"மோனை உனக்குச் சொன்னா என்ன? உமாவிடை நடத்தை அவ்வளவு நல்லமில்லை ஓ....."

"மோனைராசு ஷம்லாவை அவன் தீபனோடை ஒண்டாவிடாதை. அதுமட்டு மில்லை தீபன்ரை முகவாக்கிலை கொஞ்சம் ஷம்லாவுக்கும் இருக்குபோல எண்டு நாலுபேர் கதைக்கினம் எடா."

"ராசன் நீ [illegible] உமா வீட்டுக்கு [illegible] அவளுக்குப் [illegible] வந்தவன்."

நாகலிங்கத்தாரின் [illegible] வடிவில் ஊற்றிய நஞ்சு தான் [illegible] இவ்வளவு பிளவுகளுக்கும் [illegible] தீர ஆராயாமல் உமாவுக்குக் [illegible] தண்டனைதான் இந்தப் பிரிவு. [illegible] அந்தப் பெண்ணால் எதுவுமே [illegible] முடியாத நிலையில் தன் அன்பான [illegible] தன்னை எப்போதாவது புரிந்து கொள்வார் என்ற மன உறுதியுடன் காலத்தைக் கழிக்கின்றாள். எத்தனை கோயில் தரிசனங்கள்-எத்தனை நேர்த்திக்கடன்கள்- உமா நல்லவள்.

அவசர அவசரமாய் வீட்டு வேலை களை முடித்துவிட்டு ஸ்கூலில் அதிபரின் ஏச்சுக்கு முதல் ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போட வேண்டும் எனும் படபடப்புடன் அந்த ஒற்றையடிப் பாதையால் ஓட்டமும் நடையுமாக வந்து இளைக்க இளைக்க ஒரு பஸ்ஸைத் தவறவிட்டாள் உமா.

இனி என்ன அடுத்த பஸ்வர இன்னும் அரை மணித்தியாலங்களாவது பிடிக்கும். கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். மனம் பாடசாலையை நினைத்தது. அவளின் கடமை தவறாத உணர்வு உந்தியது. அவள் ஒரு நேர்மையான ஆசிரியை. திருமண விடயமாக ராஜன் இன்று வேலைக்குப் போகவில்லை. வீட்டில் இருக்கிறான்.

ஒரு நினைவு மின்னலாய் தோன்றி வெட்டி மறைந்தது. அவள் பதட்டமானாள். 'ஐயோ' என்ரை ராஜன். என்ரை ஷம்லா'. இதயம் வேகமாக அடித்தது. வியர்வையால் உடம்பு முழுக்க நனைந்துவிட்டது. உடல் நடுங்கியது.

வேலைக்கு வரும் அவசரத்தில் குசினியில் 'காஸ்' பைப்பை மூடாமல் வந்துவிட்டாள். இப்பொழுது 'காஸ்' குசினி [illegible]

[illegible]

"ராஜன்..." [illegible]

[illegible]

"ராஜன்..." [illegible] திறங்கினோ..."

"உமா... [illegible] பறக்கப் [illegible] சிந்தனையுடன் [illegible] யுடன் முன் [illegible] திறந்தான் ராஜன்.

"ராஜன்..." [illegible] கைகளில் இருந்த [illegible] பறித்துக்கொண்டு [illegible] அழுதாள்.

தனது மார்பில் [illegible] அழும் உமாவை [illegible] போனான் ராஜன்.

"ராஜன். என்ரை ராஜன்" [illegible] அன்புக் கணவனின் [illegible] இரண்டையும் மாறி மாறி [illegible] உமா.

"ராஜன் உங்களுக்கு [illegible] கூடாது எண்டு [illegible] அம்மனை [illegible] பொங்கலுக்கு இரண்டு [illegible] செம்பு [illegible] வைச்சனான்..." [illegible] கேவலும் ஒருங்கே [illegible] சொன்னாள் உமா.

தன் அன்பு [illegible] பாசத்தை [illegible] போனான் ராஜன்.

'இவளையா நான் தப்பாக [illegible] னேன்? இந்தளவு [illegible] என் கோபத்துக்கு [illegible]'

"என் உமா... என் [illegible] நீதானம்மா என்ரை உயிர் மூச்சு. என்னுடைய எல்லாமே..." ராஜன் வாய்விட்டுச் சொன்னான். ராஜன் மெய்மறந்து போனான். தனது அன்பு மனைவியை வாரி அணைத்து நெற்றியிலும் கன்னங்களிலும் தனது பாசக் காணிக்கையைச் செலுத்தினான்.

"பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?"

ஷம்லா விழிக்கவில்லை. [illegible] விட்டது எனது அன்பானவர்களே!

அந்தத் தம்பதியை உல்லாசமாக இருக்கவிட்டு வாருங்கள் போவோம். எங்களது நந்தவனம் தேடி......

## குட்டிக்கதை

"......இடம்பெற்ற தாக்குதலில் அரசாங்க தரப்பில் ஐந்து பேரும் தீவிரவாதிகள் ஏழுபேரும் கொல்லப் பட்டார்கள். தாக்குதலின்போது இடையில் அகப்பட்ட பொது மக்கள் இருவர் படுகாயம்..." தொடர்ந்து ஒலித்த செய்தி யறிக்கை அவனுள் ஒருவித கவலையா, கோபமா, விரக்தியா என்று இனம்புரியாத உணர்வின் கலவையாகி விட-ரகு 'சட்'டென வானொலியை நிறுத்தினான். எங்கோ எப்போதோ வாசித்த வரிகள் அவன் மனதினுள் நிழலாடிற்று.

"யார் யாருக்கிடையேயான யுத்த மானாலும் கொல்லப்படுவது உயிர்கள். விலை மதிப்பில்லா மனிதம். யுத்த கொடுமை யினால் ஏற்படுத்தப்படும் அவலங்களும் அகதிக் கோலங்களும் எத்தனையெத்தனை! யுத்தம் புரிவதில் இலாபம் யாருக்கு? சேதமே மீதி."

எப்படியிருந்த உலகம்! எப்படி உரு மாறிவிட்டது? கடந்த காலங்களில் அமைதியாகவிருந்த ருவெண்டாவும், யெமனும் இன்றைய தலைப்புச் செய்திகளில் இறப்புகளின் எண்ணிக்கையோடு முக்கி யத்துவம் பெறும் அவலம். பழங்கதையான பொஸ்னியாவும் ஆப்கானும். இடைக்கிடையே ரணகளமாகும் சோமாலியா. ஏன்? ஏன்? யாரிடம் கேட்பது? யார் பதில் தருவது? உலகமே உருளும் ஓர் அக்னி வட்டமாய் ரகுவின் மனம் உணர்ந்தது. அதிலும் நம் நாடு...ஒரு தேசத் தீயில் எரிவதாய்...அவலம்.

அன்று மாலை. வாயில் மணி இடை விடாது ஒலிக்கவும் கதவைத் திறந்தவன் வாடிய முகமாய் ஒரு பெண்ணும் பக்கத்தில் பத்து, பன்னிரெண்டு வயது மதிக்கத்தக்க சிறுவனும் நிற்பதைக்கண்டு கேள்விக் குறியானான். "தம்பி. கடவுள் உங்களுக்குப் புண்ணியம் கோடி கொடுப்பார். அகதியா, அனாதையா நிற்கும் எனக்கும் என் மகனுக்கும் ஏதாச்சும் உதவி செய்யுங்க."

இப்படித்தான் அனாதை, அகதி என போலியாய் பலர் நடமாடித் திரிகிறார்கள். ரகுவின் தாயார் பரிதாபம் பார்த்து போலி வேடதாரிகளிடம் தருமம் செய்து ஏமாந்த கதைகளுமுண்டு. ரகு அவர்களை குறுக்கு விசாரணை செய்தான். அப்பாவியான முகத்தோற்றம். கல்லான மனதையும் கரைய வைக்கும் ஒரு பரிதாபக் கதை. ஆமாம்.

# ஏன் என்ற கேள்வி

ஷர்மிளா இஸ்மாயில்
கண்டி



அவர்களும் ஒரு காலத்தில் சுகமான வாழ்க்கையை அனுபவித்தவர்கள் தாம். யுத்தத்தின் இடையில் அகப்பட்ட அப்பாவி மனிதப் புறாக்களாய் அவர்களின் கூ(வீ)டும் கலைக்கப்பட்டது. அழிக்கப்பட்டது. உயிர் களும் உடைமைகளும் சேதாரமாக, தப்பிய வர்களுள்- தப்பியமைக்காக வருந்திக் கொண்டு அழிவின் அவல அடையாளமாய் ஆங்காங்கே ரணங்களோடும் தழும்புக ளோடும் இவர்கள் நின்றார்கள். சோகமான சுமைகளோடு இரு ஜீவன்களின் வாழ்க்கைப் போராட்டம்.

"என்ன ரகு? இவங்ககிட்ட போய் குறுக்கு விசாரணையெல்லாம் வெச்சுக்கிட்டு. அடிபட்டு வந்தவங்கள அரவணைச்சுக்க தெரியணும். காயங்களுக்கு கட்டுப் போடாட்டியும் அதைக் கிளறி விடாம இருக்கணும். உதவின்னு நம்ம வாசலை நாடி வந்துட்டாங்க. அவங்களுக்கு உதவுறது நம்ம கடமை. இன்னிக்கு இப்படி இருக்கோம். நாங்க நாளைக்கு எப்படி இருப்போம்கிறது உத்தரவாதமில்லை... இரு... ஏதாவது கொடுப்போம்."

என்று 'லெக்சர்' பண்ணிவிட்டு அம்மா உள்ளே போய்விட்டாள். இனி இவர்கள் நிச்சயம் கை நிறைய கட்டிக்கொண்டு போவது உறுதி. புன்னகைத்தான் ரகு.

மீண்டுமொரு முறை அந்தப் பையனைப் பார்த்தவன் மனதினுள் ஓர் நெருடல். பெருமூச்சுடன் தன் அறைக்குள் சென்றவன் மனதில் மீண்டும் மீண்டும் அந்தப் பையனின் கலங்கிய விழிகள். அரும்பாகும் போதே தீக்குள் வளர்வதாய் அவன் வாழ்க்கை.- அச்சிறுவனின் நேற்றுகளில் இரத்தக் கறை. இன்றுகளில் பட்டினியுடனான ஏக்கங்கள். நாளைகள்?? நாளைகள்?? யுத்தமே! உனக்கு ஏனிந்த இரத்தப் பசி? மனித உயிர் பலிகள் கொள்வது ஒரு புறமிருக்க; நடைப்பிணமாய் எத்தனையெத்தனை மனித ஜீவிதங்கள்!

கடைசியாய் ஒரு கேள்வி. யுத்தமே இல்லை என்கிறார்களே, அப்புறம் இந்த அகதிகள் எங்கிருந்து உருவாகிறார்கள்? அகதி முகாம்கள் ஏன்? உயிர்கள் பலியாவது எப்படி? ஏன்? எதற்காக?

ரகு கதிரையில் சாய்ந்து கொண்டான். அவனது வினாக்களுக்கு விடை தரப் போவது யாருமில்லை என்பது போல் ஜன்னலூடாக மெல்லியதாய் தவழ்ந்து மிதந்து வந்த அந்தக் காற்றில் மௌனமே நிறைந்திருந்தது. மௌனம் தவிர வேறில்லை. ■

# உன் புன்னகை போதும்

## -தர்கா நகர் ஷஹிர்ஷா தாஸிம்-

"காதலி அன்போடு
காதலன்
நான் எழுதும்..."

அன்பான உனக்கு,

அன்பாக நான் வரையும் மடலல்ல; என் இதயம்.

வானத்தில் நிலவாய்
கடலில் அலையாய்
நதியில் மீனாய்
மரத்தில் பூவாய்
சுவரில் சித்திரமாய்
என் இதயத் தாஜ்மஹாலில் மும்தாஜாய்
குடியிருக்கும்
என் உயிரே!

நீ அன்று கல்லூரிக்குப் போகும் ஒவ்வொரு விடியற்காலையும் உனக்காக நான் என் வீட்டு ஜன்னல் கம்பிகளின் மறைவில் இருந்து கொண்டு சிந்தும் அந்த ஓரப் புன்னகை, உனக்கு ஞாபகம் இருக்கிறா...? பதிலுக்கு உன் வேல் விழிகளால் என்னை உராயும் அந்த சுந்தரப் பார்வையாவது உனக்கு ஞாபகம் இருக்கிறதா...? இருக்கத்தான் வேண்டும்! இல்லை என்று எப்படி உன்னால் கூற முடியும்? பத்துவயதில் இருந்தே என்னுடன் பல்லாங்குழி ஆடியவளாயிற்றே நீ....!

இத்தனை நிஜமான நிகழ்வுகளை மறந்து தனிமையில் எப்படி நீ அங்கு சுவாசிக்கின்றாய் என்று தான் நான் யோசிக்கின்றேன்.

தென்றலைத் தூது விட்டேன் உன் சேதி அறிய, "இது ஒரு விபத்தின் மூலம் விளைந்த காதல் என்று விளக்கம் கூறி இருந்தாய்"!

சீரியசாக நான் இங்கு இருக்கும் வேளை, சிம்பிளாக நீ கூறிவிட்டாய்.

அப்படியானால் அந்த விபத்தில் இதயம் என்னும் என் கண்ணாடி உடைந்து போனது மாயம் தானா? காயமானது என் இதயம் மாத்திரம் தானா? "இந்த விபத்து இவ்வளவு தான் என்று உன் இதயத்துக்குள் ஒரு அளவு வைத்துக் கொண்டாயா? அதற்கு மேல் விருட்சமாக வளர்ந்து விட்டது என் இதயத்தில் அந்த விபத்து.

குளித்து முடித்துக் காற்றில் உலர்வது போல சந்தோஷத்தை உணரவைத்தது உன்னுடைய அந்த முதல் புன்னகையின் அணிவகுப்பு.

உன் புன்னகை சாதாரணப் புன்னகையை விட வித்தியாசமாக இருந்ததால் தான் இன்று எனக்குள் அந்த விபத்து விஸ்வரூபமெடுத்து ஆடுகிறது. என் இதயத்துக்கே இலக்கான உன் புன்னகை இன்று வழக்காடுதல் நியாயமா? என் இதயத்தை களவாடியவள் நீ. இன்று அதையே ஒரு சருகாய் மிதித்துப் புண்படுத்துதல் நியாயமா?

உன்னிடம் எனக்கு எவ்வளவு பைத்தியம் என்று உனக்கே தெரியும். இருந்தும்- என் காதல் போராட்டத்தை எந்த அளவில் கொண்டு இரக்கம் காட்டுவது என்று உனக்கு ஏன் இன்னும் புரியவில்லை?

சமுதாயத்தில் காதலை தடுக்க முடியாது. காதலிப்பவர்களையும் தடுக்க முடியாது. காதல் வேட்டையில் ஈடுபடுவோர் சிலர், ஈடுபட முடியாமல் வேட்டையைப் பார்ப்பவர்-பார்த்து ஏங்குவோர் பலர். காதல் வேட்டையில் சிலர் வெற்றிபெற பலர் அழிகிறார்கள்.

நானும் காதல் வேட்டை ஆடுகின்றேன். பெண் மான் உன்னை துரத்தும் வேடன் நான்.

நீரிலே கிடந்தும் நீர்த்துளி ஒட்டாத வண்ணம் உன் நினைவுகளில் நான். இறுதியாக மடலை முடிக்குமுன் உன்னிடம் நான் வேண்டுவது,

1993இல் உன் இதழ் திறந்து சிந்திய அந்தப் புன்னகையை மீண்டும் 1994 புதுவருடத்தில் என்னை நோக்கி சிந்து அது போதும்....!

(உன் புன்னகையே போதுமே எங்கள் புண்கள் எல்லாம் ஆறுமே...)

இப்படிக்கு,
1994 புதுவருடத்தில் உன் புன்னகையை எதிர்பார்த்திருக்கும்,

-உன்னவன்-

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை-I

# உங்களோடு...... இறந்தவன் பேசுகிறேன்

-மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்-

நான் கதை, கவிதை என நிறைய எழுதினதுண்டு.

என்னைப்போலவே.... இப்பொழுது என் ஆத்மா ஒரு கவிதை எழுதுகிறது. காரணம்... கடந்துபோன கறுப்பு இரவுக்குள் நான் மட்டும் தனியாய் இறந்துபோனேன்.

மறுக்கவோ, வெறுக்கவோ முடியவில்லை.

-இறப்பை அறுத்தெறியவும் முடியவில்லை.. காரணம்....

இறப்பு என்பது கறுப்பல்ல....

அடுத்தவுலகுக்கோர் மொழிபெயர்ப்பு!

-இனிப்பான செய்தியல்லயிது...

இறந்தவனின் இதயம் அழுகிறது!

ஆக-

எப்படியோ நான் சர்வ நிச்சயமாய் இறந்துபோனேன்.

(இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்)

• - •

வயலோரம் வரம்பு வழுக்கி, நெற்கதிர்களுக்குள் சுருண்டு விழுந்து, புரண்டு எழுந்தபோது: அந்தச் சுடுகாடு என் கண்ணில் பட்டது. கூடவே, என் கடைவாயோரம் நுரைதள்ளி.... நான் அறுந்து விழும் வெளிப்பட்டது.

சுடுகாட்டிலே என்னைப்போல சில சோகமான மனங்கள். வேகமாக வந்தெனை வரவேற்றன.

இவனுடம்பில் அறுநெடுத்த மூச்சுக் காற்றோடு இந்த மனதுடம்பும் மறைந்துபோக.....

என ஆசைகள், விருப்பு வெறுப்புகள், உணர்ச்சிகள், உணர்ச்சிகளின் பரிமாணங்கள் எல்லாம் உங்களுக்கும் புரியவேண்டும் என்பதற்காகவே, இறந்துபோன பின்பும் நான் நிம்மதியில்லாமல்....

இறந்தவன் பேசுகிறேன்... கேட்கிறதா?

• - •

மும்தாஜுக்காகவொரு தாஜ்மஹால் கட்டிய சாஜஹான், தாஜ்மஹாலை காதல் சின்னமாக்கிவிட்டு மடிந்துபோனது மாதிரி, என்னைக் கடந்து-மறந்துபோன என் தேவதைக்காக- அவளின் சந்தோசத்துக்காக, எனக்குள் நான் சில சோகங்களை அமைமாக்கிக் கொண்டு இறந்துபோனேன்.

ஆனால்:

இவன் மரணத்துக்கு பலரும் பலதும் சொன்னார்கள்.

சில கருத்துக்களேயில்லாக் காரணங்களாகிவிட்டன.

"சிறிய வயதிலேயே சிகரட்டுக்கு அடிமை!"

-சிந்திக்காமல் சிலர் சொன்னார்கள். 'சிகரட் புகைதான் இவனுடம்பின் உயிரை உறிஞ்சிவிட்டதாம்.' அப்படியா என்று சிலர் அதிசயப்பட்டார்கள்.

'நெஞ்சுக்கூட்டிலே எஞ்சிய நோய்கள் உயிர் மிஞ்சவில்லை!'

-பலர் சொன்னார்கள். சிலர் ஆமோதித்தார்கள்.

"நேரம்டா... எல்லாம் நேரம்!"

இப்படியும் சொன்னார்கள். மையத்து வீட்டுக்கு வருவோர், போவோர் வாசனையே இல்லா வார்த்தைகளை உதிர்ந்து விட்டுச் சென்றனர்.

கண்ணீர்.

கதறல்.

அழுகையென வீடு முழுவதும் சோக அடையாளங்கள்,

"நல்ல பொடியன்

வெள்ள மனசு-

வெடுக்குன்னு போயிட்டானே!"

ஊமையாய் அழுத சில சோகமான மனங்கள் இப்படியுமெண்ணி பெருமூச்சு வெப்பத்தை வெளியே விட்டதையும் இவன் அறியாமலில்லை.

அயலவர்-

உறவினர்-

அனைவரும் வந்து ஆறுதல் சொல்ல...

"போனவன் திரும்பி வரவாபோகிறான்?"

எல்லோரும் ஏதோ ஏகனையே சாடினர்.

தூரத்திடங்களுக்கு டெலிபோன், தந்தியென முண்டியடித்து மரணச் செய்தி பரப்பின.

வந்து குவிந்தனர்.

சனம்-

வந்துகொண்டும் இருந்தனர்.

"நல்ல சனமே..."

வருவோர் போவோர் பேசிக்கொண்டனர்.

வீடு முழுக்க சாம்பிராணிப் புகையும், சந்தன மணமும் கமகமக்க..... இவனைப் பெத்த வயிறும் கண்ணீர் வெள்ளத்தில் சிக்குண்டு போயிருக்க...சிலர் இப்படியும் சொன்னது இவன் காதிலும் கேட்டது:

"அந்தப் பொடியனின் உம்மா...ரெண்டு மூன்றுமுறை தலைசுற்றி விழுந்துட்டாவாம்!"

இவனாகியநான் இப்போது அழத் தொடங்கினேன்.

தாய்மை அழுதது.

சேய் மெய்யாகவே அழுதது.

மூத்த உறவினர்கள் வீட்டு வளவில் சில சோகங்களை ஆராயத் துவங்கினர். என்னில் குறைகாணத் துவங்கினர்.

எப்படியோ.....

எனக்காக,

என் இலக்கிய இதழ்கள்,

-இனிமையான க(வி)தைகள்;

இயன்றவரையும் அழுததாக

-நான் உணர...

எனக்காக-

என் தேவதை அழவேயில்லை.

என் காதல்கூட அழுதது.



உம்மாவுக்கு என்மேல் ரொம்பப் பாசம். அதனால் வேஷம் காட்டாமல் மாசக் கணக்கில் உருகிப் போவாள். பாவம்:

என்கூடப் பிறந்ததுகள் கூடியே அழுது வாடிப் போயினர்.

என்னுடன் வயல்வெளியில் சுற்றித்திரிந்த கிறுக்குத்தனமான நண்பர்கள்கூட வெய்யிலில் வெந்தவர்களாய் வெதும்பியழ....

ஸ்போர்ட்ஸ் நண்பர்கள் ஸ்தம்பித்துப் போக...

இலக்கிய நண்பர்கள் தம் றோணியோ யிதழ்களில் என் மீளாத்துயில் பற்றி வருந்தியெழுத, மனதுக்குள் வசனம் அமைந்தனர்.

'இளம் எழுத்தாளன். இவன் நல் கவிஞன்.

இறைவனிடம் போனது-

இலக்கியவுலருக்கோர் இழப்பு!'

நான் மொத்தமாகப் புதைந்து போகும்முன்...என் 'கத்தங்களுக்கு' முத்தம் கொடுக்கவும் சிலர் காத்து நின்றனர்.

காரணம்....

என்னவளை விட்டு-

என் காதல் இறந்துபோனதற்காக

நான் அழுதிருக்கிறேன்.

ஆனாலும்:

நான் இறந்ததற்காக

என்னவள் அழவேயில்லை.

சொந்தப் பெரியம்மாக்களும்- சொந்தமில்லாப் பெரியம்மாக்களும், நல்ல மாமிகளும், சின்ன மதினிகளும் வண்ண வண்ணமாய்-வர்ண வர்ணமாய் வந்து குந்தி அழுதனர்.

'இளம் வயசு-

இளம் சிவப்பு

இவனுக்கா இந்தக் கதி!'

அனைத்துப் பெரியப்பாக்களுக்கும் அளவுகடந்த ஆத்திரம்.

மாமாக்களுக்கு மட்டும் எம்மாத்திரம்?

அழுதார்கள். அழுதார்கள். அழுதார்கள்.

என் கைபட்ட பூமரமும் அழுதிருக்குமா? இருக்கும்.

பாசங்களும் அழுதன.

வேஷங்களும் அழுதன.

என்னோடு சேர்ந்து என் இலட்சியங்கள் கூட எரிந்துபோய்விட்டதாக, என் கூடயிருந்தவர்கள் குமுறியழ...

பகல் நிலவு போலாகும்

பகல் கனவுகளுக்கு மத்தியில்

பட்டுப்போன-

இவனும் அப்படியோ?

உடம்பில் காற்று வாங்கி எல்லோரும் அழ.... அன்புக்காக மட்டும்

அழும் சிலரைப் பார்த்து நானும் அழுகிறேன்.

'வேஷங்கள் தெரியாமல் இருக்கிறீர்களே

என்னைப் போல் மோசம் போய் விடுவீர்கள்!

-எச்சரிக்கை!'

இறந்தவன் சொன்னது கேட்கிறதா?

என் ஆசைகள், இலட்சியங்கள், விருப்பு வெறுப்புக்கள் எல்லாமே என்னுடன் போய்விடப் போகிறதா? என் கொடுப்பனவு இவ்வளவுதானா?

ஏய் உங்களைத்தான்....சொல்லுங்கள்.

இறந்தவன் நான் அழுகிறேனே... என் கண்ணீர் துடைக்கும் கருணை உங்களுக்கில்லையா? எனக்கு உதவும் மனப்பான்மையில்லையா?

"உண்டு!"

என்னையாண்டு...எனக்கு திரவ மூட்டிய அரசே!

உங்களுக்கு உதவும் மனப்பான்மை உண்டு.

உங்களை மறக்கமாட்டேன்."

என் பேனா. அதிர்ந்து கூறுகிறது. அசரீயாய்... என் கண்ணீர் காய்ந்து போக... பேனா மைகூட அழுகிறது. எனக்காக- இறந்தவனுக்காக எல்லோரும் அழுது ஓய்ந்து விட்டிருப்பார்கள். நாளடைவில் இறந்துபோன என்னையே எல்லோரும் மறந்துபோவார்கள். என் காதலியைப் போல..... ஏனெனில்- நினைப்பதை விட மனிதர்களுக்கு மறக்கத்தான் தெரியும்.

ஆனால்...

என் பேனா மட்டும் அழுதுகொண்டேயிருக்கிறது.

என் காதலைப்போல...

ஏனெனில்-

காதலுக்கு நினைக்க மட்டும்தான் தெரியும்.

• - •

நான் கதை, கவிதையென நிறைய எழுதினதுண்டு. என்னைப் போலவே என் ஆத்மா இன்று எழுதுகிறது. காரணம்... கடந்துபோன கறுப்பு இரவுக்குள் நான் மட்டும் தனியாய் இறந்துபோனேன். (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்)

## சிறுகதை-2

# கைதி

ஓட்டமாவடி-அறபாத்

> "இளமையின் துடிப்பும் வனப்பும் சாக்கடையில் கழிந்ததும், திருடுவதில் புதுமைகளை ஏற்படுத்தியதும் உம்மாவின் தூண்டுதல்"

"ஏதுடா தேங்கா?" "றகுமத்து மாமிட வளவுக்க கிடந்திச்சி." "இஞ்ச கொண்டா, ஒத்தருட்டயும் சொல்லாத, மறுகாப்போய் அவட மாமரத்துல கறுத்த கொழும்பான் பழுத்திருக்கு. ரெண்டப் பிச்சிட்டுவா." அவனின் வாழ்க்கையின் அஸ்த்திவாரம் இப்படித்தான் தொடங்கியது. "ஓ...உம்மா இண்டைக்கி நீ இருந்தா..." அதற்கு மேலும் அவனால் நினைக்க முடியவில்லை. இரும்புக் கம்பிகளை இறுக்கிப்பிடித்து அதன் மையத்தில் தலையை அடித்துக் கொண்டான். தன் சக நண்பர்களின் அரட்டையும், ஆரவாரமும் அவனுக்குள் துடிப்பையும் துள்ளலையும் கிளறவில்லை.

பகல் முழுக்க கற்பாறைகளில் மோதி, மோதி உரமேறிய வலிய கரங்களை இறுகப் பொத்தி தோள் புஜங்களை பார்த்தான். திரண்டெழுந்தது. இந்த ஆண்மையும், திரட்சியும் கடலில் பெய்த மழையாக பயனற்றுப்போவதை நினைக்க நினைக்க தன் தாயின் மேல் சினமேறியது. புடைத்து நின்ற புஜங்களை வலக்கரத்தால் தடவிப்பார்த்தான். 'சுள்'ளென்று வலித்தது. புதுக்காயம், நேற்று களைப்பு மிகுதியால் சற்று இளைப்பாறியவனின் புறத்தில் பொலிஸ்காரன் அடித்த அடியின் கீறல்தான் அது.

கீறல்கள் வெளியே ஆறிப்போகும்- அவனுக்குள் கோழ் சீச்சியதான ஏக கீறல்கள். உள் மனசில் உறுத்திக் கொண்டிருக்கும். சதா வருத்திக்கொண்டிருக்கும் வடுக்கள். அழிக்க முயன்றான். காட்டுத்தீயை கைவிசிறி என்ன செய்யும்? துடைக்கத் துடைக்க துயரங்கள் அலைமோதி கொட்டின. இரவு உணவுக்கு மணியடிப்பது நன்றாய்க் கேட்டது. வரிசையில் நின்று குட்டு வாங்கி ஒருபிடிச் சோறு- இதற்குப் போய் ஓடுவானேன்? என்றும் பசி, புடையன் பாம்பைப்போல் வயிற்றுக்குள் விரிந்தது. குடல்கள் நெளிந்து நீண்டன. மேலே சொருகியிருந்த நாவாப் பீங்கானை எடுத்துக்கொண்டு வடைசியாக சென்று நீட்டினான்.

"டேய் பாறூக் ஏதுடா ரெண்டு பார்சல் சோறு." "இண்டக்கி பள்ளியில நார்சா, எனக்கும் ஒரு பார்சல தந்தாரு மோதினப்பா.. மத்தது நம்மட அஹமது காக்கா.. அவரு தொழக்குள்ள பேசாம தூக்கிட்டு வந்தன்." "இண்டக்கி சோறும் ஆக்கல்ல. நல்லாத் தின்னலாம்."

"ஏய் சோத்தவாங்குனா போய்த் தின்னு." மண்டையில் 'நொள்'ளென்று விழுந்தது. திடுக்கிட்டு நடந்தான். ஒவ்வொரு தவறுகளின்போதும் எத்துனை பாராட்டும், ஊக்கமும் அவனுக்கு ஊட்டப் பெற்றன.

இளமையின் துடிப்பும், வனப்பும் சாக்கடையில் கழிந்ததும், திருடுவதில் புதுமைகளை புகுத்தியதும் அவனது உம்மாவின் தூண்டுதலினால்தான். துளிரிலேயே நச்சுப் பசளைகளை தூவியவள் அவள்தான். அவனது



வாலிபத்தை பயங்கரமாய் மாற்றியவள். சிறியதிலிருந்து வங்கிவரை போகச் சொன்னவள்.

நேற்று ஒரு மணித்தியாலம் இவன் வேலை செய்யவில்லை. ஒரே அசதி. சுகயீனமென்று வந்துவிட்டான். அதையும் இன்று செய்துமுடிக்க வேண்டும். கற்குவியலின் முன் அமர்ந்தான். இரும்புச் சுத்தியலால், பொடியாக்கத் தொடங்கினான்.

"உம்மா றகுமத்துமாமி தக்காளி கண்டுக்கெல்லாம் வேலி போட்டிருக்கா, நல்லா காச்சிருக்கு."

"இந்தா! சுத்தியலப் புடி! இதால ஆணியக் களட்டிப்போட்டு, ரெண்டு பழுத்த பிச்சிட்டு கெதியாவா, கருவாட்டுக்க போட நல்லாரிக்கும்."

"ஆ.... ஏண்டா சுத்தியல வச்சிக்கிட்டு அப்படியே இருக்கா." சிறைக் காவலாளியின் பூட்ஸ்தன் முதுகின் மூட்டுக்களை கழற்றி விட்டதைப்போல் கொடூரமான ரணங்கள். அவனது உம்மாவின் ஆசிர்வாதத்தால் இலங்கை வங்கியொன்றை கொள்ளை யிடும் அளவிற்கு அவன் வளர்ந்து விட்டிருந்தான்.

ஒருநாள் இரவு, "மகன் பாறுக் பாத்து போ. இண்டையோட நமக்கு நல்ல காலம் பொறக்கும். நீயும் இனி உசுரக் கொடுத்து களவெடுக்கத் தேவல்ல." வங்கிக்குள் நுழைந்ததும், காவலாளியை கொன்றதும், பின் அலாரம் அடித்து பொலீஸ் சூழ்ந்ததும், நேற்று நடந்ததுபோல்... மூன்று வருடங்கள் உருண்டோடி விட்டன. இரண்டு வருடங்களாய் அவனின் உம்மா வந்து பார்த்தாள்.

• "உனக்கு என்னால்தான் இந்த நெலமை." தினமும் இதைச் சொல்லி புலம்புவாள்.

அவளை பார்க்கும் கணமெல்லாம் உள்ளம் தீப்பற்றி எரிந்தது. 'அவள் மட்டும் என்னை சீராக வளர்த்து விட்டிருந்தால் இன்று ஒரு நல்லவனாக உலாவித் திரிவேன்.' நாளாக நாளாக அவள் மீதான வெறுப்பு கூடியதே தவிர, குறையவில்லை.

"டேய் பாறூக் உங்க உம்மா வந்திருக்கா. போய் பாரு" "அவவ வூட்டுக்கு போகச் சொல்லு ஸலீம்," "ஏண்டா, அவட முகத்துல முழிக்க விரும்பல்ல?" இப்படி ஒரு வருஷமாய் அவள் வருவதும், அவனை காணாமல் செல்வதுமாய் ஒரு இடைவெளியின் கடுமையில் நாட்கள் நகர்ந்து விட்டன.

"அவனின் பால்ய நண்பன் அஸ்லம் ஒருநாள் திடுதிப்பென வந்து போனான். உம்மாவைப் பற்றி சொன்னான். "பாறுக் உன்ட உம்மாவ பிச்சைக்காரிட கோலத்துல பார்த்தன். கள்ளன பெத்துப்போட்டு, பிச்சயா கேக்காய்ன்னு சிலபேரு திட்டுனாங்க.

"அப்புறம் உண்ட மச்சி ரம்ஸியாவுக்கும் கலியாணம் முடிஞ்சிட்டு." அவன் பேரிடிகளை இறக்கிவிட்டு போய் விட்டான். அரிவாளால் தலையை பிளப்பதைப்போல விண்ணென்று வலித்தது. "ஓ உம்மா, நீ இப்ப பிச்சைக்காரியா?" அழுதான் என்றைக்குமே அவன் அழுததில்லை. தன் தாயின் மேலுள்ள வெஞ்சினமும், வைராக்கிய வெறுப்பும் போய் அவளைக் காண வேண்டும் என்ற ஆவலும், ஏக்கமும் அவனை நெருக்கின. இப்போது அவனைப் பார்க்க யாருமே வருவதில்லை.

ரம்ஸியா திடீரென அவன் மனசுக்குள் வந்தமர்ந்தாள். மாவடுப் பருவம், அவனுக்கென்றே வளர்ந்தவள். அவன் தொழில் தெரியாமல் காதலித்தவள், எல்லாக் கனவுகளும் கானலாகி, புஸ் வாணமாகிவிட்டதாய் உணர்ந்தான். இந்த அகன்ற பிரபஞ்சத்தில் அவன் மட்டும் தனித்து நிற்பதான உணர்வு. "ம் அவள் நல்லா இருக்கணும்." பெருமூச்சுடன் வானத்தை வெறித்தான். மழை இருட்டியதைப்போல் கருமையாய் இருந்தது.

ஒருநாள் மாலை அவன் நண்பன் அஸ்லம் வந்தான். வழக்கமான விசாரிப்புக்கள். அஸ்லம் அவனை பரிதாபமாய் பார்த்தான். "மச்சான் அஸ்லம். எங்க உம்மாவ கண்டா வரச் சொல்லுடா." குரல் தளதளத்தது. நா வரண்டு ஒடுங்கிப் போனது. பாசத்துக்காக பெரிதும் ஏங்கிய விழிகளை அஸ்லம் ஊடுருவினான். "உங்க உம்மா இல்லடா." "ஏன் வேற எங்கயாவதும் தேடிப் பாரன்." பார்க்க ஏலாடா." "ஏண்டா?" "அவ பார்க்க முடியாத இடத்துக்கு போய்ட்டா, பள்ளியாலதான் அடக்கினாங்க." பாறூக் சிறைக் கம்பிகளை இறுக்கினான். பலம்கொண்ட மட்டும் தலையை மோதினான். மதம் கொண்ட யானையாய் சாமான்களை போட்டுடைத்தான். பின், வானத்தை வெறித்தான். ஒற்றையாய் நிலா உலாப் போக கறுப்பு மேகம் அதனை மூடிக் கொண்டிருந்தது.

## கூத்தரித்த டி ஜோக்ஸ்

கழுதை 1: வயித்துக்குள்ள யாரோ சண்டை போடுறமாதிரி இருக்கு.

கழுதை 2: தேர்தல் போஸ்டர் தின்னியா?

▫▫

மாப்பிள்ளை வீட்டார்: பெண்ணுக்குப் பாடத் தெரியுமா?

பெண்ணின் தகப்பன்: இல்லீங்க.

மாப்பிள்ளை வீட்டார்: அப்ப சீதனத்தில் ஒரு ரூன் இன் வன் செட்டையும் சேத்துக்குங்க.

▫▫

ஒருவர்: தபால் ஸ்டிரைக் இன்னும் ரெண்டு நாள் நீடிச்சுத் தொலைச்சிருக்கக் கூடாதா? அதற்குள்ள முடிச்சுத் தொலைச்சுட்டாங்களே?

மற்றவர்: உனக்கென்ன வேதனை?

ஒருவர்: என் பெண் கல்யாண பத்திரிகை கிடைச்ச விருந்தினர் கூட்டம் வந்திருக்கே.

▫▫

கணவன்: நான் ஊர் போய்ச் சேர்ந்ததும் லெட்டர் போடுறன்.

மனைவி: லெட்டருக்கு என்ன அவசரம்? மணி ஓடரை முதலில் அனுப்புங்க.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கள்ளிலே இல்லாத ஒன்று

நதியின் மடிமீது தவழ காத்திருந்தது படகு.

படகில் நதி கடந்து அக்கரை செல்ல காத்திருந்தனர் பயணிகள்.

"என்னப்பா சேது! இனி புறப்படலாமா நாங்கள்?"

படகின் மையத்தில் அமர்ந்திருந்து; வெற்றிலைச் சிவப்பு ஏறிய வாய் திறந்து வயோதிபர் கேட்டார்.

சேது என்று அவரால் அழைக்கப்பட்ட சேதுராமன் அதற்கு பதில் சொல்லாமல் அவரை ஒருமுறை பார்த்துவிட்டு, முகம் திருப்பிக்கொண்டான்.

இனியும் கேட்டால் எரிந்து விழுவான் என்று தெரிந்து வினா தொடுத்த வயோதிபர் வெற்றிலை பாக்கின் சுவையறிவதில் ஆர்வமானார்.

மற்றவர்கள் எதுவும் கேட்கவில்லை. அநேகமாக எல்லோருமே தினமும் சேதுராமனின் படகில் பயணம் செய்பவர்கள்.

குணசீலி வராமல் சேதுராமன் துடுப்பில் கை தொடமாட்டான் என்று தெரியும்.

எனவே-எல்லோரும் குணசீலி விரைவில் வரமாட்டாளா என்று விரும்பத் தொடங்கினார்கள்.

சேதுராமன் குணசீலியை நேசிக்கிறான். அந்த நேசத்தால் தேடுகிறான்.

பயணிகளோ தங்கள் நேரம் போக்கக் கூடாதே என்பதால் தேடினார்கள்.

எல்லோரும் தேடிய குணசீலி அதோ....அதோ பாருங்கள் வருகிறாள்.

தலையிலே பூக்கூடை சுமந்து அந்த பூக்கூடையிலே இருக்கும் பூக்களும் தோற்றுவிடும் புன்னகையை இதழ்களிலே சுமந்து வருகிறாள்.

தலையிலே சுமந்த பூக்கூடையை இரு கரங்களும் உயர்த்தி தாங்கி வருவதால் மேலாடைத் திரைக்குள் மறைந்து கிடக்கும் இரு அழகுகளும் எங்களையும் உயரவிடு என்று சொல்வதுபோல உயர்ந்தும்,-

படகு காத்திருக்கிறது; எனக்காக சேது தாமதிப்பதால் பயணிகள் கோபப்படப் போகிறார்களே என்ற நினைப்பில் அவள் நடையில் வேகம் ஏற்றியதால், அந்த அழகுகள் இரண்டும் சின்ன சின்னத் தள்ளல் போடவும்,-

## தருவது ரசிகன்

'அழகுப் பாரங்கள் போதாது என்று தலையிலும் பூக்கூடை வேறு. இத்தனை பாரத்தையும் தாங்கியிருக்க, முறிந்து போவேனே என்று என்னைப் பற்றி துளியும் கவலைப்படாமல் வேகமாக லாமோ நீ' என்று கேட்பதுபோல இடை துவண்டு கேட்பது போல அசைய,-

அதோ குணசீலி!

சேதுராமன் முகத்தில் சூரியன் உதயமானான்.

சூரியன் போனபின்னால்தானே நிலவு வரும். அது காலத்தின் நியதி.

நிலவைக் கண்டவுடன் இங்கே சூரியன் வந்தது எப்படி என்று இந்த இடத்தில் உங்களுக்கு கேள்வி வரும்.

இது காதலின் நியதி. பூகோள விதி வேறு...பூலோக காதலர் விதி வேறு.

குணசீலி படகில் ஏற முயல சேதுராமன் அவள் தலைப்பாரம் தன் கரம் கொடுத்து தாங்கி இறக்கி வைத்தான்.

பூக்கூடையை வாங்கி படகில் இறக்கி வைத்தான். முன்னரே தன் இதயத்தை அந்த பூவையின் மனக்கூடையில் அன்றோ இறக்கிவைத்துவிட்டான்.

குணசீலி யாருக்கும் தெரியாமல் சேதுராமனுக்கு தன் விழிகளால் நன்றி சொன்னாள். தன் இதய மகிழ்ச்சி சொன்னாள்.

துடுப்பு வலித்தன சேதுவின் கரங்கள். நதியின் மடிமீது தவழ்ந்தது படகு.

படகுக்குள் இருந்த பயணிகளில் ஒருத்தி



குறும்புக்காரி.

அவள் திரும்பி தன் தோழியிடம் காதோடு சொல்வது போல சொன்னாள்:

"குணசீலி கெட்டிக்காரியடி. வழித் துணையாக இருப்பவனையே வாழ்க்கைத் துணையாகவும் வரிக்கப்போகிறாள்."

காதோடு சொன்னபோதும். அது குணசீலிக்கும் கேட்கவே செய்தது.

அவள் சேதுவை ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டாள்.

அவனோ அவளை பார்க்காதது போல

## இலக்கிய நயம்

பார்த்துக்கொண்டிருந்தான். இரசிக்காதது போல இரசித்துக்கொண்டிருந்தான்.

துடுப்பு வலித்து உரம்பெற்ற கரங்கள். வெய்யில் பட்டுப்பட்டு உலையில் இட்ட இரும்பாக கறுத்தும், இறுகியும், உறுதியாகவும் தெரிந்த மேனி, சலனமேயில்லாத தெளிவான பார்வை கொண்ட விழிகள், அழகான வயிறு, வைரம் பாய்ந்த கால்கள், காதுவரை நீண்டு முன்னே தாழ்ந்த கன்னம், அடர்த்தியாய் அடக்கமாய் ஆண்மை சொல்லும் மீசை.

சேதுவை பார்த்துக்கொண்டே இருக்கலாம் எத்தனை யுகங்களும்! குணசீலியிடம் இருந்து மெல்ல ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

தன்னிடம் இருந்து வெளிப்பட்ட பெருமூச்சு தன் மனக் கிளர்ச்சியை மற்றவர் அறிய வைத்துவிட்டதோ என்று வெட்கப்பட்டாள் குணசீலி.

வெட்கப்பட்டபடியே படகில் இருந்தவர்களை பார்த்துக்கொண்டாள்.

யாரும் கவனிக்கவில்லை. அப்பாடா! குணசீலிக்கு நிம்மதியாக இருந்தது.

துடுப்பை வலிக்க நீர் விலகிப் பிரிந்து வழி தந்து படகு விரைய பயணம் சுகமாக இருந்தது.

சேதுராமன் படகில் இருந்தவர்களை கவனித்தான். அவர்களோ நதியின் அழகையும், நீல வானத் திரையின் முன்னால் பறந்து செல்லும் பட்சிகளையும் பார்த்து இரசித்தபடி இருந்தனர்.

இப்போது சேதுராமன் குணசீலியைத் துணிச்சலாக நோக்கினான்.

இதுவரை அவனை நோக்கிக் கொண்டிருந்த குணசீலியின் விழிகள் அவன் விழிகள் தன் மேல் திரும்பியது கண்டு வேறெங்கோ நோக்குதல்போல் பாவனை செய்தன.

யாரும் போதனை செய்யத் தேவையில்லை. காதலில் இந்தப் பாவனைகள் பாவைக்கும், காளைக்கும் தானாகவே வந்துவிடுகின்றன.

தன்னையே அவள் நோக்கியபடி இருந்தது சேதுவுக்கு பிடித்திருந்தது.

பிரியமான பெண் தன்மீது கவனமாயிருக்கிறாள் என்பது ஆணுக்கு இனிமை தரும்.

பெண் கவனித்தபடி இருக்க ஆண் தன் ஒவ்வொரு அசைவிலும் ஒழுங்காய், நளினமாய் இருக்க நினைக்கும் போதில் செய்யும் காரியம் சிறப்புப் பெறும்.

சேது துடிப்புக்களை வேகமாய் வலித்தான்.

'பார் இது என் பலம்' என்று பெண்ணுக்கு உணர்த்த நினைப்பது ஆணின் குணம்.

பெண்ணும் அந்தப் பலம் விரும்பி கிறங்குவதும் காதலில் இனிது தரும்.

சேதுவின் மனதில் சர்க்கரைப் பந்தல். கற்பனை எறும்புகள் அந்தப் பந்தலுக்குள் புகுந்து மொய்த்தன. இனிய சுவை உணர்ந்தான்.

அழகிய தோள்களும், மெல்லிய இடையும், மின்னல் வீசித் தாக்கும் விழிகளும், கன்னல் மொழி தரும்- கிள்ளாமல் சிவந்திருக்கும் இதழ்களும் சேதுவை- சேதுவின் மனதை நதிமீது செல்லும் அந்த படகு போலவே அசைத்து ஆடவைத்துக் கொண்டிருந்தன.

படகில் குணசீலிமட்டும் தன்னோடு தனித்து இருந்திருந்தால் சேது அவளை தன்னோடு சேர்த்தணைத்திருப்பான்.

வீசிய காற்று குணசீலியின் மேலாடையை தொட்டுவிட்டு விலகிச் செல்ல, சேதுவின் விழிகள் விரிந்து போயின.

சேதுவுக்கு தவிப்பாக இருந்தது, நீரைக் கிழிக்கும் துடுப்பினைப்போல,-

'என் கவனத்தை கிழித்துவிடும் இவளது அழகுச் செருக்குகள் இந்தப்பாடு படுத்து கின்றனவே என்று நினைத்தான்.

துடுப்பை தூக்கி எறிந்துவிட்டு துடுக்கான அழகுகளுக்கு பாடம் புகட்டலாமோ என்று ஒரு கணம் நினைத்தான்.

மறுகணம் 'சே..ச்..சே... காதலும் கைபட வேண்டும். கடமையும் கைவிடப்படாத உறுதியும் வேண்டும்' என்று நினைத்தான்.

குணசீலியும் அடிக்கடி அவனைப் பார்ப்பதும், விழிகளில் ஆசை வழிய அவன் முகம் விழுங்குவதும், அவன் மேனிமீது ஆசை அம்பு தொடுப்பதுமாய் இருந்தாள்.

சேதுவோ போதையுண்டவன்போல் 'இந்த கோதை என்னை போட்டு வதைக்கிறாளே' என்று நினைத்தான்.

மறு நொடியோ 'இல்லையில்லை போதை தரும் வெறிக்கு இந்த அழகுக் கோதையைக் காணும்போது எற்படும் உணர்வினுக்கு ஒப்பிட முடியாது' என்று தன் முதல் நினைப்பை தானே மறுதலித்தான்.

'காணும்போதும், நினைக்கும்போதும் போதையால் மனதை மயக்க முடியுமா? முடியாதே! உண்ணாதபோது போதை கிறங்கவைக்குமா? வைக்காதே! கள்ளை நினைத்தால் யாருக்காவது வெறி வருமா? மகிழ்ச்சிதான் வருமா? வராதே!



'ஆனால் விரும்பிய பெண்ணை ஆசையோடு நினைத்தால் அத்தனையும் வருகிறதே! அடடே என்னே ஆச்சரியம்! இதைத்தான் திருவள்ளுவர் சொல்லி வைத்துப் போனாரோ?' சேது ஒரு குறளை மனதில் நினைத்து அதன் கருத்தை ஆமோதித்தான்.

அந்தக் குறள் இதுதான்:

**"உள்ளக் களித்தலும் காணமகிழ்தலும்**
**கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு"**

குறள்- 1281-அதிகாரம்- 129

## குறுக்கெழுத்துப் போட்டி இல—58

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | | 3 |
| | ■ | 4 | | | ■ | |
| 5 | 6 | | | ■ | 7 | |
| | | ■ | 8 | 9 | | |
| | ■ | 10 | ■ | | ■ | ■ |
| ■ | 11 | | | | | 12 |
| 13 | | | ■ | | ■ | |

### இடமிருந்து வலம்

1. தகுதி இல்லாதவர்கள் வாக்குக்கேட்பது இது கேட்பது போல்தான் இருக்கும்.
2. சூரியனுக்கு இப்படியும் ஒரு பெயர்.
4. பழைய சம்பிரதாயப்படி இவர்களை வீட்டைவிட்டு வெளியேவர அனுமதிக்க மாட்டார்கள்.
5. இதுவும் உடலுக்கு எதிரிதான்.
7. இது கெட்டபின்தான் சிலருக்கு சூரிய நமஸ்கார எண்ணமே வருகிறது.
8. இவர் ஒரு பிரபல விஞ்ஞானி (திரும்பியிருக்கிறது)
11. இவ்வார ரசிகனின் கதையில் இதோடு சம்பந்தப்பட்டதும் உண்டு.
13. நம் மலையகத்தில் இதைக் காணலாம்.

### மேலிருந்து கீழ்

1. தற்போது நாடெங்கும் நடந்து கொண்டிருக்கிறது.
2. துறவிகள் போல் நடிப்பவர்கள் எல்லாம் இப்படி ஆகிவிட முடியாது.
3. இது கொலை விழும் நாடு.
6. இதன் பலன்கள் முரசில் வெளி வருகின்றன.
9. தேர்தல் வந்தால் அரசியல் கட்சிகளுக்குள் இதுவும் அதிகரிக்கும்.
10. இது பலவித வடிவங்களில் வந்து விட்டது.
12. இது இல்லாவிட்டால் விளக்கும் வெளிச்சம் தராது.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 23.07.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-58**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

*சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.*

### குறுக்கெழுத்துப் போட்டி இல-56க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பூ | 2 க | ம் | 3 ப | ம் | ■ | 4 கு |
| ஞா | ரு | ■ | 5 க | ரு | 6 வா | டு |
| ல் | ம | ■ | ல | ■ | ட | மி |
| ■ | ம் | ■ | வ | ■ | கை | ■ |
| 7 செ | ■ | 8 ந | ன் | றி | ■ | 9 வி |
| 10 ல | 11 வ | ன் | ■ | ■ | 12 சீ | னா |
| வு | லி | ■ | 13 தே | ரோ | ட் | டி |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.56இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. மா.கோகுலன் கொழும்பு-10.
2. செல்வி.எஸ்.பாலகுமாரி ராகலை.
3. ஆ.ரகுநாத் குருநாகல்.
4. செல்வி.எவ்.ரஸ்கா அஸ்மி சாய்ந்தமருது–07.
5. வ.சந்திரசேகரன் அவிசாவளை.
6. ஏ.எல்.பசீர் கல்முனை.
7. எஸ்.விஜயகுமார் கண்டி.
8. செல்வி.பி.அகலிகை மட்டக்களப்பு.
9. செல்வன்.பி.மக்ஸிமின் வவுனியா.
10. ஹுஸைன் மௌலானா பாணந்துறை.

**இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.**

## சுவாரசிய தேர்தல் செய்திகள்

### கட்சி மாறிய பட்சி! வன்னியில் போடுகிறார் போட்டி!

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் அமைச்சராக இருந்தவர் அபு யூசுப்.

இவர் முன்னர் கம்யுனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்தவர்.

பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்போடு இணைந்து மாகாண சபை அமைச்சராக இருந்து நன்றாக அனுபவித்தவர்.

பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பினரோடு ஏதோ கணக்கு வழக்கு கசமுசாவால் பிரச்சனை ஏற்பட அங்கிருந்து , பிரிந்து தனிக்கட்சி தொடங்கினார்.

வியாபாரம் நடக்கவில்லை. கடையை மூடிவிட்டு தனது சொந்த வியாபார விடயங்களைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

இப்போது வன்னி மாவட்டத்தில் புளொட், ரெலோ, ஈரோஸ் கூட்டுப் பட்டியலில் இவரது பெயரும் காணப் படுகிறது.

வன்னியில் உள்ள முஸ்லிம்களது வாக்குளை அள்ளித் தருவேன் என்று இவர் கூறியதால்தான் பட்டியலில் இடம் கிடைத்ததாம். ஆனால்- வன்னி மாவட்ட முஸ்லிம்கள் அபு யூசுப் என்றால் யார் அவர்? என்று கேட்கிறார்கள்.

### மட்டக்களப்பில் கூட்டணிக் கூட்டம் புளொட் மீது பரா கண்டனம்

மட்டக்களப்பில் கடந்த பத்தாம் திகதி நடந்த கூட்டணியின் பிரசாரக் கூட்டத்தின் இடையே புளொட் அமைப்பினர் புகுந்து துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரை நோக்கி கேள்விகளும், கண்டனங்களும் பிரசுரத்தில் காணப்பட்டன.

பிரசுரத்தை வாங்கிப் பார்த்த மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் பரராஜசிங்கம் பின்னர் கூட்டத்தில் உரையாற்றும்போது, இவர்கள் பருப்பு இனி இங்கே வேகாது என்று சற்று உணர்ச்சிவசப் பட்டது மாதிரி பேசினார்.

ஆறாம் மாதம் அச்சடிக்கப்பட்ட பிரசுரத்தை இதுவரை மக்களுக்கு வழங்காமல் இப்போது ஏன் கொண்டுவந்து தருகிறார்கள் என்று அவர் கேட்டார்.

இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

கூட்டணித் தலைவர் திரு.சிவசிதம்பரம் இயக்கங்கள் மீது கடும் வெறுப்பு தனக்கிருப்பது போல பேசிய போதும், திரு.நீலன் திருச்செல்வம் இயக்கங்களை சாடாமல் தன் உரையை முடித்துக்கொண்டார்.

### தர்ம அடி பல வாங்கியவர் திருமலையில்

கொழும்பில் தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற பெயரில் அப்பாவித் தமிழர்களை மிரட்டியும், இயக்கங்களது பெயரைப் பாவித்தும் தர்ம அடி வாங்கிய பிருந்தநாத் (சூட்டா) பற்றி ஏற்கனவே முரசில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இவர் தற்போது தனது தர்ம அடி வாங்கிய சாதனை மூலமாக திருமலையில் ஒரு வேட்பாளராக போட்டியிடுகிறார். இவருக்கு ஆசனம் கொடுத்துள்ள கட்சி ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்பது குறிப்பிடத் தக்கது.

### டெக் திருடரும் தேர்தலில்

திருமலையில் போட்டியிடும் சுயேச்சைக் குழு ஒன்றில் 'காத்தான்' என்றழைக்கப்படும் ஒரு நபரும் இருக்கிறார். இவரது சமீபகால சாதனை வாடகைக்கு எடுத்த இரண்டு ரி.வி டெக்குகளை தன் சொந்தப் பொருளாக நினைத்து விலைபேசி விற்றது. இவர் திருமலையில் 10ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்.

இவர் ஏற்கனவே இருந்த அமைப்புக்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி. மறுபடி ஈ.பி.ஆர்.எல்.எஃப். மீண்டும் ஈ.பி.டி.பி.யில் சேர முயற்சி. அது மறுக்கப்பட ஈ.பி.ஆர்.எல்.எஃப் பட்டியலில் ஒரு ஆசனம் கேட்டு அதுவும் நிறைவேறாமல் போகவே இறுதியில் சுய இச்சை குழு. வாழ்க சனநாயகம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இடமில்லை ஐயா சிறை அறையில்!

## எடை கூடிய குற்றவாளியும் இடநெருக்கடியும்!!

பல ஏமாற்று, மோசடிகளைச் செய்தமைக்காக குற்றவாளியாகக் கண்டு 3 ஆண்டுச் சிறைத்தண்டனை பெற்றவர் ஜொனி ஆஷ்லே. இவருடைய எடை 850 இறாத்தல். அத்துடன் மிகவும் பெருத்த உடம்பு. இதனால் இவரை சிறைக்குள் அனுமதிக்க முடியாதென சிறை அதிகாரிகள் கூறி விட்டனர். ஆஷ்லே இப்பொழுது சுதந்திரப் பறவைதான். எனினும் பொலிசாரால் இரவு.பகல் 24மணி நேரமும் கண்காணிக்கப் படுகிறார்.

'கிறெடிற்காட்' எனப்படும் கடன் அட்டைகளை வைத்து மோசடி செய்வதில் ஆஷ்லே அசகாயசூரர் என்று கண்டு பிடிக்கப்பட்டது. இத்தகைய மோசடி களுக்கெல்லாம் திட்டமிடும் சூத்திரதாரியான அந்தனி பேக்மன் (வயது 29) 15 வருடச் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறான். இவன் சிறைக்குள் இருந்த வண்ணமே ஆஷ்லே மூலம் தனது மோசடி வர்த்தகத்தைத் தொடர்ந்து நடத்தி வந்துள்ளான். சிறையில் கைதிகளுக்கு அளவு தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்த அனுமதி உண்டு. இந்தச் சலுகையினைப் பயன்படுத்தி பேக்மன் சில வர்த்தக நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, பெரிய பணக்காரப் புள்ளிகளின் கடன் அட்டைகளின் இலக்கங்களைப் பயன்படுத்தி ஏராளமான பொருட்களை ஓரிடத்தில் கொள்முதல் செய்து பிறிதோரிடத்தில் விற்பனை செய்துவந்தான். சிறைக்குள் இருந்த வண்ணம்-தொலைபேசியினூடாக நடைபெறும் இந்த வியாபாரத்துக்கு உடந்தையாக ஆஷ்லே செயற்பட்டுள்ளான்.

கடந்த வருடம் மட்டும் பேக்மன் 140,000 டொலர் பெறுமதியான பண்டங்களை இத்தகைய மோசடி மூலம் விற்றுப் பணம் பெற்றிருக்கிறான். இம்மோசடி கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆஷ்லே பொலிசாரிடம் மாட்டிக்கொண்டான். இவனை எந்த மோட்டாரிலும் ஏற்றி பொலிஸ் நிலையத்துக்கோ நீதிமன்றத் துக்கோ கொண்டுபோக முடியாத பொலி சார் தனியானதொரு பார வண்டியினை ஏற்பாடு செய்யவேண்டியிருந்தது.

நீதிமன்ற விசாரணைகளின்போது நீதிமன்ற கதவுகளுக்குள் ஆஷ்லேயை அழைத்துச் செல்ல முடியவில்லை. இதனால் தனியான- விசாலமான கதவு கொண்ட ஒரு தனியிடத்தில் விசாரணை நடைபெற்றது.

குற்றவாளிக் கூண்டுக்குள் ஆஷ்லேயால் நீண்டநேரம் நின்றுகொண்டிருக்க முடியாதமையினால் சரக்குகளைக்கொண்டு செல்லும் இழுவை வண்டி ஒன்று நீதிமன்றத்துக்குள் கொண்டு வரப்பட்டு அதில் ஆஷ்லே இருப்பதற்கு வசதி செய்யப்பட்டது.

வழக்கை நெறிப்படுத்திய உதவி அரச வழக்குத் தொடுநர் ஃபெயித் லிற்வாக், "ஆஷ்லே பெற்ற தண்டனையை அவர் சிறையிலேயே கழித்தாக வேண்டும். அவருடைய உடல் பருமனைக் காரணம் காட்டி சிறையிலிருந்து வெளியேபோக அனுமதிக்க முடியாது" என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

ஃபுளொரிடாவிலுள்ள சென் லூசி கவுண்டி சிறை அதிகாரிகள் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறுகின்றனர்.






## அட...காரானது மரத்தின் மேலே!

கனவேகத்தில் வீசிய புயல் காற்று இந்த வண்டியை வானவீதியில் இழுத்துச் சென்று இம்மரத்தில் பொறுக்க வைத்திருக்கலாம் என்று வாசகர்கள் அனுமானிக்கலாம். ஆனால் அது தவறு. 1959ம் ஆண்டு மொடல் 'செவி பிக்கப் வானான இதனை இதன் உரிமையாளரான மார்க் மாட்சன் மிகச் சிரமப்பட்டு மேலே உயர்த்தி மரத்தின் கிளைகளுள் பொறுக்க வைத்திருக்கிறார். அரை தொன் எடையுள்ள இவ்வண்டி மாட்சன்னின் மகன் லிழுக்கின் வசிப்பிடமாக மாறிவிட்டது.

இது அமெரிக்க சஞ்சிகை ஒன்றின் புகைப்படப் போட்டியில் பரிசு பெற்ற படம்.



## பிரபலங்களின் மறுபக்கம்

# மாயக் கடலில் ஒரு புதிர்

### முன்னாள் தமிழக டி.ஜி.பி. மோகன்தாஸ் எழுதிய 'எம்ஜியார்: நிஜமும் நிழலும்' எனும் நூல் தந்த தகவல்.

எம்ஜியாருக்கு சில பெண் தோழிகள் இருந்தது பொதுவாக தெரிந்ததே. யாருக் குத்தான் இல்லை? ஆனால் அவர் இதை மறைக்கவில்லை. உதாரணமாக- புது டெல்லியில் 'ஏசியட்' என்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடந்தபோது (1982) ஜானகி, ஜெயலலிதா இருவரையும் இருபுறத்திலும் வைத்துக்கொண்டு எம்ஜியார் விளையாட்டுப் போட்டிகளைக் கண்டுகளித்தார். அந்தப் புகைப்படம் அப்போது பல பத்திரிகை களில் வெளிவந்தது.

ஜானகி இந்தத் தோழிகளை இயல்பாக ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் அவர்கள் பலரிடம் நட்பும் பாராட்டினார். அவர்களும் அவரை அன்புடன் 'அக்கா' என்று அழைத்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவரை மட்டும் ஜானகி வெறுத்தார். காரணம் அந்தப் பெண்மணியிடம் அரசியல் வேட்கை, குயுக்தி, ஆதிக்க மனப்பான்மை, ஆணவம் ஆகியவை இருந்தன என்பதே.

பிரமுகர்களுக்குப் பெண் தோழிகள் என்பது அதிசயமல்ல. பண்டித ஜவஹர்லால் நேருவுக்கும் மவுன்ட்பேட்டன் சீமாட்டிக்கும் இடையே தோழமை இருந்ததாக வதந்திகள் நிலவியது உண்டு. புகழ்பெற்ற எழுத்தாளர்கள் அதுபற்றி புத்தகங்களிலும் கட்டுரைகளிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'கெய்ஷா' பெண்கள் உறவை ஜப்பானியப் பிரதமர்கள் வெளிப் படையாகவே நாடியிருக்கிறார்கள். நான் இந்த வழக்கத்தை நியாயப்படுத்தவில்லை; அந்தப் பட்டியலிலும் எம்ஜியாரைச் சேர்க்கவில்லை. எனது எண்ணம் அது அல்ல. ஆனால் காலப்போக்கிற்கேற்ப ஒழுக்க நெறிமுறை களும் மாறிவருகின்றன என்று சொல்ல வருகிறேன்.

மேல் நிலையில் உள்ள அரசியல் வாதிகள், வர்த்தகர்கள், அதிகாரிகள், நிர்வாகி கள் ஒரு நாளைக்கு 18 மணி நேரம் உழைக்கிறார்கள்; அதுவும் படபடப்புடன். சிலருக்கு அந்தக் கடின உழைப்புக்குப் பின் மன மாறுதலாக ஓய்வு என்பது பெண்களின் தோழமையே என்றாகிவிடுகிறது.

கேரளத்தில் நடுத்தர வர்க்கத்திற்கும் கீழான ஒரு குடும்பத்தில் பிறந்தவர் எம்ஜியார். 1917-ல் என்று விபரமறிந்த சிலர் சொல் கிறார்கள். பலர் 1911ம் ஆண்டு பிறந்தவர் என்கிறார்கள். தெளிவாகத் தெரியவராத சில குடும்பச் சூழ்நிலைகளின் காரணமாக எம்ஜியாரின் தாயார் சத்யபாமா சிறுவர்களாக இருந்த எம்ஜியாரையும், மூத்த மகனான எம்.ஜி.சக்ரபாணியையும் அழைத்துக் கொண்டு, பிழைப்புக்கு வழி தேடி இலங்கை செல்ல வேண்டியதாயிற்று. பின்னர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தின் கும்பகோணம் நகருக்குக் குடிபெயர்ந்தார்கள்.

அப்போது அவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்ததால் எம்ஜியாருக்கு பள்ளிக்கூடப் படிப்பு படிக்க வசதியில்லை. ஒழுங்காகச் சாப்பாடும் இல்லை. எனவே மிகவும் சிறிய வயதிலேயே வயிற்றுப்பாட்டுக் காக அவர் நாடகங்களில் நடிக்கவேண்டிய தாயிற்று.. திறமை எங்கிருந்தாலும் அதைத் தேடிக் கண்டுபிடித்துப் பயன்படுத்திக்கொள்ப வர்கள் எம்ஜியாரைத் திரைப்படத்துறைக்கு அழைத்துச் சென்றார்கள். அன்று அந்த துறையில் காலடி எடுத்து வைத்தவர், வாழ் நாள் முழுவதும் வருத்தத்திற்கு இடமில்லா மல் வாழ்ந்தார். களையான முகம், கடுமையான உழைப்பு, உறுதியான கொள்கை, தடை களையும் பகைவர்களையும் இயல்பாகவே வெற்றிகொள்ளும் தன்மை ஆகியவற்றினால் அவர் திரைப்படத்துறையில் முதலிடத்தைப் பிடித்தார்.

எம்ஜியாரின் வாழ்க்கை என்பது மாயக் கடலில் மிதந்த ஒரு அற்புதமான புதிர் போன்றது. அவரது பேச்சிலும், செயல் பாட்டிலும் எத்தனையோ முரண்பாடுகள் இருந்தன. ஆனால் பொது மக்கள் அது பற்றியெல்லாம் கவலைப்படவே இல்லை. 'நல்லதையே செய்பவர்' என்ற தன்னைப் பற்றிய அபிப்பிராயம் தொடர வேண்டும் என்பதற்காக, தான் நடித்த படங்களின் காட்சிகள், பாடல்கள், மற்றும் அனைத்திலும் அவரே நுணுக்கமாக கவனம் செலுத்தினார். இதே திட்டமிடலை, செயல்பாட்டினை அவர் அரசியலிலும், நிர்வாகத் துறையிலும் தொடர்ந்து கடைப்பிடித்தார்.

அவர் சொன்ன 'அண்ணாயிசம்' என்ற கொள்கை பலரைத் திணற அடித்து வீழ்த்தியது. அண்ணாயிசம் என்றால் அது கம்யூனிசம், சோஷலிசம், முதலாளித்துவம் எல்லாம் கலந்தது என்றாரே பார்க்கலாம்!

## மகாபாரதம்

இவ்வாரம் எம்.ரி.வி.யில் ஒளிபரப் பாகும் மகாபாரதத் தொடரின் கதை வசனம் முரசில் கடந்தவாரமே வெளி வந்துவிட்டது. அடுத்தவாரம் முரசில் மகாபாரதம் தொடர் தொடரும்.

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்



பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மினுமினுப் பேசுகின்றன...

436331

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11





Kala



JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

433686

61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11






நம்மவரும் சளைத்தவரல்ல

## பார்க்க முடியவில்லை

கொழும்பு வெள்ளவத்தைக் கடற்கரையில் கடலில் வாழ்ந்து சலித்து ஒதுங்கிய திமிங்கிலம்தான் இது.

திமிங்கிலம் பார்க்க நிறையப்பேர் வந்து கூடிவிட்டார்கள். அவர்களை பார்க்க திமிங்கிலத்தால் முடியவில்லை.

அது செத்துவிட்டது.

கமராவில் பதிவு செய்து அனுப்பியது வசந்தன்-வெள்ளவத்தை.

முரசு 50ல் கிழக்கே ஒரு கால் மேற்கே ஒரு கால் வைத்து முழங்காலில் நடந்து சாதனை படைத்த வெள்ளை காரரின் படத்தை வெளியிட்டிருந்தோம். இங்கே கறுப்பு வெள்ளையில் உள்ள படம் முடியுமானால் இவரைப்போல் முயற்சித்து படம் எடுத்து அனுப்புமாறு கேட்டிருந்தோம். உடனே முயற்சியில் இறங்கிவிட்டார் நம் தீவிர வாசகர் எஸ்.ஏ.எம்.சியாம்.

முயற்சி பலித்தது. இதோ படத்தில் இருக்கிறார் பாருங்கள் நம் சாதனை வாசகர் சியாம். கைகொடுங்கள் சியாம்.

சாதிக்க நினைத்தால் சமுத்திரமும் முழங்கால் அளவுதான்.

அதை நிரூபித்து விட்டார் நம் வாசகர். சியாம் புத்தளத்தைச் சேர்ந்தவர்.

## ஓங்கி ஒரு போடு





ஹொங்கொங்கிலும் ஒரு ஹொலிவூட் ஸ்டுடியோ திறக்கப்பட்டுள்ளது. திறப்பு விழாவுக்கு அழைக்கப்பட்டவர் ஹொலிவூட்டின் வசூல் மன்னன் ரம்போ புகழ் சில்வெஸ்டர் ஸ்ரலோன். வீரத் தீரதாரர்கள் என்னும் அவரது இமேஜ் குறையக் கூடாது என்றுதானோ என்னவோ, நீண்ட பெரிய வாள் ஒன்றை அவரிடம் கொடுத்து கேக்வெட்டச் சொன்னார்கள் திறப்பு விழா நடத்தியவர்கள்.

## பூவைக்கு பூவாடை அழகு!

## வசதியான இருக்கை



குடிப்பதற்கு ஒரு இடமிருந்தால் இளம் வீட்டையே மறந்துவிடலாம். ஆனால் இவருக்கு தன் தலையில் இருக்கை கொடுத்து அமர்த்தியுள்ள அந்த பயிலவானை மறந்துவிடுவது நியாயமா? எதையும் தாங்கும் பெரிய உடல் என்பதால் இளம் அரவியாக மேலே இருந்து உன்னை தள்ளுவதையும் தாங்க வேண்டுமோ? தாங்கத்தான் வேண்டும். ஏன் என்றால் சாதனையாளர் என்று பார்ப்பவர்கள் பாராட்ட வேண்டுமே. அதற்குத்தான் அமெரிக்காவில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.



## தொலைந்த கனவு

10 வயதில் இருந்தே உதைபந்தாட்ட களத்தில் இறங்கிய காலன் மரடோனா விளையாடலை ஆர்ஜென்டினா அணி 94 உதைபந்தாட்ட உலகச் கிண்ணத்தை குறி வைத்து முன்னேறியது.

அந்த நேரம்தான் இடி விழுந்தது. வாழ்த்திய இரசிகர்கள் வசைபாட மரடோனா போதை மருந்துபாவித்த அவப்பெயரோடு அரங்கை விட்டு அப்புறப்படுத்தப்பட்டார். தொலைந்தது ஆர்ஜென்டினாவின் கனவு. அழுதது மரடோனா மட்டுமல்ல இரசிகர்களுந்தான்.



## முரசு தரும் விசேஷ விருந்து

# இறைச்சிப் பொரியல்

சதா சோறும் கறியும் என்று உண்டு வெறுப்புற்றிருக்கும் நமது வாசகர்களுக்கு மேல் நாட்டுப் பாணியிலான - நாக்குக்குச் சுவை தரும் சில பதார்த்தங்களைத் தயாரித்து உண்ண வாய்ப்பளிக்கிறோம். இன்று நாம் தருவது ஃபிரான்ஸ் நாட்டு இறைச்சிப் பொரியல்.



**தேவையானவை**

முள்ளில்லாத ஆட்டிறைச்சி- 1 1/2 இறாத்தல்
ரொட்டி (பாண்)- 4 துண்டுகள்
கடுகு(அரைத்தூள்)- 2 தே.கரண்டி
தக்காளி சோஸ்- 20 தே.கரண்டி
சலாது இலை(பெரியது)-4
சலாது எண்ணை-பொரிப்பதற்கு அளவாக
உப்பு-(தூள்-அளவாக)

1. இறைச்சியைக் கழுவி 3/4 அங்குல உயரம் கொண்ட 4 துண்டுகளாக வெட்டி எடுக்கவும். அளவான சூட்டில் பொரிப்பதற்கேற்ற தட்டையான பாத்திரத்தை வைத்து சலாது எண்ணையில் இறைச்சித்துண்டுகளைப் பொரிக்கவும்-10நிமிடம்.
2. பாத்திரத்திலிருந்து துண்டுகளை வெளியே எடுத்து ஒவ்வொன்றின் ஒரு பக்கத்தில் மட்டும் தக்காளி சோஸ் (1 1/2 தே.கரண்டி) தடவவும். சோஸ் தடவிய பக்கம் பாத்திரத்தில் படத்தக்கதாக பாத்திரத்திலிட்டு மீண்டும் 30 நொடிகள் பொரிக்கவும். மேல் புறத்தில் (சோஸ் தடவப்படாத பக்கத்தில்) ஒவ்வொரு துண்டிலும் மீதம் 1 1/2 தே.கரண்டி சோஸ் தடவவும். அளவாக உப்புத் தூளையும் தூவிக்கொள்ளவும். மேலும் 30 நொடிகள் அடுப்பிலிருக்க விடவும்.
3. பாண் துண்டுகளை மெல்லியதாக ரோஸ்ட் பண்ணிக்கொள்ளவும். இவற்றின் மீது கடுகுத் தூளைத் தடவிக்கொள்ளவும். எஞ்சியுள்ள தக்காளி சோஸையும் தடவிய பின் இவற்றின்மீது ஒவ்வொரு சலாது இலையையும் பரப்பி அவற்றின்மீது பொரித்த இறைச்சித் துண்டுகளையும் வைத்துக்கொள்ளுங்கள்.

இப்பொழுது உண்பதற்கு உணவு ரெடி!